# உள்ளேன் அம்மா



ரா.கி.ரங்கராஜன்

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு - 2003

© ஆசிரியருக்கு

**விலை : ரூ.40-00**

**அல்லயன்ஸ் கம்பெனி**
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபால்பெட்டி எண்.617
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி - 24941314

37824
5477874

Typesetting : Amaravathi, Chennai - 83.
Printed by : Jai Ganesh Offset Printers, Chennai-4

## பதிப்புரை

இந்தப் புத்தகத்தின் முதல் வரியைப் படிக்கத் தொடங்கியவுடன் வேறு எந்த விதமான சிந்தனையும் ஒரு வாசகருக்குத் தோன்றாது. அடுத்தது என்ன? அடுத்தது என்ன? என்று நம்மை - பாசியில் பட்ட காலைப்போல - வேகமாக உள்ளே இழுத்துச் சென்று, விடுகிறது. இந்நூலாசிரியர் ரா.கி. ரங்கராஜன் கதையை மிக மிக அசாதாரண மாகக் கையாண்டுள்ளார். இந்தத் திறமை ரா.கி. ரங்கராஜன் அவர்களைத் தவிர, மற்றொருவரைத் தேடத்தான் வேண்டும். காதல், மாணவிகளின் நிலை, மனோ தத்துவம், வீட்டுச் சூழ்நிலை - எதையும் இவர் இந்த நாவலில் விட்டு வைக்காமல், பெரிய பெரிய திருப்பங்களுடன் சொல்லி யிருப்பது மிக அபாரம். ஆனால், ஒரே ஒரு குறை! நாவல் இவ்வளவு சீக்கிரத்தில் நிறைவு பெற்று விட்டதே என்றுதான். வாசகர்களே! நீங்களும் படித்து ரஸியுங்கள்.

*- பதிப்பகத்தார்*

## என்னுரை

கதைக்கு எந்தக் கருவை எடுத்துக் கொண்டாலும் அதற்குப் பின்னணியை கானவேணும் சரியானபப்படி காட்டவேண்டும் என்று எண்ணுகிறவன் நான். அதற்கான ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வேன். அப்படியும்கூட, பல சமயங்களில் ஏதேனும் தப்பாக எழுதிவிட்டு முட்டாள் பட்டம் கட்டிக் கொள்ளுவது உண்டு.

கதைக்கான பின்னணியைத் திகட்டித் தருவதில் அனேக நண்பர்கள் கைகொடுத்திருக்கிறார்கள். 'உள்ளேன் அம்மா' கதையில், பெண்கள் ஊடே கல்லூரி வரிவுயாளரைக் கதாநாயகியாக வைத்து எழுத ஆசைப்பட்டேன். நண்பர் எஸ். ரஜத் இதற்குப் பெரும் உதவி செய்தார். தனக்குத் தெரிந்த விரிவுரையாளரிடம் பேட்டிக் கண்டு விவரம் தந்தார். இந்தக் கதையில் ஏதேனும் சுவாரசியம் இருக்குமானால் அந்தப் பெருமை நண்பர் ரஜத்துக்கே சேரும்.

சரியாய் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட குறுநாவல் இப்போதுள்ள கல்லூரி சூழ்நிலைகள் எவ்வளவோ மாறியிருக்கும். அதற்காக அன்பு கூர்ந்து சிரிக்காதீர்கள்.

*ரா.கி. ரங்கராஜன்*

37824
5477874

## உள்ளேன் அம்மா

### 1

எவர் பேச்சையும் நான் கேட்கத் தயாராயில்லை. பாட்டி மன்றாடினாள். ''ஏண்டி சௌமி, இத்தனை நாளும் வக்கீலுக்குப் படிக்கப் போறேன்னு சொல்லிக் கொண்டு இருந்து விட்டு, இப்ப திடீர்னு வாத்தியாருக்குப் படிக்கப் போகிறேன்னு சொன்னால் என்ன அர்த்தம்? இப்படி உன் மனம் போகிறபடி யெல்லாம் பண்றதுக்கு இடம் கொடுக்கிறோம்னு உன் அம்மாவும் அப்பாவும் எங்கள் மண்டையைத்தானே உருட்டுவார்கள்?''

'அடடா! அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இந்தப் பொண்ணுமேலே எத்தனை அக்கறை!' என்று எண்ணிக் கொண்டேன். ''பாட்டி! அவங்க பாட்டுக்கு அம்பாலாவிலோ பாடியாலாவிலோ மிலிட்டரி ஓட்டலுக்குப் போய்ச் சிக்கன் பிரியாணி வெட்டிக் கொண்டு

உட்கார்ந்திருப்பாங்க. நான் கார்ப்பரேஷன் லாரியிலே குப்பை அள்ளிக் கொட்டுகிற வேலைக்குப் போனாலும் சரி, கிண்டி மாளிகையில் கவர்னர் பதவிக்குப் போனாலும் சரி, அவங்களுக்கு அக்கறை கிடையாது. கவலைப்படாதிங்க!'' என்றேன்.

தாத்தாவுக்கு, பாவம், ஏகப்பட்ட ஏமாற்றம். அவருடைய அப்பா அந்த நாளில் பெரிய வக்கீலாக இருந்தவராம். இவர் அந்த வழியில் போகாமல் அரசாங்க வேலைக்குப் போய் ஓய்வும் பெற்றுவிட்டார். தன் தகப்பனாரைப் போல நானாவது வரணும் என்று ஆசைப்பட்டார். குடும்பத்தில் முதல் பெண் வக்கீல் என்ற பெருமையை நான் அடைய வேண்டுமென்று விரும்பினார். நான் பி.ஏ. படித்ததுமே சட்டத்துக்குப் போக வேண்டும் என்றார். எம்.ஏ. படிக்கிறேன் என்று சொல்லி அதை முடித்தேன். மறுபடியும் மன்றாடினார். அப்போதும் பி.எல்.லுக்குப் போகாமல் எம். ஃபில் படித்து முடித்து, நித்தியா கல்லூரியில் பொருளாதார விரிவுரையாளர் வேலைக்கு மனுப் போட்டு, வெற்றியும் பெற்றுவிட்டேன்.

தாத்தாவுக்குக் கொஞ்சம் ஜோசியம் கிசியம் சமாசாரங்கள் வரும். ''இதோ பார், சௌமி. உன் ஜாதகப்படி நீ வக்கீலாய்த்தான் வருவேன்னு இருக்கு'' என்று பயமுறுத்திப் பார்த்தார்.

''அப்ப பேசாமல் இருங்கள். நான் வேறே என்ன முயற்சி செய்தாலும் வக்கீல் தொழிலுக்குத்தானே வந்து விழுந்தாகணும்?'' என்று மடக்கினேன்.

''அப்படி இல்லேம்மா. உனக்கு இப்ப ஜாதகம் பிரகாரம் தசாபுக்தி நன்றாயில்லை.....''



''அப்படியானால் இன்னும் கவலையை விடுங்கள். வாத்தியார் வேலை எனக்கு ஒத்து வராமல் போயிடும். பழையபடி வக்கீல் படிப்புக்கு வந்து விடுவேன்.''

தாத்தா ஒரு பெருமூச்சு விட்டு, தன் சிநேகிதர் இரும்புக்கடை கோவிந்தசாமிப் பிள்ளையைத் துணைக் கழைத்தார்.

அவர் வந்து, ''பாப்பா... வக்கீல் படிப்புன்னா எத்தனையோ பிரமாதமாய் முன்னுக்கு வரலாம். உன் கொள்ளுத் தாத்தா இரண்டு கையாலும் சம்பாதிச்சாராம். நீ சர் டி.முத்துசாமி ஐயர் மாதிரி ஜட்ஜாய்க்கூட வரலாமே? வாத்தியார் வேலைக்குப் போய் அந்த மாதிரி முன்னுக்கு வந்தவர்கள் யாராவது உண்டா?'' என்றார்

ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் பெயர் ஞாபகம் வந்தது. இருந்தாலும் வேண்டுமென்றே கண்ணை மூடிக் கொண்டு யோசித்துப் பார்த்து, ''உண்மைதான், மாமா! ஒருத்தருமே இல்லை!'' என்றேன்.

'பார்த்தீர்களா! எப்படி மடக்கிட்டேன் பாப் பாவை!' என்று மார் தட்டிக் கொள்கிற மாதிரி தாத்தாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு, கோவிந்தசாமிப் பிள்ளை, ''அப்படி ஒருத்தருமே முன்னுக்கு வந்திராத துறைக்குப் போய் நீ என்ன பண்ணப் போகிறே?'' என்றார்.

''நன்றாய் முன்னுக்கு வந்து, நீங்க இப்ப சொன்ன மாதிரி எதிர்காலத்திலே எவரும் சொல்ல முடியாதபடி செய்யப் போகிறேன்!'' என்றேன்.

அவருக்கு முகம் இறங்கிப் போயிற்று. தாத்தா விடம், ''சாமி! இது மகா பிடிவாதக்காரப் பிள்ளை. அதன்

வழிக்கே விட்டிடுங்க!'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

ஏன், நித்யா கல்லூரியில் பொருளாதார விரிவுரையாளர் வேலைக்குப் பேட்டி நடந்த போது கூட, மனசைத் தளர வைக்கிற மாதிரியான கேள்விகளைத் தான் கேட்டார்கள். ''எந்த ஊரில் போட்டாலும் வேலை செய்வாயா? இல்லை, மெட்றாஸ்தான் வேணும்னு இன்ஸிஸ்ட் பண்ணுவாயா?'' என்றார்கள். (மதுரையில் ஒன்றும் கோவையில் ஒன்றும் இதே நிர்வாகத்தின் கீழ் பெண்கள் கல்லூரிகள் இருந்தன.)

''எந்த ஊருக்கு வேண்டுமானாலும் போகத் தயாராயிருக்கிறேன்'' என்றேன்.

''உனக்கு ஒரு வருஷம் புரொபேஷனரி பீரியட். அதுவரை குறைந்த சம்பளம் தான் கிடைக்கும். யூனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன்படி கொடுப்பார்கள் என்று எதிர் பார்க்காதே'' என்று ஒரு புசுபுசு மீசைக்காரர் எச்சரிக்கை செய்தார்.

''எதிர்பார்க்க மாட்டேன் சார்'' என்று உறுதி கொடுத்தேன். கடைசியில் என் சினேகிதிகள்-

''ஏண்டி சௌமி, நித்யா காலேஜுக்கா வேலைக்குப் போகிறேன் என்கிறாய்? வேறு காலேஜ் கிடைக்கலியா? அது எப்பேர்ப்பட்ட ரௌடிப் பசங்க காலேஜ் என்கிறது மறந்து போச்சா?'' என்றாள் கல்யாணி. (நாங்கள் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு பாட்மின்ட்டன் டூர்ணமென்ட்டில் எங்கள் காலேஜுக்கும் நித்யா காலேஜுக்கும் தகராறு ஏற்பட்டு, நித்யா மாணவிகள் எங்கள் மாணவிகளை அடி அடியென்று



அடித்துப்போட்டு, போலீஸ் வரை கேஸ் போனதைத் தான் அவள் குறிப்பிட்டாள்.)

''ஏது ஒரே ஒரு சம்பவம். அதை வைத்து மொத்தக் காலேஜையும் எடை போடலாமா?'' என்று அவள் பேச்சை ஒதுக்கி விட்டேன்.

மணி ஒன்பது அடித்தது.

பாட்டி ஒரு பெருமூச்சுடன், ''நேரமாகிறதே, சௌமி, கிளம்பேன்! கையிலே டிபன் ஏதாவது கட்டி எடுத்துக் கொண்டு போகப் போறியா. என்ன பண்ணித் தரட்டும்?'' என்றாள்.

''எதுவும் வேண்டாம், பாட்டி. அங்கேயே கான்ட்டீனில் ஏதாவது பார்த்துக்கிறேன். இன்னைக்கு முதல் நாள் தானே?'' என்றேன்.

தாத்தா இன்னொரு பெருமூச்சுடன், ''ஹூம்! இன்னிக்குச் செவ்வாய்க் கிழமை. நட்சத்திரமும் நன்றாகவேயில்லை. ட்யூட்டியில் ஜாயின் ஆவதற்கு நாள் பார்த்தாள் பார்!'' என்று முனகினார்.

''நான் டிரெஸ் பண்ணிக் கொள்கிறேன் பாட்டி. வராதே'' என்று சின்ன அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டேன்.

ஏன் இத்தனை பிடிவாதமாய். இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுக்கிறாய் என்று யாரேனும் என்னைக் கேட்டால் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. ஒரு வேளை, மனத் தத்துவ ஆராய்ச்சி செய்து பார்த்தால், தாய்ப் பாலை விடத் தெரியாத குழந்தை மாதிரி, கல்லூரிச் சூழ்நிலையைத் துறக்கத் தெரியாத

மாணவியாகவே நான் இருந்தேனோ என்னவோ, விரிவுரையாளர் வேலைக்குத் தான் நான் போகப் போகிறேன் என்று சினேகிதிகளிடம் எப்போதோ ஒரு முறை அடித்துச் சொல்லியிருந்தேன். அதைக் காப்பாற்ற வேண்டும் என்ற வீம்பாகவும் இருக்கலாம்.

அண்ணாசாலையில் வீட்டுவசதி வாரியக் கட்டிடத்துக்கு எதிர்த்தாற்போல் நித்யா கல்லூரி. கட்டிடங்களைக் காட்டிலும் வெற்று மைதானம் தான் அதிகம் இருக்கிற மாதிரி ஒருதோற்றம். அவ்வளவு பரந்து விரிந்திருந்தது. மூன்றாம் வருஷம் நான் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தபோது என் சினேகிதி பிரபா தன் தங்கை அங்கே படிப்பதாகச் சொல்லி ஒரு முறை என்னை அழைத்துப் போயிருந்தாள். நீளமான வெராந்தாவில் பத்து நிமிடம் அவர்களுக்காகக் காத்திருந்ததைத் தவிர வேறு அறிமுகம் அந்தக் கல்லூரியுடன் எனக்குக் கிடையாது, பிறகு ஒரு முறை பேட்டிக்காகச் சென்றதைத் தவிர.

இன்று விரிவுரையாளராக அங்கே நுழைகிறேன்.

இந்த முதல் நாள், முதல் வகுப்பில் எப்படிப் பெயரெடுக்கிறேன் என்பதைப் பொறுத்துத் தான் என் எதிர்காலமே இருக்கிறது என்பதை நினைத்த போது உள்ளுக்குள் பதைப்பாக இருந்தது.

மாணவிகள் யாரும் என்னை லட்சியம் பண்ணக் காணோம். சிரிப்பும் குதூகலமும் நிறைந்த தனி உலகம் அவர்களுடையது. அவர்கள் பாட்டுக்கு அரட்டை அடித்துக் கொண்டு சென்றார்கள். விரிவுரையாளர் சிலர் என்னைக் கூர்ந்து நோக்கிவிட்டுப் போனார்கள். என்



உடைகள் கொஞ்சம் அதிகப்படியாக இருக்கிறதோ ஒரு வேளை என்று என்னை நானே ஒரு தரம் பார்த்துக் கொண்டேன்.

கீழ்ப்புறம் பெரிய பூக்கள் போட்ட வயலெட் வண்ண டெரின் புடவை உடுத்திக் கொண்டு, கறுப்பு பார்டருக்கேற்ற கறுப்பு பிளவுஸ் அணிந்திருந்தேன். மலிவான நவரத்தினக் கல்லில் தோடும் ப்ரேஸ்லெட்டும் போட்டுக் கொண்டிருந்தேன். கொண்டை போட்டு ஒரே ஒரு பெங்களூர் ரோஜாப் பூ செருகியிருந்தேன். ரொம்ப அதிகப்படி அலங்காரமும் இல்லை. ரொம்பச் சாதாரணமும் இல்லை.

முதல்வர் திருமதி லீலா ஒரு கிறிஸ்தவப் பெண்மணி. ஐம்பது வயதிருக்கும். தலையைப் 'பாப்' வெட்டிக் கொண்டிருந்தார். சற்று இரட்டை நாடி. அவர் முகத்தில் புன்னகை பூப்பது அபூர்வம் என்று முன்பே நான் கண்டு கொண்டிருந்தேன். ஆனால் சிடுசிடுப்பும் கிடையாது. ஒரு வகையான சோகம் அவர் கண்களில் குடி கொண்டிருப்பதுண்டு. அகலமான முகம். ரொம்ப நெருங்கியவர்களிடம் மட்டும் தான் மனந்திறந்து பேசுகிறவர் என்று தோன்றும்.

''குட்மார்னிங் மேடம்'' என்றேன் அவர் முன்னே போய் நின்று.

நிமிர்ந்து பார்த்தவர், ''நீ... நீங்க'' என்றார், சட்டென்று என்னை ஞாபகம் வராதவராக.

''சுமித்ரா. எகனாமிக்ஸ் லெக்சரர். இன்று ஜாயின் ஆகிறேன்'' என்றேன். என் நியமன உத்தரவை அவர் முன் வைத்தேன்.

''ஓ, மறந்தே போனேன். ஒரு தடவைதானே நாம் பார்த்திருக்கிறோம்?'' என்றார்.

''ஆமாம் மேடம்'' என்றேன்.

பதிவுப் புத்தகங்களையும் சில காகிதங்களையும் புரட்டிப் பார்த்து என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்.

''உங்களுக்கு-''

''உனக்கு என்றே சொல்லுங்கள், ப்ளீஸ். நான் போன வருஷம் வரையில் மாணவியாக இருந்தவள் தான்'' என்றேன்.

''ஒகே. உனக்கு இன்று முதல் அவரிலேயே வகுப்பு இருக்கிறது. பி.ஏ.ஃபஸ்ட் இயர் கிளாஸ்'' என்று எழுந்து கொண்டார். எதற்கு எழுந்து கொள்கிறார் என்று எனக்கு அப்போது தெரியவில்லை. ''வா, உனக்கு வகுப்பைக் காட்டி கேர்ள்ஸுக்கும் இன்ட்ரட்யூஸ் பண்ணி விடுகிறேன்'' என்றார்.

எனக்கிருந்த படபடப்பில் அவரது துணை வேண்டும் போல் தான் இருந்தது. ஆனால் முதல்வர் வந்து அறிமுகம் செய்து வைத்தாலே 'பெரிய ஜபர்தஸ்து!' என்ற எரிச்சல் மாணவிகளுக்கு ஏற்படுவதுண்டு. எனக்குத் தெரியும். எடுத்த எடுப்பிலேயே மாணவிகளுக்கும் எனக்குமிடையே அந்தப் பிளவை ஏற்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை.

''நீங்கள் தொந்தரவு பண்ணிக் கொள்ள வேண்டாம், மேடம். நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்றேன்.



முதல்வரின் முகத்தில் அப்பாடி என்று நிம்மதி தெரிந்த மாதிரி இருந்தது. மணியடித்தார். ''மாசி, இவர்களை அழைச்சிட்டுப் போ.'' என்றார். (அவன் முழுப் பெயர் மாசிலாமணி என்று பிற்பாடு அறிந்து கொண்டேன்.)

முதல் மாடியில் இருந்தது வகுப்பு.

''அதோ அதுதாங்க'' என்று காட்டினான் அவன்.

வெராந்தாவில் அடுத்தடுத்துப் பல அறைகள் இருந்தன. எதைச் சுட்டிக் காட்டினான் என்பது தெரியவில்லை. திரும்பிப் பார்த்தால்அவன் படியிறங்கிச் சென்று விட்டான்.

குழம்பிக் கொண்டு நின்றேன்.

''நீங்க புது எகனாமிக்ஸ் லெக்சரரா மேடம்?'' என்று ஓர் இனிமையான குரல் கேட்டது.

ரொம்ப அழகான பெண். முகத்தில் துருதுருப்பு பொங்கியது. மடிப்புக் கலையாமல் ஸாரி கட்டிக் கொண்டிருந்தாள்.

''ஆமாம்மா. பி.ஏ.ஃபஸ்ட் இயர் எகனாமிக்ஸ், எங்கே இருக்குன்னு...'

''எங்க கிளாஸ்தான் மேடம். இப்படி வாங்க'' என்று வழிகாட்டி அழைத்துச் சென்றாள். அவள் நடையில் பணிவும் பண்பாடும் தெரிந்தன. 'அம்மாடி, முதல் நாளிலேயே ஒரு நல்ல பெண்ணைச் சினேகம் பிடித்துக் கொண்டோமே' என்று மகிழ்ச்சியடைந்தேன்.

''உன் பேர் என்ன?'' என்றேன். 'என்னம்மா?' என்று கேட்க நினைத்ததை அடக்கிக் கொண்டேன். அது

என்னைப் பெரிய நூற்றுக் கிழவியாகக் காட்டும் என்று தோன்றியது.

''இதோ, மேடம்'' என்று மரியாதையுடன் பதிலளித்தாள்.

நான் வகுப்புக்குள் நுழைந்து, மேஜையை நெருங்கிய பிறகு தான் வெளியே வெராந்தாவில் இருந்த மற்றப் பெண்களுக்கு நான் தான் புது விரிவுரையாளர் என்பது தெரிந்தது போலும். சிலர் அவசரமாக வந்து இருக்கையில் அமர்ந்தார்கள். சிலர் சூயிங் கம் மென்று கொண்டு சாவகாசமாக வந்தார்கள்.

சந்தடி அடங்கட்டும் என்று சில நிமிடங்கள் காத்திருந்தேன். உள்ளுக்குள் இருக்கும் எனது பதைப்பை அவர்கள் கண்டு கொண்டுவிடக் கூடாதென்று மௌனமாக நின்றிருந்தேன்.

சலசலப்பு ஓய்ந்தது.

''குட்மார்னிங் டியர் கேர்ள்ஸ்'' என்று அதிக உரக்கவுமில்லாமல் அதிக கிசுகிசுவாகவும் இல்லாமல் சொன்னேன். ''நான் உங்கள் புது எகனாமிக்ஸ் லெக்சரர். என் பெயர் சுமித்ரா, மிஸ் சுமித்ரா. போன வருஷம் வரையில் நானும் உங்களைப் போலக் காலேஜ் மாணவியாக இருந்தவள்தான். எது உங்களுக்குப் பிடிக்கும் எது உங்களுக்குப் பிடிக்காது என்று எனக்குத் தெரியும். ஆகவே நமக்குள் சண்டை எதுவும் வராது என்று நம்புகிறேன்.''

''வராது மேடம்'' என்று ஒரு குரல் கேட்டது. சில மாணவிகள் கலகலவென்று சிரித்தார்கள். அந்த மாணவி



யாரென்று கண்டு கொள்வதில் நான் அக்கறை காட்டவில்லை. காட்டினால் அது எடுத்த எடுப்பிலேயே துப்பறியும் வேலையாகத் தோன்றும் என்று சகஜமாக எடுத்துக் கொண்டு, ''தாங்க் யூ'' என்றேன்.

ஆனால் இதோ மட்டும் அவளை, 'சும்மா இரடி என்று அதட்டுவது தெரிந்தது. மனசுக்குள் நன்றி சொல்லிக் கொண்டேன். ஆனால் அதைக் கவனித்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லை.

மேஜை மீதிருந்த அட்டென்டென்ஸ் பட்டியலைக் கையிலெடுத்தேன்.

மாணவியாக இருந்த போது எங்களுக்குப் பிடிக்காத இன்னொரு விஷயம், ஆஜர் பட்டியலில் பெயர்களைப் படிக்காமல் ஒன்று இரண்டு என்று எண்களைச் சொல்லிக் கூப்பிடுவது. மாணவிகளை ஏதோ அஃறிணைப் பொருளாகப் பாவிக்கிற மாதிரிஅது இருக்கும். ஆகையால் நான் அதையும் தவிர்க்க ''அனந்தலட்சுமி'' என்று பெயரைச் சொல்லியே கூப்பிட்டேன்.

''எஸ் மேடம்.''

''அன்னி ராஜன்.''

''எஸ்.ம்.

''பாகிரதி.''

''எஸ்'ம்.''

ஒருத்தருக்குப் பார்த்தியாய் வேறொருத்தி ஆஜர் சொல்லாமலிருக்கிறாளா என்பதையும் கடைக் கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தேன்.

''ஃபெரூஸ்.''

''எஸ்.மேடம்.''

''கீதா.''

''எஸ்.மேடம்.''

''க்ளோரியா.''

''உள்ளேன் அம்மா.''

மறுபடியும் கலகலவென்று வகுப்பறையில் சிரிப்பு.

''சீ! என்னங்கடி இது? முதல் நாளிலேயே கலாட்டா பண்ணினால் அவர்களுக்கு எப்படி இருக்கும்?'' என்று க்ளோரியாவைக் கீதா கண்டிப்பது கேட்டது.

நான் புன்னகை செய்தேன். ''உள்ளேன் அம்மா அருமையான தமிழ் வார்த்தை. ஐ லைக் இட்'' என்று பாராட்டிவிட்டு மேற்கொண்டு ஆஜர் பட்டியலை எடுத்து முடித்தேன். புது விரிவுரையாளரைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டோ என்னவோ எல்லா மாணவிகளுமே வந்திருந்தார்கள். யாரும் 'கட்' அடிக்கவில்லை.

கையில் கே.கே.டிவெட்டும் அகூஜாவும் எடுத்துப் போயிருந்தேனானாலும் அதில் எதையும் பிரித்து வைத்துக் கொள்ளவில்லை.

''...உங்களில் பெரும்பாலோர் பி.யூ.ஸி.வகுப்பின் போதே எகனாமிக்ஸின் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இந்த வருஷம் நாம் எகனாமிக் தாட்ஸ் பற்றியும் மைக்ரோ எகனாமிக்ஸ்



பற்றியும் படிக்கப் போகிறோம். பொருளாதாரத்தைப் பற்றிச் சொல்லும்போது ஸயன்ஸ் ஆஃப் வெல்த் என்று குறிப்பிட்டார் ஆடம் ஸ்மித். ப்ரொடக்ஷன், கன்ஸம்ப்ஷன், டிஸ்ட்ரிப்யூஷன், எக்ஸ்சேஞ்ச் ஆகிய நான்கு விதங்களில்.........''

மாணவிகள் கவனமாகக் கேட்டார்கள். யாருடைய குறுக்குக் குரலும் எழவில்லை. அம்மாடி! சமாளித்து விட்டேன் என் முதல் வகுப்பை! நெற்றியைக் கைக் குட்டையால் ஒற்றிக் கொண்டேன்.

வகுப்பு முடிந்தது. அடுத்து சாயந்தரம் நாலு மணிக்குத்தான் இன்னொரு வகுப்பு.

கல்லூரியை ஒரு சுற்றுச் சுற்றி வரலாம் என்று புறப்பட்டேன். ஆனால் வெராந்தாவை அடைந்ததும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். சோம்பேறித் தனமாகத் திரிந்து கொண்டிருக்கிறவள் நான் என்ற எண்ணத்தை முதல் நாளே ஏற்படுத்திக் கொண்டு விடக் கூடாது.

பொதுவாகவே எனக்குப் பிடித்த இடம் நூல் நிலையம் தான். அதற்குப் போகும் வழி எது என்று ஒரு பெண்ணிடம் விசாரித்துக் கொண்டேன்.

நூல் நிலையம் ஹோவென்று திறந்து கிடந்தது. பிரம்மாண்டமான ஹால். எத்தனை அலமாரிகள்! ஒரு குட்டிக் கன்னிமரா மாதிரி இருந்தது. அதைக் கவனித்துக் கொள்ளும் பெண் ஏதோ ஒரு கோடியில் தன்னந்தனியாக எறும்புபோல் தெரிந்தாள். நான் இங்கேயிருந்து கூப்பிட்டால்கூட அவளுக்குக் காதில் விழாது என்று தோன்றியது.

ஒரு கோழி முட்டை மேஜையில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன். எதுவும் படிக்கப் பிடிக்கவில்லை. பசிக்கிற மாதிரி இருந்தது.

மணி பதினொன்றுகூட ஆகவில்லை. இப்போது பிடித்துக் கான்ட்டீன் எங்கே இருக்கிறது என்று கேட்டால் சிரிப்பார்கள்.

அந்தப் பெண் குமாஸ்தா எழுந்து கொள்வது தெரிந்தது. யாரையோ கூப்பிட்டுக் கொண்டே மறு கோடியிலிருந்த கதவு வழியே வெளியேறிவிட்டாள்.

அந்த விரிந்து பரந்த ஹாலில் நான் மட்டுமே தன்னந்தனியே இருந்தேன்.

என்னதான் பட்டப் பகல் வேளையானாலும், என்னதான் மின்சார விசிறியிலிருந்தும் வெளியே யிருந்தும் ஜிலுஜிலுவென்று காற்று வீசிக் கொண்டி ருந்தாலும், எனக்கு என்னவோ போலிருந்தது. சகாரா பாலைவனத்தின் நடுவே தனியாயிருப்போமானால், கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு எந்த அபாயமும் தென்படவில்லையென்றால் கூட, உள்ளுக்குள் ஒரு பீதி உதிக்காதா என்ன? அதுபோல இருந்தது.

எழுந்து சென்று, மூலையிலிருந்த 'வாட்டர் கூலரி'லிருந்து ஜில்லென்று ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து விட்டுத் திரும்ப உட்கார்ந்து கொண்டேன். தொலைவில் எல்லா வகுப்புக்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக் கும் பாடங்கள் முணுமுணுவென்று தெளிவற்றுக் கேட்டன. மற்றப்படி எங்கெங்கும் நிசப்தம்.

ஏன் இப்படிக் காரணமின்றி பயப்படுகிறேன் என்று எனக்கே புரியவில்லை. என்னைச் சுற்றிச் சூழ்ந்து



அணிவகுத்துள்ள புத்தக அலமாரி ஒவ்வொன்றும் ஒவ்வொரு காட்டு மிருகம் மாதிரி என்னை அச்சுறுத் திற்று. யாரோ என் ஒவ்வோர் அசைவையும் கண் காணிக்கிறாற் போலிருந்தது.

என் எதிரில் சிறிய கதவுகள் போட்ட, கூண்டு மாதிரியான அறைகள் தென்பட்டன. 'ரிசர்ச் க்யூபிகிள்' என்று கதவின்மீது எழுதியிருந்தது. நான் படித்த கல்லூரி யிலும் அந்த மாதிரி உண்டு. அமைதியாகப் படிக்கவோ எழுதவோ விரும்புகிறவர்கள் அந்தக் கூண்டுக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொள்ளலாம். எவர் தொந்தரவும் இருக்காது.

ஒரு 'கூண்டு'க்குள் போய்ப பேசாமல் ஒரு தூக்கம் போட்டாலென்ன என்று எண்ணினேன்.

எழுந்து, பக்கத்திலிருந்த கூண்டின் கதவைத் திறந்தேன். உட்புறம் தாளிடப்பட்டிருக்கிற மாதிரி இருந்தது. ஆனால் சற்று அழுத்தியதும் திறந்து கொண்டது.

'ஐயோ!' என்று நான் எப்படி வீரிடாமல் இருந்தேன் என்பது இன்றளவும் எனக்கு ஆச்சரியமாக விஷயம்

உள்ளே நாற்காலியில் ஓர் அம்மாள் — விரிவுரை யாளரோ, பேராசிரியையோ தெரியவில்லை — அலங் கோலமாகச் சாய்ந்து கிடந்தாள். வயது முப்பத்தைந்து இருக்கும். கழுத்தில் தாலியும் ஒரு பொன் சங்கிலியும் இருந்தன. நெற்றியில் சற்று அகலமாகக் குங்குமம் வைத்திருந்தாள். இரண்டு கண்களும் கொட்ட விழித்துக் கொண்டிருந்தன. ஒரு கையில் ஒரு சின்னச் சீசா இருந்தது.

பதைப்பில் எனக்கு மாரடைத்தது. அவள் மூக்கில் விரல் வைத்துப் பார்த்தேன். சுவாசம் இல்லை.

மேஜைமீது ஒரு கண்ணாடிக் குண்டின் கீழே சிறு காகிதமொன்று படபடத்தது.

இந்த மாதிரி சூழ்நிலையில் எதையும் தொடக் கூடாதென்று எனக்குத் தெரியும். இருந்தாலும் அந்தக் கடிதத்தை எடுத்துப் பார்த்தேன்.

**பிரின்ஸிபால் அவர்களுக்கு,**

பி.ஏ.முதலாண்டு மாணவி கீதாவின் தொல்லை எனக்குத் தாளவில்லை. வாழ்க்கையிலேயே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. ஆகவே உயிரை மாய்த்துக் கொள்கிறேன்.

**ஆர். ஞானாம்பாள்**

யாரோ வந்து கொண்டிருக்கிற மாதிரி காலடி யோசைகள் கேட்டன.

மாணவி கீதாவா! அவ்வளவு நல்ல பெண்ணையா இவள் குற்றம் சாட்டுகிறாள்!

தற்கொலை செய்து கொண்டு கிடக்கும் அந்த அம்மாளின் முகத்தைப் பார்த்தேன். துன்பங்களை அனுபவித்தவள் போல தோன்றியது. ஆனால் அதற்குக் காரணம் கீதாவாகவா இருக்கும்! ஒரு நாளும் இராது.

அரை நொடிக்குள் நான் சிந்தனை செய்து ஒரு முடிவவுக்கு வந்தேன்.

போனவள் போய்விட்டாள்.



அந்த நல்ல பெண் கீதாவுக்கு வாழ்க்கையே இனிமேல் தான் இருக்கிறது. அந்த வாழ்க்கை மொத்தத்தையும் ஒரு கறுப்புப் போர்வை போர்த்த வேண்டுமா? ஒரு பேராசிரியையின் தற்கொலைக்குக் காரணமாயிருந்தவள் என்ற அடாத பழியொன்று நிழலாக அவள் வாழ்நாள் பூரா பின் தொடர்ந்து வந்து கொண்டிருக்க வேண்டுமா?

கூடாது.

கடிதத்தைப் ப்ளவுசுக்குள் செருகிக் கொண்ட பின்னர் வெளியே ஓடினேன் மற்றவர்களைக் கூப்பிட.

## ௨

''ஐயோ! இங்கே வந்து பாருங்களேன்! ஓடி வாருங்களேன்!'' என்று கூவிக் கொண்டு தலைதெறிக்க முதல்வரின் அறையை நோக்கி ஓடத்தான் முதலில் எனக்குத் தோன்றியது.

பதற்றத்துடன் நூல் நிலையத்தை விட்டு வெளியே வந்தவுடனேயே என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். இது கண்ணியமான கௌரவமான கல்லூரி. நான் வேலைக்கு வந்திருக்கும் புதியவள். இது எனக்கு முதல் நாள். வகுப்புகள் அமைதியாகவும் மும்முரமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரம். அனாவசியமான கலாட்டா செய்யாமல் முதல்வரிடம் விஷயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று தீர்மானித்துக்

கொண்டேன். ஆராய்ச்சியாளர் கூண்டின் கதவைப் பழையபடி சாத்திவிட்டு வந்திருந்தேனாகையால் ஐந்து பத்து நிமிடங்களுக்குள் வேறு யாரும் திறந்து பார்த்து, நான் தவிர்க்க முயன்ற அமர்க்களத்தைத் தாங்கள் செய்துவிடப் போவதில்லை.

உள்ளே முதல்வரின் மெல்லிய அதட்டல் குரல் கேட்டது. கதவு ஓரமாகப் பயந்தாற்போல் வேலைக்காரி துடைப்பமும் கையுமாக நின்றிருந்ததால் அவளைத் தான் கண்டித்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன்.

''எந்த வேலையானாலும் கடனுக்குச் செய்யாதே அம்மா. சம்பளம் வாங்கலியா? உனக்கு மனச்சாட்சி கிடையாதா? இங்கே கொடுக்கிற சம்பளம் கம்மின்னும் நீ செய்யற வேலை அதிகம்னும் தோன்றினால் பேசாமல் வேறு இடத்திலே வேலையைப் பார்த்துக் கொள். உன்னைவிடச் சம்பளம் குறைவாய் வாங்கிக் கொண்டு உன்னைவிட அதிகமாய் வேலை செய்கிறவங்களை நாங்க போட்டுக்கிறோம். இதோ பார், இந்த நாற்காலிக் கைப்பிடியில் எத்தனை புழுதி... துடைச்சு எத்தனை நாளாச்சு...''

நான் மிடறு விழுங்கிக் கொண்டேன். கேவலம் நாற்காலியில் படிந்திருக்கும் புழுதிக்கு இத்தனை அலட்டிக் கொள்கிறவர், நூல்நிலைய நாற்காலியில் ஒரு பேராசிரியை தற்கொலை செய்து கொண்டு கிடக்கிறாள் என்று கேள்விப்படும் போது எப்படிப்பட்ட அதிர்ச்சி அடைவாரோ?

வேலைக்காரியை வெளியே போகும்படி ஜாடை காட்டிவிட்டு உள்ளே போனேன். ''என்ன சுமித்ரா...''



என்று அவர் கேட்கும்போதே, குறுக்கிட்டு, ''மேடம்... ஒரு ஷாக்... எ வெரி அன்ப்ளஸெண்ட் திங் நடந்திருக்கிறது.....'' என்றேன்.

''புது லெக்சரர்னு எவளாவது உன்னிடம் வாலாட்டினாளா?''

''ரொம்ப ஸீரியஸ். தயவு பண்ணி என் பின்னால் வாருங்கள்'' என்று அவரைப் பிடித்து இழுக்காத குறையாக வற்புறுத்திச் சொன்னேன். நான் சொன்ன வாக்கியங்களைக் காட்டிலும் என் முகத்தில் தெரிந்த கலவரம் தான் அவரை அதிகம் எழுப்பியிருக்க வேண்டும்.

''என்னம்மா... என்ன?'' என்று பதைத்தவராக என்னைப் பின் தொடர்ந்தார். அந்த நேரத்தில், அத்தனை அவசரமாகவும், பரபரப்பாகவும் முதல்வர் ஓர் இளம் விரிவுரையாளருடன் செல்வது பார்ப்பவரின் கவனத்தை இழுத்தது. இரண்டொரு மூத்த பேராசிரியைகள் எங்களுடன் கூட வருகிற மாதிரி திரும்பினார்கள். 'ப்ளீஸ்... வரவேண்டாம்' என்று சாடையிலேயே அவர்களை நிறுத்திவிட்டுச் சென்றேன்.

வழியில் முதல்வர் எதுவும் பேசவில்லை. எதையோ சுட்டிக் காட்டத்தான் அழைத்துப் போகிறேன் என்று அவர் தெரிந்து கொண்டு விட்டார். அது என்னவாக இருக்கும் என்று மனசுக்குள் அவர் பல ஊகங்களைப் போட்டுக் குழப்பிக் கொள்வது எனக்குத் தெரிந்தது.

நூல்நிலையம் அப்படியே இருந்தது. முதல்வர் அங்கே தான் வருகிறார் என்பதை எந்த மூலை

யிலிருந்தோ பார்த்துவிட்ட குமாஸ்தா, அவசர அவசரமாக வேறு கதவு வழியாக உள்ளே வந்து தன் மேஜையடியில் உட்கார்ந்து கொண்டாள்.

நான் அந்த ஆராய்ச்சியாளர் அறையைத் திறந்து காட்டினேனோ இல்லையோ-

''மை காட்!'' என்று அலறிவிட்டார் திருமதி லீலா.

சவத்தின் கையிலிருந்து விஷப்புட்டி முன்னைவிட இறுக்கமாகப் பிடிக்கப்பட்டிருந்ததைத் தவிர வேறு மாறுதலில்லை.

எங்கெங்கிருந்தோ திடுதிப்பென்று பல பேர் வந்து குழுமிவிட்டார்கள். நூல்நிலைய குமாஸ்தாவுக்குக் கைகால் உதறியது-தான் ஏதோ வொரு விபரீதத்தை இத்தனை நேரமாய்க் கவனிக்காமல் இருந்திருக்கிறோம் என்பதால்.

''ஞானம்! புரொபசர் ஞானம்!'' என்று இறந்து கிடந்தவளை உலுக்கப் போனார் முதல்வர்.

''நான் பார்த்து விட்டேன், மேடம். இறந்து விட்டார்'' என்று தெரிவித்தேன்.

பின்னால் நின்றிருந்த விரிவுரையாளர்களின் பேச்சிலிருந்து, இறந்திருப்பவரின் பெயர் ஞானாம்பாள் என்றும், ஆங்கில பேராசிரியை என்றும், ஐந்து வருடமாய் வேலைக்கிருக்கிறார் என்றும் தெரிந்து கொண்டேன்.

''என்னவோ வயிற்று வலின்னு இரண்டு நாளாய் சொல்லிட்டிருந்தாங்க. அதுக்காக இப்படியா....'' என்று என் பின்னால் யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள்.



முதல்வருக்குக் கூரிய மூளை. சமயோசித புத்தியுடன் டக் டக்கென்று காரியமாற்றுகிறவர். அருகிலிருந்த மூத்த பேராசிரியைகளுடன் அவர் அவசரமாக ஆலோசனை செய்தார். குமாஸ்தாவைக் கூப்பிட்டுக் கேட்டார்.

அந்தப் பெண்ணுக்குக் கண் முனையில் கண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது. ''நான் கவனிக்கவேயில்லை, மேடம். கார்ட்ஸ் செக் பண்ணிக் கொண்டிருந்தேன். புரொபசர் ஞானம் வந்ததையும் பார்க்கவில்லை. க்யூபிகிளுக்குள் போனதும் தெரியாது'' என்றாள்.

''ஸ்யூஸைட் என்பது நிச்சயமாய்த் தெரிகிறது. இருந்தாலும் ஹார்ட் அட்டாக் என்று சொல்லி விடலாமா?'' என்று பிரின்ஸிபால் சொன்ன யோசனைக்கு மற்றவர்களிடம்அவ்வளவாய் வரவேற்புக் கிடைக்கவில்லை.

''பிற்பாடு தெரியவந்தால் பெரிய விபரீதமாகி விடும்'' என்று ஒருவர் எச்சரித்தார்.

''என்னத்துக்காகத் திடீரென்று இப்படிப் பண்ணிக் கொண்டாள்? என்ன வந்தது அப்படியொரு வெறுப்பு? உங்களுக்கு ஏதாவது லெட்டர் எழுதியிருப்பாளோ?'' என்று முதல்வரிடம் ஒரு பேராசிரியை கேட்ட போது எனக்குச் சொரேர் என்றது. பிளவுசைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். ரொம்ப முக்கியமான தடயமொன்றை மறைத்து வைத்திருக்கிறோம் என்ற ஞாபகம் வந்து என் மனசை உறுத்தியது. ஆனால் அந்தக் கீதாவின் களங்கமற்ற முகத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டேன். அநியாயமாய் அந்த இளம் பெண்ணின்

வாழ்க்கையைக் கெடுக்க முயன்றாளே என்று இந்த உயிரற்ற சவத்தின் மீது எனக்குக் கோபம் வந்தது.

ஒரு வினாடி உதட்டைக் கடித்துக் கொண்டு யோசனை செய்தார் முதல்வர். இதற்குள் நான்கு புறமும் சின்னச் சின்னதாகக் கும்பல் சேரத் தொடங்கியதால் அவற்றின் நிழல்கள் நூல்நிலைய ஹாலுக்குள் மங்கலாக அசைந்தன.

''ரைட், நீங்களெல்லாம் அமைதியாக, பதட்டப் படாமல் காரியம் செய்ய வேண்டும்'' என்று தன்னைச் சுற்றியிருந்த பேராசிரியைகளிடம் வேண்டுகோள் விடுத்தார் முதல்வர். ''ஒவ்வொரு வகுப்பாகச் சென்று, லெக்சரரைத் தனியே கூப்பிட்டு, வகுப்புக்களை நிறுத்தச் சொல்லுங்கள். கிளாஸ்கள் ஒன் பை ஒன் அமைதியாகக் கலைந்து வீட்டுக்குப் போகட்டும். வாட்ச்மேன் களிடமும் பியூன்களிடமும் சொல்லி, காலேஜுக்கு வெளியே ஸ்டுடண்ட்ஸ் கும்பலாக நிற்காதபடி பார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள். நீங்களும் யாரார் போக விருப்பமோ அவர்கள் போகலாம். ஒரு எட்டுப் பேர் மட்டும் இங்கே லைப்ரரி வாசல்களில் இரண்டிரண்டு பேராக நின்று கொள்ளுங்கள். யாரையும் உள்ளே விட வேண்டாம். நான் போலீசுக்குப் போன் பண்ணுகிறேன். தாங்க் காட், என் மாமா ஒருத்தர் டெபுடி கமிஷனராக இருக்கிறார். ப்ராபப்ளி அவர் அதிகம் ஸ்காண்டல் ஆகாதபடி உதவி செய்வார்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். ''சுமித்ரா, நீ போய்விடாதே. என் கூடவே இரு'' என்றார் என்னிடம்.

''இருக்கேனம்மா'' என்று கூறி அவரைப் பின் தொடர்ந்தேன். வேலைக்கு வந்த முதல் நாளே இப்படி



யொரு பரபரப்பு ஏற்படுத்தி விட்ட என்னை எல்லாரும் ஒரு தினுசாகப் பார்க்கிற மாதிரி இருந்தது.

பத்து நிமிடத்துக்குள் முதல்வரின் உத்தரவுகள் மளமளவென்று நிறைவேற்றப்பட்டன. மாணவிகள் வகுப்புக் கலைந்து வாசலுக்குப் போவதையும், தெருவில் உள்ள 'ஸ்டாப்'புகளில் பஸ் ஏறுவதையும் இங்கிருந்தே காண முடிந்தது. திடீரென்று கல்லூரி விட்டு விட்டதைப் பஸ்ஸில் போகிறவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே போனார்கள். வீட்டிலிருந்து கார் வரும் மாணவிகள் மட்டும் போன் செய்துவிட்டுக் காருக்காகக் காத்திருந்தார்கள்.

ஓர் ஆங்கிலப் பேராசிரியையின் உடலுக்குக் காவலாக நாங்கள் பதினைந்து பேர் மட்டுமே இருந்தோம். மொத்தக் கல்லூரியும் காலியாகிவிட்டது. முதல்வரின் மாமாவான உதவி போலீஸ் கமிஷனர் முதலில் வந்து சேர்ந்தார். விஷயத்தைச் சுருக்கமாகத் தெரிந்து கொண்டு மற்றப் போலீஸ் அதிகாரிகளை வரவழைத்தார்.

பேராசிரியை ஞானாம்பாளின் கணவர் பல்லவன் போக்குவரத்தில் ஆபீசராக இருக்கிறாராம். நேரில் ஆளனுப்பி அவரை வரவழைத்தார்கள். விளையாட்டு வீரர் போல உடம்பு கட்டுமஸ்தாக இருந்தது. முதல்வரின் காரிலிருந்து பாய்ந்து இறங்கியவர், ''என்ன? ஞானத்துக்கு என்ன?'' என்று பதைத்துக் கொண்டே வந்தார்.

மனைவியின் உடலைப் பார்த்தாரோ இல்லையோ, ''ஞானம்! ஞானம்!'' என்று கதறிக்

கொண்டு அவள் மேல் விழுந்து, புரட்டிப் புரட்டி எடுத்து விட்டார். ஒரு போலீஸ் அதிகாரிதான் அவரை விலக்கினார்.

''மேடம், என்ன நேர்ந்தது என் ஒய்ஃபுக்கு? எதற்காக இப்படிச் செய்து கொண்டாள்? யார் என்ன சொன்னார்கள் அவளை? வீட்டிலே அவளுக்கு ஒரு கவலையும் கிடையாதே! ஒரு கஷ்டம் தெரியாமல் அவளை வைத்திருந்தேனே? ஞானம்! மாலுவுக்கும் பாபுவுக்கும் நான் என்ன சொல்வேனம்மா!'' என்று முதல்வரிடம் புலம்பிக் கொண்டே மறுபடி மறுபடி மனைவியின் உடலிடம் தாவினார்.

எதற்காக இப்படிச் செய்து கொண்டாள், ஏன் இந்தத் தற்கொலை என்று அவர் கேட்ட போதெல்லாம் எனக்குத் திக் திக்கென்றிருந்தது.

என்னைச் சுற்றிலும் போலீஸ்காரர்கள் சூழ்ந்திருந்தார்கள். பார்க்கும் இடமெல்லாம் போலீஸ் உடை தென்பட்டது. இப்போது கூடத் தாமதமாகிவிட வில்லை. 'இதோ இந்தக்கடிதம் இங்கே கீழே கிடந்தது' என்று சொல்லி ஒன்றும் தெரியாத மாதிரி எடுத்துக் கொடுத்து விடலாம். ஆனால்...

மறுபடியும் பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமலே இருந்தேன்.

முதல் முறையாகப் பார்த்தவள் என்ற முறையில் போலீசார் என்னிடம் சில கேள்விகளைக் கேட்டபின் சவப் பரிசோதனைக்காக உடலைக் கொண்டு போய் விட்டார்கள். தற்கொலை தான் என்பது நிச்சயமாகத் தெரிந்த போதிலும் விசாரித்தாக வேண்டும் என்றார்கள்.



தேவைப்பட்டால் மறுபடி என்னைக் கூப்பிடுவதாகச் சொல்லி என் வீட்டு விலாசத்தை வாங்கிக் கொண்டார்கள். போலீஸ் வேனிலேயே ஞானாம்பாளின் கணவன் ராஜசேகரன் சென்று விட்டார். பிரின்ஸிபாலும் மற்றவர்களும் வெளியேறினார்கள்.

ஒரு மணி நேரத்தில்அந்த விஸ்தாரமான நூல் நிலைய ஹால் காலியாகிவிட்டது.

போலீஸ்காரர்கள், புகைப்படக்காரர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியைகள், குமாஸ்தாக்கள், பியூன்கள் அத்தனை பேரும் போய்விட்டார்கள். கொஞ்சம் முன்னாலிருந்த தனிமையைக் காட்டிலும் இன்னும் பயங்கரமான தனிமையாக இருந்தது. அச்சம் என்னைப் பிடித்துக் கொண்டது. எனக்குத் தைரியம் சொல்லக் கூடியவர்களாக ஒரு துணை கிடைக்குமா என்று உள்ளத்துக்குள் ஓர் ஏக்கம் உதித்தது.

கல்லூரி ஆண்டு மலரில், 'என் முதல் நாள் அனுபவம்' என்று என்னைக் கட்டுரை எழுதும்படி கேட்டால் எப்படி இருக்கும்!

வெளியே வந்தேன். ஒரே ஒரு போலீஸ்காரர் மட்டுமே காவல் இருந்தார். நூல் நிலையத்தின் மற்ற எல்லா வாசல்களும் தாளிடப்பட்டு விட்டன. தாழ்வாரத்துக்கு வெளியே பரந்த விளையாட்டு மைதானம் ஜமுக்காளம் விரித்த மாதிரி இருந்தது. பளீரென்று வீசிக் கொண்டிருந்த வெய்யில் கண்ணைக் கூசியது. இத்தனை அமளிகளும் பட்டப் பகல் வேளையில் நடைபெற்றிருக்கிறது என்பது ஞாபகத்தில் உறைத்தது.

விளையாட்டு மைதானத்தின் புல்வெளியில் மெல்ல நடந்து கொண்டிருந்த போது, ''மேடம்'' என்று மெல்லிய குரலில் யாரோ கூப்பிட்டார்கள்.

திரும்பினேன். இதாதான். அவளைப் பார்க்கவே என்னவோ போலிருந்தது. திடீரென்று என் வாழ்க்கையில் இவளுக்கும் எனக்கும் ஒரு பந்தம் எப்படித்தான் ஏற்பட்டதோ!

''உங்களுக்காகத் தான் வீட்டுக்குப் போகாமல் காத்திட்டிருந்தேன் மேடம்'' என்றாள் கவலை தோய்ந்த குரலில்.

''ஏன்?'' என்றேன்.

''இது...இன்னைக்குத் தான் உங்களுக்கு ஃபஸ்ட் டே.... இன்றைக்குப் பார்த்து உங்களுக்கு இப்படியொரு சோதனை... மனசு கஷ்டமாயிருக்குமே உங்களுக்கு என்று...''

''ஆறுதல் சொல்வதற்காகக் காத்திட்டிருந்தாயாக்கும்? தாங்க் யூ'' என்று அவள் கையைப் பற்றிக் கொண்டேன். அவளுடைய அழகான முகம் சிறிது மலர்ந்ததைப் பார்க்க எனக்கு ஆறுதலாயிருந்தது. ஒரு துணை தேவை என்று என் மனம் நினைத்த அதே கணத்தில் இவள் வந்து சேர்ந்தது எத்தனை பொருத்தம் என்று எண்ணிக் கொண்டேன். அந்த இனிமையான முகம்... அன்புள்ள குரல்... தான் ஒரு பெரிய போலீஸ் புயலில் சிக்கவிருந்தோம் என்பது மட்டும் இவளுக்குத் தெரிய வந்தால்...!

''புரொபசர் ஞானாம்பாள் ரொம்ப நல்லவங்க மேடம்'' என்றாள் அவள்.



''உனக்குக் கிளாஸ் எடுத்திருக்காங்களா?'' என்று கேட்டேன்.

''எத்தனையோ தடவை. இங்கிலீஷ் லெக்சரர் ஒரு நோயாளி. அவங்க லீவு போடறப்போவெல்லாம் இவங்கதான் வருவாங்க'' என்றாள். ''ரொம்ப நல்லா சொல்லிக் கொடுப்பாங்க. பொறுமையாய்ச் சந்தேகத்துக்கு விளக்கம் தருவாங்க. ஸ்டாஃப் ரூமிலே ரொம்ப நேரம் இருந்து கொண்டு நோட்ஸ் திருத்து வாங்க. நாம் போய் ஏதாவது கேட்டால், வீட்டுக்குக் கிளம்பிட்டிருந்தால் கூடத் திரும்ப உட்கார்ந்து சொல்லிக் கொடுப்பாங்க...''

இத்தனை நல்லெண்ணம் கொண்டுள்ள பெண் மீது எப்பேர்ப்பட்ட அபாண்டம் சுமத்திவிட்டுப் போயிருந்தாள் அந்த ஞானாம்பாள்!

''இன்னும் வீட்டுக்குப் புறப்படலியா நீ? எல்லாரும் போயிட்டாங்களே?'' என்றேன்.

''கார் இன்னும் வரல்லே'' என்றாள்.

''உன் அப்பா என்ன செய்கிறார்?''

''பார்மஸி சொந்தக்காரர். ஸிடியில் நாலு இடங்களில்........ உங்களை வீட்டில் டிராப் பண்ணி விட்டுப் போகிறேன், மேடம்.''

''வேண்டாம், தாங்ஸ். நீ போ'' என்று சொல்லிக் கொண்டிருந்தபோது கார் வந்து மைதானத்தை ஒட்டிய பாதையில் நின்றது. அவள் போய்விட்டாள்.

சாயந்தரம் வர வேண்டியவள் ஏன் மூன்று மணிக்கே வந்து விட்டேன் என்று தாத்தாவோ பாட்டியோ கேட்கவில்லை.

நாளைக்குப் பேப்பரைப் பார்த்தபிறகு தான் தாத்தா கேட்பார். 'ஏன் நேற்றே சொல்லவில்லை?' என்று என்னிடம் சண்டை பிடிப்பார்.

''பசிக்கிறது பாட்டி'' என்று தட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன்.

''கொஞ்சம் இரு. தோசை வார்த்துத் தான் போடணும்'' என்றாள் பாட்டி. ''இப்பதான் நானும் வந்தேன்.''

''எங்கே போயிருந்தே?'' என்றேன்.

''அந்தக் கடன்காரப் பாவியைப் பார்க்கத்தான்'' என்றாள் பாட்டி.

கடன்காரப் பாவி என்று அவள் இந்த உலகத்தில் ஒரே ஒருத்தரைத் தான் சொல்வது வழக்கம். விருகம் பாக்கத்துக்குப் போகும் வழியில் அவள் கட்டியுள்ள வீட்டில் குடியிருக்கும் சீனிவாசன்தான் அது. அந்த ஆளிடமிருந்து அவளுக்கு வாடகைப் பணம் வந்து ஆறு மாதமாகிறது. தாத்தாவோ கொஞ்சம்கூட அதில் அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டேனென்கிறார்.

''தோசை வார்த்து வை. நான் புடவை மாற்றிக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி என் அறைக்குப் போனேன்.

பிளவுசைக் கழற்றும்போது அந்தக் கடிதம் கீழே விழுந்தது-ஞானாம்பாள் எழுதிய கடிதம். சுக்கு நூறாய்க் கிழித்து ஜன்னலுக்கு வெளியே எறிய எண்ணினேன். என்னவோ தோன்றியது. அதைக் கையில் வைத்துக் கொண்டு தயங்கினேன். பிறகு அலமாரியிலிருந்த புத்தகங்கள் ஒன்றினுள் செருகி வைத்தேன்.

# ௩

ஒரு வாரத்தில் எல்லாப் புழுதியும் அடங்கி விட்டன. கல்லூரி வழக்கம் போல இயங்கலாயிற்று. அந்த முதல் நாளைய அனுபவத்தை அன்றிரவு நினைத்துப் பார்த்த போது, ரொம்பக் காலம்வரை அது கல்லூரியை உலுக்கி எடுக்கப் போகிறது என்று நினைத்திருந்தேன். எம்.ஃபில் படித்த காலத்தில் என் தத்துவப் பேராசிரியை அடிக்கடி, 'ஆனானப்பட்ட மகாத்மா காந்தி இறந்த பிறகே கூட ஒன்றும் ஆக வில்லை. இந்தியா இருந்து கொண்டுதான் இருக்கிறது' என்று சொல்வதுண்டு. அது இப்போது எனக்கு நினைவு வந்தது. அப்படியிருக்க, ஓர் ஆங்கிலப் பேராசிரியை துர்மரணம் அடைந்ததற்காகக் கல்லூரியையே மூடி விடுவார்களா என்ன?

ஞானம்பாள் இறந்த இரண்டாம் நாள் காலை, கல்லூரி வகுப்புகள் ஆரம்பமாவதற்கு முன்பு, வழக்கம் போல் 'பேரவை' நடைபெற்றது. மைதானத்தில் சுமார் 1500 பெண்கள் குழுமியிருந்தார்கள். பேரவைக்கு வராமல் எந்த மாணவியாவது வகுப்பிலோ சிற்றுண்டி சாலையிலோ ஒளிந்து கொண்டிருந்தால், விரட்டிக் கொண்டு வந்து சேர்க்க வேண்டியவேலை எனக்கும் இன்னும் சில விரி வுரையாளர்களுக்கும் வந்தது. யாரும் வராமல் இல்லை. மேடையில் முதல்வரும் கல்லூரியின் நிர்வாகக் காரியதரிசியும் காலஞ்சென்ற ஞானாம்பாளைப் பற்றி இரங்கல் செய்தி படித்தார்கள். இரண்டு நிமிட மௌனத்துக்குப் பின் பேரவை கலைந்தது. அத்தோடு ஞானாம்பாளின் கதை முடிந்தது.

போலீசாரும், ஞானாம்பாள் வயிற்றுவலி காரண மாகத் தற்கொலை செய்து கொண்டாரென்று முடிவு செய்து விட்டார்கள்.

நான் செய்தது தப்புக் காரியம் தான் என்றாலும் ஏதோ எல்லாம் நல்லபடியாய் முடிந்தது என்று நிம்மதி யடைந்தேன்.

அது எவ்வளவு தற்காலிகமானது என்பதும், விதியின் விளையாட்டை எவ்வளவு குழந்தைத்தனமாக நான் கணித்திருக்கிறேன் என்பதும் சீக்கிரமே புரிந்து விட்டது.

அன்று எனக்கு இரண்டாவது மணியின்போது தான் வகுப்பு இருந்தது. ஸ்டாஃப் அறையில் ஒரு நாவலைப் பிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

பியூன் மாசி உள்ளே வந்து,சின்னதும் பெரியது மாக முப்பது நாற்பது நோட்டுப் புத்தகங்களை மேஜை மீது பொத்தென்று போட்டான். முதல் நோட்டைப் பிரித்துப் பார்த்ததுமே பி.ஏ.மூன்றாம் ஆண்டு மாணவி களின் நோட்டு என்று தெரிந்தது. அவைகளைப் பொருளாதாரத் துறைப் பேராசிரியைதான் பார்ப்ப தென்றும் கீழ் இரண்டு வகுப்பு நோட்டுப் புத்தகங்களை மட்டுமே நான் பார்ப்பதென்றும் ஆரம்பத்திலேயே ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம்.

''புரோபசர் கிட்டே கொண்டு போய் வையப்பா'' என்றேன்.

''சுருட்டு உங்க கிட்டேதான் கொடுக்கச் சொல்லுது,'' என்றான் மாசி. 'சுருட்டு' என்றுதான்



அவன் எங்கள் பேராசிரியையைச் சொல்லுவது வழக்கம். பேராசிரியை கொல்லம்மா ஹைதராபாத்தைச் சேர்ந்தவர். ரகசியமாக அவர் சுருட்டுப் பிடிக்கிறார் என்றும் பலமுறை தான் பார்த்திருப்பதாகவும் மாசி சத்தியம் செய்வான்.

'திருப்பி அவர் மேஜை மேலேயே கொண்டு போய் வை' என்று சொல்ல நினைத்தேன். சரி, எதற்கு வம்பு என்று நானே ஒவ்வொன்றாய்ப் பார்க்கத் தொடங்கினேன்.

முன்பு நான் படித்த கல்லூரியில் கூட இப்படித் தான் பொருளாதார விரிவுரையாளருக்கும் பொருளா தாரப் பேராசிரியைக்கும் அடிக்கடி தகராறு வரும். அதே கதை தான் இங்கேயும் என்று நினைத்துக் கொண்டேன். பொருளாதாரம் என்பது தினம் தினம் மாறிக் கொண் டிருக்கிற பாடம். கொல்லம்மா போன்று பதினைந்து இருபது வருடத்துக்கு முன்பு படித்திருந்த பேராசிரியை கள், பழைய கர்னாடகப் பாடங்களை அடிப்படையாக வைத்துப் பாடம் நடத்துவார்கள். ஆகவே என்னைப் போலப் புதிதாக வரும் விரிவுரையாளர்கள் 'அப்டு டேட்'டாக இருப்பதால் பொதுவாக அவர்களுக்கு எங்களைப் பிடிப்பதில்லை. இது நான் கண்டுபிடித்த விஷயம் இல்லை. நான் படித்த போது எனக்கு விரிவுரையாளராக இருந்தவர் சொன்னது. அது உண்மை தான் போலிருக்கிறது.

கொல்லமாவுடன் உரசல் என்னத்துக்கு? நோட்டுக் களைத் திருத்தத் தொடங்கினேன். கோழி கிறுக்கின மாதிரி இருந்த ஒரு கையெழுத்தைப் பார்த்துக் கோபம்

கொள்கையில், முத்து முத்தாகக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் போன்ற இன்னொரு பெண்ணின் கையெழுத்து ஆறுதல் கொள்ள வைத்தது. ஒருத்தி ரத்தினச் சுருக்கமாக நாலு வரி எழுதினாள் என்றால் மற்றொருத்தி வளவளவென்று அதே விஷயத்தை ஏழு பக்கத்துக்கு எழுதி எரிச்சல் படுத்தினாள். உலகம் இப்படித்தான் இருக்கும் போலும் என்று நினைத்துச் சிரித்துக் கொண்டேன்.

மணி அடித்தது.

பி.ஏ. முதலாண்டு. கீதாவின் வகுப்பு. ஏனோ அந்த அறைக்குள் நுழையும்போதெல்லாம் எனக்கு என்னவோ ஒரு குறுகுறுப்பு குடைந்து கொண்டிருந்தது. தற்கொலை செய்து கொண்டு இறந்து போன ஒருத்தி-தன் மரணத்துக்குக் காரணம் இன்னார் தான் என்று ஒருவரைக் குற்றம் சாட்டிவிட்டு உயிர் துறந்திருக்கிறாள். அன்னாரை உலகத்துக்குத் தெரியாமல் நாம் மறைத்து வைத்திருக்கிறோமே என்று கீதாவின் வகுப்புக்குள் நுழையும் போதெல்லாம் எண்ணிக் கொள்வேன்.

அப்படி உறுத்தல் தோன்றும்போது நிமிர்ந்து ஒரு முறை கீதாவின் முகத்தைப் பார்ப்பேன். அவள் புன்னகை செய்வாள். அந்தக் களங்கமற்ற புன்னகையைக் காணும்போது நான் செய்த காரியம் எந்த விதத்திலும் தப்பில்லை என்று மனம் சமாதானமடையும்

இருந்தாலும் இன்றைக்கென்னவோ வழக்கத்தைக் காட்டிலுமே அதிகமாக என் உள்ளம் குழம்பிக் கொண்டிருந்தது. அதன் எதிரொலி மாதிரி வகுப்பிலும் நிசப்தம் நிலவாமல் சலசலப்பு இருந்தது.



அதைப் பொருட்படுத்தாமல் பாடம் நடத்தினேன். பேச்சாளர் அறுக்கும்போது அவையினர் கைதட்ட ஆரம்பிப்பார்களே அது போல, என்னை லட்சியம் செய்யாமல் மாணவிகள் பாட்டுக்குக் கும்பல் கும்பலாக அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது அபாயத்துக்கு அறிகுறி. 'இன்று இத்துடன் பாடம் போதும்' என்று நிறுத்திவிட வேண்டும். அதுதான் நான் படித்த காலத்தின் வழக்கமாக விரிவுரையாளர்கள் செய்வது.

ஆனால் இன்று ஏனோ நான் வீம்பாக இருந்தேன். வகுப்பில் சளசளப்பு அதிகமானதும், என் விரிவுரையை டக்கென்று பாதி வாக்கியத்தில் நிறுத்திவிட்டு, கைகளை மார்பின் குறுக்காகக் கட்டிக் கொண்டு அவர்களையே பார்த்துக் கொண்டு கம்மென்று நின்றேன். அந்த மவுனாஸ்திரம் வேலை செய்தது. மந்திரக் கட்டுப் போட்ட மாதிரி அவர்கள் பேச்சும் நின்றது.

''தாங்க் யூ'' என்று சொல்லி விட்டுப் பாடத்தைத் தொடர்ந்தேன். மறுபடியும் வம்பளப்பு ஆரம்பித்தது.

சரி, இனி விரிவுரை செய்ய வேண்டாம், கரும் பலகையில் 'சார்ட்' வரையலாம் என்று தீர்மானித்தேன். 'இதைக் கவனியுங்கள்'' என்று சொல்லிவிட்டு, சாக்குக் கட்டியை எடுத்துக் கொண்டு 'ஆர்கனைஸேஷன் சார்ட்' டைக் கரும்பலகையில் வரையத் தொடங்கினேன்.

டொக்கென்று ஒரு சின்ன சுண்ணாம்புக் கட்டித் துண்டு என் பின்னாலிருந்து வந்து கரும்பலகையின் மீது அடித்துத் தெறித்து விழுந்தது. என் முதுகை நோக்கி வீசி, குறி தவறிவிட்டதாகவும் இருக்கலாம்.

விருட்டென்று திரும்பினேன். வகுப்பில் மயான அமைதி நிலவியது. கீழே விழுந்த சாக்குக் கட்டியைக் கையிலெடுத்தேன். ''இதை யார் எறிந்தது?'' என்று கேட்க வாயெடுத்தேன். மாணவிகளின் மனநிலை இன்னதென்று புரிந்துவிட்டபோது வம்பை விலைக்கு வாங்குவதில் என்ன பயன்? ஒரு புன்னகை செய்தேன். ''எனக்கு ஒரு நல்ல சாக்குக் கட்டி தர வேண்டுமென்று யாரோ ஒரு மாணவிக்குத் தோன்றியிருக்கிறது. அவள் யாராக இருந்தாலும் என் நன்றி'' என்று சொல்லிவிட்டு, ஏற்கெனவே வைத்திருந்த சாக்குக் கட்டியை ஜன்னலுக்கு வெளியே எறிந்து விட்டு, மாணவி வீசிய சாக்குக் கட்டியால் தொடர்ந்து 'படம்' வரையலானேன்.

ஆனால் மேலும் இரண்டு நிமிடங்கள் தான். பழையபடி சளசளப்பு-இப்போது கடகடவென்று சிரிப்பும் சேர்ந்து கொண்டது.

''என்ன வந்தது இன்று உங்களுக்கெல்லாம்?'' என்று அமைதியாகவே கேட்டேன். ''கீதா, நீயாவது உன் தோழிகளுக்கெல்லாம் சொல்லக் கூடாதா?'' என்று அவளுக்கு விண்ணப்பம் கொடுத்தேன்.

தோழிகளைக் காட்டிக் கொடுக்க விரும்பாதவள் போல அவள் மௌனமாக இருந்தாள். அவளுக்கு அடுத்த மேஜையில் உட்கார்ந்திருந்த குளோரியா எழுந்து கொண்டு, ''இங்கே இந்த நீலாவதிதான் கலாட்டா பண்ணிட்டிருக்கிறாள், மேடம்'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''இல்லை மேடம். இவர்கள் தான் என் புஸ்தகங்களையெல்லாம் எனக்குத் தெரியாமல் எடுத்துப் பார்த்து என்னை கலாட்டா பண்ணறாங்க'' என்றாள் நீலாவதி. அவளும் புன்னகை செய்து கொண்டு தான் இருந்தாள்.



குளோரியா அவள் கையிலிருந்து ஒரு புஸ்தகத்தை வெடுக்கென்று பிடுங்கினாள். ''நீங்களே பாருங்க, மேடம். அடுத்த மாசம் இவளுக்குக் கல்யாணமாம். புருஷன்காரனுடைய போட்டோவை வைத்துக் கொண்டு எல்லாருக்கும் காட்டிக் கொண்டிருக்கிறாள். அதுதான் எங்கள் தமாஷுக்குக் காரணம்'' என்றாள்.

''ஓகே, ஓகே!'' என்றேன்.

அதற்குள் மீனா என்கிற இன்னொரு பெண் எழுந்து, ''மேடம், குளோரியாவின் வுட் பி கணவனை நாங்கள் பார்த்தாச்சு. நீங்களும் பார்த்து அபிப்பிராயம் சொல்லுங்களேன்'' என்றாள்.

இனி அவர்களுடைய தமாஷில் நாமும் கலந்து கொள்ள வேண்டியதுதான் என்று தீர்மானித்தவளாக, படம் போடுவதை நிறுத்திக் கொண்டேன். அவர்களிடம் வந்தேன். ''இதோ இவர் தான் அடுத்த மாசம் குளோரியாவின் கணவனாகப் போகிறவர்'' என்று ஒரு புகைப் படத்தை நீட்டினாள் நீலாவதி.

வாங்கிப் பார்த்தேன். படம் தபால் அட்டை அளவில் இருந்தது. யாரோ ஒரு மாணவி வாயைப் பொத்திக் கொண்டு சிரிப்பதை உணர்ந்தேன். மறுபடி புகைப்படத்தைப் பார்த்தேன்.

நான் அதிகமாய்ச் சினிமா பார்ப்பது கிடையாது. அதுவும் இந்தி சினிமா ரொம்ப அபூர்வம். ஆனால்

எல்லாச் சினிமாப் பத்திரிகைகளும் படிப்பேன். புகைப் படத்திலுள்ள இந்த முகத்தைப் பத்திரிகைகளில் நிரையைப் பார்த்திருக்கிறோம் என்று தோன்றியது. இவர் நடித்த ஒரு படத்தைக் கூடப் பார்த்திருக்கிறேன். என்ன படம்?..

இரண்டு நிமிடத்தில் ஞாபகம் வந்தது.

''இவர் பெயர் வினோத் கன்னா போலிருக்கிறதே?'' என்றேன் குளோரியாவிடம்.

''நோ! நோ!'' என்றாள் அவள் ரொம்பக் கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு.

''இவர் நடித்த அமர் அக்பர் ஆன்ட்டனி நான் பார்த்திருப்பதாக ஞாபகம்'' என்றேன் மீண்டும்.

''சே, சே! கிடையவே கிடையாது மேடம்! இவர் குளோரியாவின் எதிர்காலக் கணவர்!'' என்று ஏகப்பட்ட மாணவிகள் ஒரே சமயத்தில் கூச்சலிட்டார்கள்.

எல்லாருமாய்ச் சேர்ந்து என்னைக் கலாட்டா பண்ணுகிறார்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

அதே வினாடி குளோரியா விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள்.

''என் ஹஸ்பெண்ட்...என் கணவராகப் போகிறவர்...இவரைப் போய் எவனோ சினிமாக்காரன்னு சொல்லிட்டீங்களே...எனக்கு அவமானமாயிருக்கு...'' என்றவள் கண்ணைத் துடைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சினாள்.

உடனே பல மாணவிகள் ஒரே சமயத்தில் எழுந்து நின்றார்கள். ''மேடம், கல்யாணம் செய்து கொள்ளப்



போகிற ஒரு ஸ்டூடண்ட்டை இப்படியா நீங்கள் இன்ஸல்ட் பண்ணுவது? யூ மஸ்ட் அபாலஜைஸ் டு ஹர்!'' என்று கத்தினார்கள்.

''அபாலஜைஸ்?'' என்று கேட்டேன். எனக்கு ஆத்திரம் பொங்கியது.

''ஆமாம்! மன்னிப்புக் கேட்கணும். இல்லாட்டால் இதை நாங்கள் சும்மா விட மாட்டோம். மொத்தக் காலேஜூம் அஜிடேட் பண்ணுகிற மாதிரி செய்துவிடுவோம்!... குளோரியா! நீ அழாதேடி...நாங்கள் இருக்கிறோம்...''

விஷயம் ரொம்பக் கேலிக் கூத்தாகிவிட்டது என்பதை நொடியில் உணர்ந்தேன். வேண்டுமென்றே வினோத் கன்னாவின் படத்தை வைத்துக் கொண்டு இவர்கள் பரிகாசம் செய்கிறார்கள் என்பது நிச்சயம். ஆனால் இப்போதைக்கு இதைப் பரவ விடாமல் தடுப்பது தான் முக்கியம் என்று தோன்றியது.

''ஓகே, ஓகே! ஐயம் ஸாரி. எனக்கு சினிமா நட்சத்திரங்களைப் பற்றித் தெரியாது'' என்றேன்.

மாணவிகள் படபடவென்று மேசையைத் தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். வகுப்பு முடிந்ததற்கான மணியும் அடிக்கவே நான் வெளியே வந்து விட்டேன்.

அன்று எனக்கு மேற்கொண்டு வகுப்பு கிடையாது. இஷ்டப்பட்டால் வீட்டுக்குப் போயிருக்கலாம். ஆனால் நான் பட்ட அவமானம். கல்லூரிக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தேன்.

இத்தனை வருடங்களில் நான் எதற்காகவும் யாரிடமும் மன்னிப்புக் கேட்டதில்லை. பாட்டி ஒருத்தி தான் என்னை எப்போதாவது கோபிப்பாள். 'ஏண்டி சௌமி, மூஞ்சி அலம்பிக்கிறேன் பேர்வழின்னு தண்ணித் தொட்டிக்குள்ளேயே சோப்பைப் போட்டு விட்டு வந்துட்டியே!' என்றோ, 'பாலை அடுப்பில் வைக்கிருக்கிறேன், ஒரு நிமிஷம் பார்த்துக் கொள் என்று சொல்லிவிட்டுத் தானே போனேன்? அதற்குள் ரேடியோ கேட்கப் போயிட்டியே! அத்தனை பாலும் பொங்கி வழிஞ்சு பாழாயிட்டுது!' என்றோ அவள் திட்டும்போது, 'அட என்ன பாட்டி, குடி முழுகிப் போச்சு! சும்மா வளவளன்னு!' என்று திரும்பிச் சிறுவேனே தவிர, 'அடடா! தெரியாமல் செஞ்சுட்டேன் பாட்டி' என்று வருத்தம் தெரிவித்துக் கொண்டது கிடையாது. இப்போது இந்தப் பொடிப் பெண்கள்...

இந்த மாதிரியான ஒரு சம்பவம் நடைபெற்ற போது அதை முதல்வர் காதில் போடாமல்இருக்கக் கூடாது என்று முடிவு செய்தேன். பின்னாடி, இன்னும் தெரிதாய் ஒன்று நடக்கும்போது போய்ச் சொன்னால், ஆரம்பத்திலேயே சொல்வதற்கென்ன என்று அவர் நம்மைத் திருப்பிக் கேட்பார். அதற்கு இடம் வைத்துக் கொள்ளக் கூடாது.

இடைவேளை முடிந்திருந்தது. ஒய்வாக இருக்கிறார் என்று முதல்வர் அறைப் பியூன் சொன்னான். மரத்தடுப்புக்கு மறுபக்கம் ஈஸிசேர் போட்டுக் கொண்டு படுத்திருந்தார் திருமதி லீலா.

''என்னம்மா?'' என்று உட்கார முயன்றார்.



''வேண்டாம். நீங்கள் படுத்திருங்கள். ஒரு சின்ன இன்ஸிடெண்ட். உங்களிடம் சொல்ல வேண்டியது என் கடமை'' என்றேன்.

பீடிகை பலமாயிருக்கவே அவர் முகத்தில் கவலை படர்ந்தது. அதுவும், வேலைக்கு வந்த முதல் தினத்திலேயே ஒரு பெரிய அமளியை ஆரம்பித்து வைத்தவளாயிற்றே நான்!

பூராவையும் சொல்லி முடித்தேன். அவர் முகத்தில் ஆறுதல் தெரிந்தது. ''கேர்ள்ஸ் ஆர் ஆல்வேஸ் கேர்ள்ஸ்'' என்று புன்னகை செய்தார். அவ்வளவு சுலபமாய் விட்டு விட்டாரே என்று என் மனசில் குறை ஏற்படுவதைக் கண்டு கொண்டார் போலும், ''எதற்கும் ஒரு வார்னிங் பண்ணி வைக்க வேண்டியதுதான்'' என்று சொல்லி மணியடித்துப் பியூனை வரவழைத்தார். குளோரியாவை அழைத்து வரும்படி சொல்லியனுப்பினார்.

ஐந்து நிமிடத்தில் குளோரியா வந்து சேர்ந்தாள். என்னையும் முதல்வரையும் சேர்த்துப் பார்த்ததும் அவள் கண்கள் கலங்கிவிட்டன.

''ஏம்மா, உன் தகப்பனார் எஜுகேஷன் டிபார்ட்மெண்டில் டெபுடி செகரட்டரி இல்லை?'' என்று வினவினார் திருமதி லீலா.

குளோரியா தலை குனிந்தாள்.

''உண்டா இல்லையா, சொல்லேன்.''

''ஆமாம், மேடம்.''

''அப்படியிருக்கும்போது நீ ஒரு சினிமா ஸ்டார் படத்தை வைச்சுக்கிட்டு லெக்சரரிடம் கலாட்டா செய்து

அவரை அபாலஜைஸ் பண்ண வைச்சிருக்கிறாயே நல்லா இருக்கா? உன் அப்பா காதுக்கு விஷயம் எட்டினால்-அவர் டிபார்ட்மெண்டில் மற்றவர்களுக்கும் தெரிந்தால்-எப்படி இருக்கும்?''

குளோரியாவுக்குக் கன்னங்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது. ''வேண்டாம் மேடம். அவருக்குத் தெரிவிக்க வேண்டாம்.'' என்றாள்.

விஷயத்தை இத்தோடு விட்டுவிடலாம் என்று சொல்கிற மாதிரி முதல்வரைப் பார்த்தேன். அவரும் ''ரைட், போ. நல்ல பெண்ணாயிரு அம்மா'' என்று பரிந்து கொண்டு அவளுக்கு விடை கொடுத்தார்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு வாசலுக்குப் போன குளோரியா திரும்பி வந்தாள். ''இந்தக் கலாட்டாவெல்லாம் நானாய்ப் பண்ணலே மேடம்....'' என்றாள் மெதுவே.

''யாரோ சொல்லிக் கொடுத்தாங்க என்கிறாயா?''

தலையாட்டினாள்.

''யார்?''

''கீதா, மேடம்.''

எனக்குத் திகீரென்றது. ''கீதான்னா சொன்னே?''

''ஆமாம், மேடம்.''

என் அதிர்ச்சி திருமதி லீலாவுக்குப் புரிய நியாயமில்லை. ''ரைட், ரைட், லெட்ஸ் ட்ராப் த ஹோல் திங். கண்ட கழுதைகளின் பேச்செல்லாம் கேட்காமலிரு'' என்றாள்.



குளோரியா போய்விட்டாள். நானும் முதல்வரின் அறையை விட்டு வெளியே வந்தேன்.

இடை வேளை முடிந்து மறுபடியும் கல்லூரி சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்திருந்தது. திறந்த வெளிகளில் சுள்ளென்று வெய்யில் வீசியது. விரிவுரையாளர்களும் மாணவிகளும் என்னை இடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். நான் எதையும் உணராதவளாக நின்றிருந்தேன். குளோரியா சொன்னது உண்மையாக இருக்குமா?

கீதா நான் நினைத்திருந்த மாதிரி அப்படியொன்றும் சாதுவல்லபோலும் என்று முதன் முதலாக எனக்குள் உறைத்தது. வகுப்பில் அமளி நடந்து கொண்டிருந்த மொத்த நேரமும் அவள் கலந்து கொள்ளாமல் சாது மாதிரி இருந்ததை நினைத்துப் பார்த்தேன். அது வெளிவேடமாக இருக்குமோ? குளோரியா சொன்னது பொய்யல்லவோ? நான் குழம்பினேன்.

அதன்பிறகு நான் அனாவசியமாகக் கீதாவிடம் உருகிப் போய் நிற்பது கிடையாது. அப்பழுக்கற்ற தேவதையாக அவள் என் கண்ணுக்குத் தோன்றுவது குறைந்து விட்டது. குளோரியா சொன்ன தகவலுக்குப் பிறகு, அவளுடைய குணநலன்கள் மளமளவென்று குறைந்து அவளது குறைகள் மடமடவென்று

அதிகரித்தன என் மனத்தில். அப்படியும் ஒரேயடியாக நினைத்துக் கொண்டு விடக் கூடாது என்பதற்காக என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேனே தவிர, அவளைப் பார்க்கும் போதே ஒரு மாதிரியாகத் தான் பார்த்தேன்.

ஆனால் அவளைப் பொல்லாத பெண்ணாகவே விட்டு விடாமல் பழையபடி என் அன்புக்குரிய மாணவியாகத் திருப்பிக் கொணர வேண்டுமென்று ஆசைப்பட்டேன்.

அதற்காகவே அன்று வகுப்பு முடிந்ததும், ''இன்று மாலை 'கைடன்ஸ் அவர்' இருக்கிறது. காலேஜ் விட்டதும் என் ஸ்டாஃப் ரூமில் நான் இருப்பேன். வர விரும்பும் ஸ்டுடண்ட்கள் வரலாம்'' என்று அறிவித்தேன்.

'கைடன்ஸ் அவர்' என்பது மாணவிக்கும் விரிவுரையாளருக்குமிடையே தனிப்பட்ட முறையில் ஒரு நட்புறவு வளர்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. மாணவி, பாட சம்பந்தமில்லாத தனிப்பட்ட பிரசினை களை ஆசிரியையிடம்-தாயிடம் மகள் சொல்வது போல-சொல்லலாம். விரிவுரையாளர், தனக்குத் தெரிந்த வழியைச் சொல்லி அவள் பிரசினையைத் தீர்த்து வைப்பார்.

இன்று ஆலோசனை நேரத்தின் போது கீதா தான் செய்த தவறைப் பற்றி என்னிடம் தனியே வருத்தம் தெரிவிக்க வருவாள் என்று எதிர்பார்த்தேன்.

மணி ஐந்தாயிற்று. என் அறையில் தனியே உட்கார்ந்திருந்தேன். ஆலோசனை நேரம் இருக்கிறது



என்று சொல்லிவிட்டதால் பியூன் உட்பட எல்லாரும் போய் விட்டார்கள்.

ஒரு மாணவி வந்தாள். அம்மா அப்பாவுக்குத் தெரியாமல் சினேகிதிகளுடன் சேர்ந்து நிறையச் செலவழித்து விட்டாளாம். சுமார் முன்னூறு ரூபாய் கடன் இருக்கிறதென்றும், எப்படி அதைச் சமாளிப்ப தென்று தெரியவில்லை என்றும் குரல் தழுதழுக்கச் சொன்னாள். பெற்றோரிடமிருந்து அந்த விஷயத்தை மறைப்பது சரியல்ல என்று புத்திமதி கூறினேன். அவளுடைய தந்தையிடம் நானே பக்குவமாகச் சொல்லிச் சரி செய்கிறேனென்று கூறியதும் கண்ணைத் துடைத்துக் கொண்டு சென்றாள்.

இன்னொருத்தி, கிட்டதட்ட வைத்தியப் பிரசினை. மூன்று வருடம் முன்புதான் 'பெரியவ' ளானாளாம். ஒவ்வொரு முறையும் வயிற்றை அநியாயமாய் வலிக்கிறதாம். வீட்டில் சித்தியின் அதிகாரமாம். அவளைக் கவனிப்பதில்லையாம். கல்லூரி டாக்டரிடம் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வெட்கமாக இருக்கிறது என்றாள். அது தப்பு என்று சொல்லி, 'ஸானிடரி பேட்' எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லித் தந்து, டாக்டரைக் கேட்டு அந்தச் சமயத்துக்கான மாத்திரைகளை வாங்கித் தருவதாகவும் வாக்களித்தேன். சந்தோஷமாகப் புறப்பட்டுச் சென்றாள்.

மூன்றாமவள். ரொம்ப நேரம் சரியாகவே சொல்லவில்லை. என்னென்னவோ சுற்றி வளைத்துப் பேசிக் கொண்டிருந்தாள். கடைசியில் கண்டு பிடித்தேன். அவள் பி.ஏ.மாணவி-ஆனால் ஒரு எஸ்.எஸ்.எல்.சி.பையனிடம். காதல் ஏற்பட்டிருக்கிறது.

உடற் கூறுபடி பார்த்தாலும் சரி, அறிவு வளர்ச்சிப்படி பார்த்தாலும் சரி, இதெல்லாம் பொருந்தாது என்று சொன்னேன். தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள். என் புத்திமதியைக் கேட்பாள் என்று தோன்றவில்லை. 'பாய் ஃப்ரண்ட் வைத்துக் கொள்வதென்பது ஒவ்வொரு மாணவிக்கும் ஒரு 'கௌரவப்' பிரச்சினையாகி விட்டது இப்போதெல்லாம். வேறொரு தகுதியான நண்பன் கிடைத்தால் தான் இந்த எஸ்.எஸ்.எல்.சி. பையனை அவள் விடுவாள். இவள் மீது ஒரு கண் வைத்துக் கொள்ள வேண்டும் என்று மனசுக்குள் குறித்து வைத்துக் கொண்டேன்.

மேலும் பதினைந்து நிமிடம் காத்திருந்தேன்.

எந்த மாணவியும் வரவில்லை. முக்கியமாக யாரை நான் அதிகம் எதிர்பார்த்தேனோ அந்தக் கீதாவைக் காணவே காணோம். ஏமாற்றமாயிருந்தது.

ஆனால் நான் முயன்றிருந்தால்கூட அவளைத் திருத்தியிருக்க முடியாது என்பதை வெகு விரைவிலேயே கண்டு கொண்டேன். வெளிப் பார்வைக்கு நல்லவள் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு உள்ளூர பாம்பாக இருக்கிற அபாயகரமான பிறவிகளில் கீதாவும் ஒருத்தி என்று தெரிந்து கொள்ள அடுத்தடுத்து இரண்டு சம்பவங்கள் நடைபெற்றன.

முதலாவது 'காப்பி' சமாசாரம். காப்பி அடிக்கிற சமாசாரம்.

இதை நான் சொன்னவுடனேயே அனுபவமுள்ள ஆசிரியைகள் சிரிப்பார்கள். ஏனென்றால் இது அவ்வளவு சாதாரண விஷயமாகிவிட்டது இப்போ



தெல்லாம். நான் பள்ளியில் படித்துக் கொண்டிந்த காலத்தில், காப்பியடிப்பது மாபெரும் குற்றம். பள்ளிக் கூடத்திலிருந்தே நீக்கி விடுவார்கள் என் தலைமையாசிரியை. பிறகு பி.யூ.ஸிக்கு நான் வந்த போது, காப்பியடிப்பதை விரிவுரையாளர்கள் கண்டும் காணாததுமாக விட்டு விடுகிறார்கள் என்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். பி.ஏ. வகுப்புக்கு வந்த பிறகோ இன்னும் மோசம். 'தெரியாத போது தெரிந்தவரைப் பார்த்து எழுதுகிறோம். இதிலென்ன தப்பு?' என்று ஆண்கள் கல்லூரி, பெண்கள் கல்லூரி இரண்டிலுமே உரிமையாகக் கோருகிறார்கள்.

நான் வயதில் சின்னவளானாலும் இந்த விஷயத்தில் கொஞ்சம் கர்னாடகமாக இருந்தேன். அது தப்பாய்ப் போய்விட்டது.

இத்தனைக்கும் அது மாதாந்தர தேர்வு தான்.

முப்பது கேள்விகள் கொடுத்திருந்தேன். எல்லாம் இந்தக் காலத்துப் பரீட்சை முறைப்படி ஆப்ஜக்டிவ் டைப் - மல்டிப்பான் சாய்ஸ் அதாவது, நீள நீளமாய் பல கேள்விகள் இருக்கும். எது சரி என்று டிக் செய்தால் போதும்.

கேள்விகளைக் கொடுத்துவிட்டு, வகுப்பில் குறுக்கும் நெடுக்கும் உலாத்திக் கொண்டிருந்தேன். நான் கண்டிப்புக்காரி என்பதைத் தெரிந்து கொண்டிருந்த மாணவிகள், அக்கம் பக்கம் பார்க்காமல் விடையெழுதுவதற்கு மூளையைக் கசக்கிக் கொண்டிருந்தார்கள்.

யாரோ மேஜை மீது பென்ஸிலால் தட்டுகிற ஓசை கேட்டது. சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறவர்கள் இருப்புக்

கொள்ளாமல் போடும் ஓசை என்று முதலில் நினைத்தேன். பிறகு டக் டக் டக் டக டக என்று அதில் ஒரு குறிப்பிட்ட தாளமும் லயமும் இருக்கிற மாதிரி தோன்றியது.

அந்த ஓசையின் நோக்கத்தையும் கண்டுபிடித்து விட்டேன். சரியா தப்பா என்பதுதானே கேள்வி? பென்ஸிலால் ஒரு தட்டுத் தட்டினால் சரி என்று அர்த்தம். இரண்டு தட்டுத் தட்டினால் தவறு என்று அர்த்தம்.

விடை தெரிந்த மாணவி விடை தெரியாத மாணவிக்குச் சொல்லிக் கொடுக்கிறாள் என்று புரிந்து கொண்டேன். யார் தாளமிடுவது என்று கவனித்தேன்.

கீதாதான். அதிர்ச்சியாயிருந்தது.

கிட்டே போய் நின்று புன்சிரிப்புடன், ''என்ன, யோசனை செய்யறியா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்'' என்றாள்.

''இருந்தாலும் உன் சிந்தனை மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கக் கூடாதல்லவா?'' என்று சொல்லி, ''அந்தப் பென்ஸிலை இப்படிக் கொடுக்கிறாயா? கிளாஸ் முடிந்ததும் திருப்பித் தருகிறேன்'' என்றேன்.

அவள் தரவில்லை. ''இதென்ன மேடம், மூளையைச் சுறுசுறுப்புப் படுத்திக் கொள்வதற்காக டெஸ்கில் தாளம் போட்டால் அது ஒரு தப்பா?'' என்றாள்.

கீதாவா இப்படித் திமிராகப் பேசுகிறாள்!

''அதான் சொன்னேனே, மற்றவர்களுக்கு இடைஞ்சலாயிருக்கக் கூடாது என்று?''



37824
54778774

''இடைஞ்சல்னு நீங்க தான் சொல்றீங்க? இவங்க யாரும் சொல்லலியே?'' என்றவள் வகுப்பைத் திரும்பிப் பார்த்து, ''ஏண்டி, நான் பென்ஸிலில் தாளம் போடுவதாலே உங்களில் யாருக்காவது இடைஞ்சலா?'' என்றாள்

''சீ, சீ! கிடையாது! நீ தவுலே வாசிச்சால் கூட எங்களுக்கு நோ அப்ஜக்‌ஷன்!'' என்று ஒருமுகமாக அவள் தோழிகள் பதிலளித்தார்கள்.

அவள் என்னைப் புன்சிரிப்புடன் பார்த்தாள்.

''வெறுமே தாளம் போட்டுக் கொண்டிருந்தால் கூடப் பரவாயில்லை. நீ யாருக்கோ ஆன்ஸர்கள் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறாய்'' என்று குற்றம் சாட்டினேன்.

''இருக்கட்டுமே? இத்தனை நாள் நீங்கள் சொல்லிக் கொடுத்த பிறகும் ஒருத்திக்குப் பாடம் விளங்கவில்லையென்றால் நான் உதவி செய்வதிலே என்ன தப்பு?'' என்றாள்.

வகுப்பு மொத்தமும் சிரித்தது.

என் அதிகாரம், ஆற்றில் இறங்கிய மண் குதிரையாகப் பொலபொலவென்று கரைவதைக் கண்டேன். இனி மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதுதான் மேலென்று பட்டது.

''ஸில்லி கேர்ள்!'' என்று அவளைச் செல்லமாய்க் கோபிக்கிற மாதிரி கோபித்துவிட்டு, வகுப்பின் சிரிப்பில் கலந்து கொண்டேன்.

பிற்பாடு முதல்வரிடம் இதைப் பற்றிச் சொன்னபோது, ''இதோ பார், இவர்களெல்லாரையும்

நாலு வருஷம் போல நாம் கட்டிக் கொண்டு மாரடிக்க வேண்டுமென்பது கடவுள் இட்டிருக்கும் விதி. எத்தனை 'ட்ரபிள்ஸம்' மாணவியாக இருந்தாலும் என்றைக்காவது ஒரு நாள் அவள் காலேஜை விட்டுப் போய்விடுவாள். சில வருஷங்கள் கழித்து அவளே ஒரு நாள் தன் குழந்தையையும் கணவனையும் அழைத்துக் கொண்டு வந்து, 'மேடம்... நீங்க எத்தினி பிரியம் வைச்சிருந்தீங்க என் மேலே...' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு, தன் கணவனை அறிமுகம் செய்து வைப்பாள். அப்போது நாமும் 'பாவி! என் கண்ணிலே எப்படி விரலைக் கொடுத்து ஆட்டினே நீ!' என்று நினைத்துக் கொள்வோம். நான் இருபத்தைந்து வருஷமாய்ப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். விடு கழுதை!'' என்றாள்.

அவர் சொன்ன தோரணை அப்போதைக்கு வேடிக்கையாக இருந்தாலும், சீதாவிடம் பட்ட சிறுமை அவ்வளவு சுலபமாய் மறந்துவிடவில்லை எனக்கு. இந்த முதல்வர் எதையும் ஸீரியஸாய் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறாரே என்று கோபம் வந்தது. ஆனால் இத்தனை வருஷமாய் அவர் தொடர்ந்து முதல்வராக இருப்பதன் ரகசியமே அதுதானோ என்னவோ.

பதினைந்து நாள் போயிருக்கும்.

கல்லூரியில் 'இளமை விழா' அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாட்டியம், நாடகம், இசை நிகழ்ச்சி என்று கல்லூரி மண்டபம் இரண்டு பட்டுக் கொண்டிருந்தது. இந்த ஒரு வார நிகழ்ச்சிக்கு, ஆண்கள் கல்லூரியிலிருந்து சிறப்பு அழைப்புப் பெற்று மாணவர்கள் வரலாம் என்று அனுமதித்திருந்தார்கள். அந்த விசேட அழைப்பு தங்கள் தங்கள் 'பாய்



ஃப்ரண்ட்'க்குக் கிடைக்கிற மாதிரி கெட்டிக்காரியான மாணவிகள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். ஆகவே 'இளைஞர் விழா' மேலும் கோலாகலமாகி விட்டது.

அன்று ஒரு 'மிமிக்ரி.' பியூஸி வகுப்பு மாணவி யொருத்தி, பாகவதர் போல வேடம் போட்டுக் கொண்டு கதா காலட்சேபம் நடத்திக் கொண்டிருந்தாள். ஒரே சிரிப்பு மயமாயிருந்தது.

சிரித்துச் சிரித்து எனக்கு விக்கலெடுத்ததால் தண்ணீர் குடிப்பதற்காக வெளியே வந்தேன்.

வெராந்தாவில் பியூன் மாசிலாமணி சீதாவிடம் பணம் வாங்கிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது. ஐந்து ரூபாய் நோட்டுக்களாக நாலைந்து இருக்கும் அவளிடம் கைநீட்டி வாங்கிக் கொண்டிருந்தான்.

என்னைக் கண்டதும் அவன் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். சீதா போய்விட்டாள்.

''என்ன மாசி அது? எதுக்கு பணம் வாங்கிக்கிறே?'' என்று கேட்டேன்.

''கைமாத்தும்மா.... வீட்டிலே ரொம்பக் கஷ்டம்...'' என்றான். அவனும் போய்விட்டான்.

என் பின்னாலேயே ஒரு குமாஸ்தா வந்து நின்றாள். ''அவன் சொன்னதை நம்பிட்டீங்களா?'' என்றாள்.

''ஏன். பொய் சொல்கிறானா?'' என்றேன்.

''அது கை மாற்று இல்லை. லஞ்சம்'' என்றாள் அவள்.

''எதற்கு?''

''கிளாசுக்கு மட்டம் போட்டுப் போட்டு டேர்ம்டேஸ் இல்லாமல் பண்ணிட்டிருப்பாங்க. கிளாசிலே லெக்சரர்கள் சும்மா பேப்பரில் தானே அட்டெண்டென்ஸ் எடுக்கிறாங்க. அதைப் பார்த்து இந்தப் பியூன்கள் தான் அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டர்லே பதிவு செய்யணும். அப்படிச் செய்யறப்போ, ஆப்ஸன்ட்டையெல்லாம் பிரஸென்ட் போட்டு வைப்பாங்க... அதுக்காக அவர்களுக்கு இனாம்! எல்லா ஸ்டூடண்ட்களும் கொடுக்கிறாங்க. எல்லாப் பியூன்களும் வாங்கறாங்க!''

என்ன மோசடி!

இதிலாவது முதல்வர் கண்டிப்பாக இருப்பாரென்று எண்ணியவளாகத் திருமதி லீலாவிடம் போய்ச் சொன்னேன்.

''எனக்கும் அப்படி ஏதோ பராபரியாய்க் காதில் விழுந்தது'' என்றவர் மாசியை வரவழைத்து என் எதிரிலேயே விசாரித்தார்.

''இல்லீங்கம்மா... சும்மா கைமாத்தாத்தான் கொடுத்திச்சு அந்தப் பொண்ணு'' என்று அவன் சாதித்தான்.

கீதாவையும் கூப்பிட்டனுப்பினார்.

''உங்ககிட்டே உண்மையைச் சொல்ல என்ன தயக்கம், மேடம்?'' என்றாள் கீதா. ''லெக்சரர் சொல்வது உண்மை தான். ஆனால் ஒன்று. இந்தப் பியூன்களுக்கு, பாவம், சம்பளம் ரொம்பக் கம்மி. இந்த மாதிரி நாங்க ஸ்டூடண்ட்கள் அப்பப்ப கொடுக்கிற இனாமிலேதான்



ஏதோ அரைப் பட்டினியும் கால் பட்டினியுமாய் வாழ்க்கையை ஓட்டறாங்க...''

''நல்லாயிருக்குதே நியாயம்.'' என்று முதல்வர் சீறினார். ''இவன் பண்ணியிருக்கிற தப்புக்கு இவனை ஸஸ்பெண்ட் செய்யப் போகிறேனாக்கும்? அப்புறம் நீயா காப்பாற்றுவே?''

''அப்படியொரு நிலைமை வந்தால் காப்பாற்றாமல் போக மாட்டோம்!'' என்றாள் கீதா. ''காலேஜிலே இருக்கிற ஆயிரத்தைன்னூறு ஸ்டூடண்ட்களும் சேர்ந்து காப்பாற்றுவோம். பிறகு பியூன்கள், குமாஸ்தாக்கள், லெக்சரர்கள் முதலிய ஸ்டாஃபும் எங்களோடு சேர்ந்து காப்பாற்றினாலும் காப்பாற்றுவாங்க. அதனாலே மாசிமீது நடவடிக்கை எடுக்குமுன் ரீகன்ஸிடர் பண்ணுவது நல்லது!''

முதல்வரது முகத்தில் ரத்தம் கொதித்தது இந்தச் சவாலைக் கேட்டவுடன். காலேஜ் மொத்தமும் வேலை நிறுத்தம் செய்யும் என்றல்லவா இவள் பயமுறுத்துகிறாள்!

''கெட் அவுட்! கெட் அவுட் ஐ ஸே!'' என்று கத்தினார். அவர்கள் போய்விட்டார்கள். போகுமுன் கீதா என்னைப் புன்னகையுடன் திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றாள்.

தலையைக் கைகளில் புதைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டார் திருமதி லீலா.

நான் சற்று நேரம் காத்திருந்து விட்டு அவர் தலை நிமிராததால் வெளியே வந்தேன்.

கீதாவின் சொரூபம் தெரிந்து விட்டது.

இவளையா நான் பழியிலிருந்து காப்பாற்றினேன்!

அன்று ஆராய்ச்சியாளர் கூண்டில் மரித்துக் கிடந்த ஞானாம்பாளின் உருவம் என் கண் முன்னே தோன்றியது. வெறித்திருந்த அந்த விழிகள் 'இப்போது புரிகிறதா?' என்று என்னைக் கேட்கிற மாதிரி இருந்தது.

செத்துப் போன அந்தப் பேராசிரியைக்கு எப்பேர்ப் பட்ட துரோகம் செய்து விட்டேன்!

பலவீனமான, அப்பாவியான ஞானாம்பாளை இந்தக் கீதா எத்தனை கொடுமைப் படுத்தினாளோ! தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு அவளை எப்படியெல்லாம் வாட்டி எடுத்தாளோ! சை! அவளுடைய நியாயமான வேதனையைப் போய் நான் மறைத்தேனே!

இப்போதும் ஒன்றும் குடி முழுகி விடவில்லை. வீட்டில் அலமாரியில் அந்தக் கடிதம் பத்திரமாகத் தான் இருக்கிறது. சேர்ப்பித்து விடலாம் போலீசாரிடம்...

ஆனால்..ஆனால்...என்னவோ ஒன்று என்னைத் தடுத்தது. என்னைத் தைரியக்காரி என்று இதுவரை நினைத்துக் கொண்டிருந்தேன். உண்மையில் பயந்த சுபாவக்காரி தான் என்பதை இன்று புரிந்து கொண்டேன்.

நான் குழம்பினேன். எனக்குத் துணை செய்ய, சரியான வழி காட்ட, யோசனை சொல்லிக் கொடுக்க, ஒருத்தர் கூட இல்லையே என்று தவித்தேன்.

தெய்வமே எனக்காக அனுப்பி வைத்த மாதிரி விஜ்ஜு வந்து சேர்ந்தான்.

அதற்கு என் அம்மாவும் அப்பாவும் புண்ணியம் கட்டிக் கொண்டார்கள்.

# 5

எம்.ஏ. வகுப்பில் பாடம் இருந்ததால் ஃபெர்கூச னின் புத்தகத்தை வைத்துக் கொண்டு வீட்டில்குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தேன்.

''சௌமி! உன் அம்மா வர்றாளாம்! ஊரிலிருந்து லெட்டர் வந்திருக்கு!'' என்று உற்சாகமாகச் சொல்லிக் கொண்டே உள்ளே வந்தாள் பாட்டி.

''த்சு'' என்றேன்

''என்னடி சூள் கொட்டறே? ரெண்டு வருஷம் ஆச்சாக்கும் குழந்தையும் மாப்பிள்ளையும் இங்கே வந்து. இரண்டு நாள் இருந்து விட்டு மைசூர் போகப் போகிறார்களாம். பத்து நாளாவது நம்மோடு இங்கே தங்குன்னு சொல்லணும்.''

பாட்டிக்குத் தன் பெண்ணும் மாப்பிள்ளையும் வருவதைப்பற்றி ஏகப்பட்ட சந்தோஷம். எனக்கு அந்தச் சந்தோஷம் செத்துப்போய் வெகு காலமாகிறது.

அறிவு தெரிந்த நாள் முதல் என்னை என் (அம்மா வழி) தாத்தாவும் பாட்டியும் தான் வளர்த்து வருகிறார் கள். பஞ்சாபிலோ ஹரியானாவிலோ இருந்து வரு கிறார்கள், என் பெற்றோர். ஒரு மருத்துவ நிறுவனத்தில் அப்பா நிர்வாகியாக இருக்கிறாராம். மாசம் நானூறு ரூபாய் அனுப்பி வருகிறார். பண்டிகை சமயங்களில் சில சமயம் நூறு ரூபாய் வரும். கடிதங்களில் சௌமி சௌக்கியமா என்று ஒரு வரி இருக்கும். அவ்வளவு தான்

உறவு. நான் சம்பாதிக்க ஆரம்பித்ததும் அந்தப் பணத்தை நிறுத்திவிட வேண்டும் என்று எண்ணியிருக்கிறேன்.

''உன் அம்மாவுக்கு ஒரு கார்டு போடேன், சௌமி'' என்று பாட்டி அடிக்கடி சொல்வாள். ''உன் கையால் எழுதியதைப் பார்த்தால் அவளுக்கு எத்தனை சந்தோஷமாயிருக்கும்!''

ஆகட்டும் என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்து விடுவேன். அம்மாவாகட்டும் அப்பாவாகட்டும் எனக்காக ஒன்றும் ஏங்கவில்லை என்பது எனக்குத் தெரியும்.

எனக்கு ஒன்பது வயதாகிக் கொண்டிருந்த போது ஒரு முறை அவர்கள் வந்திருந்தார்கள். காஞ்சிபுரத்தில் ஆரம்பித்துக் கன்னியாகுமரி வரை போய் வருவதாக அவர்கள் சுற்றுப்பிரயாணத் திட்டம். என்னையும் கூட அழைத்துப் போவதாக இருந்தது.

அப்போது நாங்கள் லால்குடியில் பெருமாள் கோவில் தெருவில் வசித்து வந்தோம். நான் ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன்.

இரண்டு பெரிய பெட்டிகளுடன் அம்மாவும் அப்பாவும் மாட்டு வண்டியில் வந்து இறங்கியது இப்போது தான் போலிருக்கிறது. நான் வாசல் திண்ணையில் ஆவல் துடிக்க அவர்களுக்காக உட்கார்ந் திருந்தேன். வண்டியைக் கண்டதும் குதித்துக் கொண்டு இறங்கினேன்.

இரண்டு பேரில் யாரும் என்னை வாரியணைத்துத் தூக்கிக் கொள்ளவில்லை. வண்டிக்காரனிடம் கூலி



பேரம் செய்வதும் பெட்டியைக் கொண்டு போய் உள்ளே வைப்பதுமாக இருந்தார்கள். ''சௌமியைப் பார்க்கலியே?'' என்று பாட்டி ஞாபகப்படுத்தும் வரை அவர்கள் வேலை அவர்களுக்கு. ததும்பும் தண்ணீர் எனக்கு என்று நான் காத்துக் கொண்டிருந்தேன்.

''சௌமி எவ்வளவு பெரிசாய் வளர்ந்துட்டுது பார்த்தீங்களா!'' என்று அம்மா என் கன்னத்தில் தட்டினாள். 'அட, ஆமாம்'' என்று அப்பா மறு கன்னத்தில் தட்டினார்.

பல் விளக்கிக் காப்பி சாப்பிட்டார்கள்.

கூடத்திலிருந்த ஊஞ்சல் பலகையில் பெட்டியைப் பிரித்து வைத்துக் கொண்டாள் அம்மா. தன் புடவைகளையெல்லாம் வெளியே எடுத்து வைத்து அடுக்கினாள். ''இது பம்பாயில் வாங்கினேன். அது பரோடாவில் வாங்கினேன்'' என்று பாட்டியிடம் காட்டிவிட்டுத் திரும்பப் பெட்டிக்குள் வைத்து மூடினாள்.

''ஏன்டி, சௌமிக்கு ஒண்ணும் வாங்கிக் கொண்டு வரலியா?'' என்று பாட்டி ஆற்ற மாட்டாமல் கேட்டு விட்டாள்.

அம்மா இமை கூடக் கொட்டவில்லை. ''சௌமிக்கா? எதுக்காக? இங்கே கிடைக்காத துணியா!'' என்றாள்.

சாயந்தரம் கடைக்கும் கோவிலுக்கும் போய்விட்டு வருகிறோம் என்று கிளம்பினார்கள். போனால் போகிறதென்று என்னையும் அழைத்துக் கொண்டார்கள். கடைத் தெருவிலிருந்த ஒட்டலுக்குப் போனோம். எங்கள்

ஊரிலேயே பெரிய ஒட்டல். அங்கே பாதாம்கீர் வாங்கி, 'ஸ்ட்ரா' வைத்துச் சாப்பிட வேண்டும் என்று எனக்கு ரொம்ப நாளாக ஓர் ஆசை. ''என்ன சாப்பிடறே?'' என்று அம்மா என்னைக் கேட்கும் போது அதைத்தான் சொல்ல நினைத்திருந்தேன். அம்மா கேட்கவேயில்லை. சர்வர் வந்ததும் ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று தங்களைத் தான் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டார்கள். தாங்கள் சாப்பிடவிருந்த மசால் தோசையையும் வடையையுமே எனக்கும் வரவழைத்தார்கள்.

கோவிலுக்குப் போகும் வழியில் ''ஏன் என்னவோ போலிருக்கிறே?'' என்று அம்மா கேட்டாள். எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது. பதில் சொல்லவில்லை.

அடுத்த நாள் சினிமாவுக்குப் போனார்கள். என்னோடு தான். என்னை நடுவில் உட்கார்த்தி வைத்து இந்தப் பக்கம் அம்மாவும் அந்தப் பக்கம் அப்பாவும் உட்காருவார்கள் என்று எதிர்பார்த்தேன். தாங்களே பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்த கொண்டு என்னை மூன்றாவது ஸீட்டில் உட்கார்த்தி வைத்தார்கள். கொஞ்ச நேரம் வரை புழுங்கிக் கொண்டிருந்தேன். பிறகு படம் சுவாரசியமாயிருந்ததால் அதைப் பார்ப்பதில் ஈடுபட்டேன்.

இடைவேளை ஆகிப் பத்து நிமிஷம் ஆகியிருக்கும். 'சகிக்கலை படம். வீட்டுக்குப்போகலாம்' என்றார் அப்பா. 'ஆமாமாம். நானே சொல்ல நினைத்தேன்' என்றாள் அம்மா. இரண்டு பேரும் எழுந்து கொண்டு விட்டார்கள்.

''படம் நல்லாயிருக்கும்மா'' என்றேன் நான் அழாத குறையாக.



''சீசி! பட்டிக்காடு! இதைப் போய் நல்லா இருக்கு என்கிறாயே! எழுந்திரு!'' என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டாள்.

சுற்றுப் பயணத்துக்குக் கிளம்புகிற நாள் வந்தது.

''சௌமி, பாட்டியைக் கேட்டுக் கொண்டு உன் துணிமணிகளை எடுத்து வைத்துக் கொள்'' என்றாள் அம்மா.

''நான் வரல்லே'' என்றேன்

''ஏண்டி?'' என்று திகைத்தாள்.

'நான் வரல்லே'' என்றேன் மறுபடியும்.

பாட்டியும் தாத்தாவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் உள்ளூர ஆறுதல். ''ரொம்ப வீம்புக்காரி'' என்று என்னைக் கண்டிக்கிற மாதிரி பாசாங்கு செய்துவிட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

அதற்குப் பிறகு அம்மாவையும் அப்பாவையும் பற்றி அலட்டிக் கொள்வதை நான் அடியோடு விட்டு விட்டேன். எப்போதாவது ஒரு முறை அவர்கள் தமிழ் நாட்டுக்கு வருவதும், ''எவ்வளவு வளர்ந்துட்டாள்!'' என்று கன்னத்தில் தட்டுவதும், நான் மரியாதைக்காகப் புன்னகை செய்வதும் ஒரு சடங்காக ஆகிவிட்டது.

என்னைப் போலவே தாத்தாவும் இவர்களுடைய சுபாவத்தை எப்போதோ கண்டு கொண்டிருந்தார். பாட்டி மாதிரி அவர்களைக் கண்டதும் குதித்துக் கூத்தாடுவது கிடையாது. வந்தாயா, சரி. வரவில்லையா. அதற்கும் சரி.

வியாழக்கிழமை காலையில் அம்மாவும் அப்பாவும் வந்து சேர்ந்தார்கள். ''ஹலோ! ஹௌ ஆர் யூ!'' என்று அப்பா என் முதுகில் தட்டிக் கொடுத்தார். ''குண்டாகி இருக்கியே?'' என்று என்னைத் தொடாமலேயே நலம் விசாரித்தாள் அம்மா.

காப்பி டிபனெல்லாம் முடிந்தது.

''நானும் உன் அப்பாவும் எவ்வளவோ சொன்னோம். சௌமி கேட்கலே'' என்றாள் பாட்டி.

''என்ன விஷயத்திலே?'' என்றாள் அம்மா. அப்பா அது கூடக் கேட்கவில்லை. முகக்ஷவரம் செய்து கொள்வதில் மும்முரமாயிருந்தார்.

''சரிதான் போ. விடிய விடிய ராமாயணம் கேட்டு விட்டு சீதைக்கு ராமன் சித்தப்பாவா பெரியப்பாவான்னு கேட்ட மாதிரி தான் இருக்கு!'' என்றாள் பாட்டி. ''உனக்குக் கடிதாசி போட்டேனேடி, சௌமி வக்கீல் வேலைக்குப் போகாமல் காலேஜில் லெக்சரர் வேலைக்குப் போயிட்டாள்னு? ஞாபகமில்லையா?''

''ஓகோ, அதுவா?'' என்றாள் அம்மா. நிச்சயமாய் அது அவளுக்கு நினைவில்லை என்பது தெரிந்தது. பாட்டி தன் முகம் கறுத்ததைக் காட்டிக் கொள்ளப் பயந்து சமையலறைக்குத் திரும்பிவிட்டாள். நானும் தாத்தாவும் ஒருத்தரையொருத்தர் ரகசியமாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டோம்.

மறுநாள் இரண்டு பேரும் சாப்பிட்டு முடித்ததும் வெளியே கிளம்புவதற்குத் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.



''மாப்பிள்ளை..எங்காவது அவசரமாய் வெளியே போகணுமா?'' என்றாள் பாட்டி.

''ஆமாம்... என்ன விஷயம்?'' என்றார் அப்பா. பாட்டியிடம் அவருக்குக் கொஞ்சம் மரியாதை உண்டு-பிரியம் இல்லாமற் போனாலும்.

''அந்தக் கடன்காரப் பாவி-விருகம்பாக்கம் வீட்டிலே நாங்க குடித்தனம் வைத்திருக்கிறோமே, அவன்- ஆறு மாசமாச்சு, வாடகையே தரலை..''

வீட்டுப் பேச்சை எடுத்ததுமே தாத்தா வேறு ஏதோ வேலையை மும்முரமாகக் கவனிக்கிற மாதிரி பாசாங்கு செய்தார்.

''ராஸ்கல் கெடுத்தானே!'' என்றார் அப்பா.

''நான் பொம்மனாட்டியே போய் எத்தனை நாளைக்குக் கேட்கிறது? அவனுக்குப் பயமில்லாமல் போச்சு. போன வாரம் கூடப் போயிருந்தேன். வீடு பூட்டியிருக்கு... யாராவது ஆம்பிளைகள் போய்ச் சத்தம் போட்டால் நன்றாயிருக்கும். நீங்க என்னோடு வந்து ஒரு அதட்டல் போட்டால்...''

அப்பா தலையைச் சொறிவதை நான் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அம்மா குறுக்கிட்டாள்: ''தேவியில் டிக்கெட் ரிசர்வ் பண்ணியிருக்கு அம்மா இன்னைக்கு. அப்புறம் கிடைக்காது. நாங்களும் நாளைக்கு ஊருக்குக் கிளம்பிடறோம்.''

''நீ சும்மா இருடி. நான் மாப்பிள்ளையைன்னா கேட்டேன்?'' என்று சொல்லி அப்பாவின் முகத்தைப் பார்த்தாள் பாட்டி. எனக்குப் பரிதாபமாக இருந்தது.

'ஆல் ரைட்! நான் அவனை உண்டு இல்லேன்னு பண்ணிடறேன். நீங்க கவலைப்படாதீங்க'' என்றார் அப்பா. 'அட!' என்று நானும் தாத்தாவும் ஆச்சரியப்பட்டு அடங்குமுன் அப்பாவிடமிருந்து தொடர்ந்து வந்தது வார்த்தை: ''ஆனால் இப்ப வேண்டாம். மைசூரி லேருந்து திரும்பி வந்ததும் நாலு நாள் மெட்றாசில் தங்குகிறோம். அப்ப கவனிச்சுக்கிறேன். அந்தப் பயலை!''

தாத்தா சிரிப்பை அடக்கிக் கொள்ள வாசலுக்குப் போய்விட்டார். எனக்குச் சிரிப்பு வரவில்லை. பாட்டியின் தவிப்பைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

அம்மாவும் அப்பாவும் வெளியே புறப்பட்டுப் போன பிறகு. 'என்ன, நீங்கள் கொஞ்சம் இதைக் கவனிக்க மாட்டீர்களா?'' என்றாள் பாட்டி, வாசலில் நின்றிருந்த தாத்தாவிடம்.

''இதோ பார். இந்த வீட்டு விவகாரத்தை என்கிட்டே கொண்டு வராதேன்னு உன்னிடம் ஆயிரம் தடவை சொல்லியாச்சு!'' என்று கண்டிப்புடன் சொன்னார் தாத்தா.

பாட்டி, தனக்கு 'மஞ்சக்காணி'யாக வந்த பணத்தைக் கொண்டு, விருகம்பாக்கத்துக்குப் பக்கத்தில் ஒரு பழைய வீட்டை வாங்கி, மேற்கொண்டு கொஞ்சம் செலவழித்துப் புதுப்பித்து, வாடகைக்கு விட்டிருந்தாள். நாங்கள் கோடம்பாக்கத்தில் பஸ்ல்லா ரோடுக்கு சமீபமாகக் குடியிருந்தோம். இந்த வசதி எங்கேயும் வராதென்று சொல்லி, தாத்தா குடி பெயர மறுத்து விட்டார். ஆகவே விருகம்பாக்கம் வீட்டை முதலில் ஒரு



கள்ளுக்கடை முதலாளிக்கு (அப்போது மதுவிலக்கு இல்லாதிருந்த சமயம்) வாடகைக்கு விட்டாள் பாட்டி. அவன் அட்வான்ஸ் தொகை கழிகிற வரையில் இருந்துவிட்டு மூன்று மாதத்தில் போய்விட்டான். பிறகு ரொம்ப நாள் பூட்டியே கிடந்தது வீடு. அதன் பின் இப்போதைய ஆள் வந்தான். இவனுக்கு என்ன உத்தியோகம் என்றே தெரியவில்லை. தவளைக் கால் ஏற்றுமதி செய்கிறான் என்று யாரோ சொன்னார்கள். பாட்டி தலையில் அடித்துக் கொண்டு, வாடகை ஒழுங்காக வந்தால் சரி என்று சமாதானம் செய்து கொண்டாள். முதலில் சரியாய் வந்தது. பிறகு இரண்டு மாசத்துக்கு ஒரு முறை சேர்ந்து வந்தது. அதன் பிறகு, மூன்று மாசத்துக்கு ஒரு முறை ஒரு மாசத்து வாடகை வந்தது. இப்போது கொஞ்ச நாளாய் மூச்சுப் பேச்சுக் காணோம். பாட்டி இரண்டு மூன்று தடவை நேரில் பார்த்து விட்டு வந்தாள். வீடு பூட்டியிருக்கிறதாம்.

தாத்தா இந்த விஷயத்தில் பாட்டிக்குத் துளியும் ஒத்தாசை செய்வதில்லை என்று பிடிவாதமாக இருந்தார். அந்த வீட்டை விற்றால் ஐம்பதாயிரம் தேறுமாம். அதை ஃபிக்ஸட் டெபாசிட்டில் போட்டு வைத்தால் மாதா மாதம் வட்டி சுளையாய் வருமாம். என்னென்னவோ கணக்குப் போட்டு, வீடு கட்டி வாடகைக்கு விடுவதைக் காட்டிலும் முட்டாள்தனம் கிடையாது என்றும் பாங்க்கில் ரொக்கமாய் வைத்திருப்பதே புத்திசாலித் தனம் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார். பாட்டி சொந்தப் பணத்தில் ஒரு வீடு கட்டிக் கொண்டது பற்றி அவருக்குப் பொறாமை என்று எனக்குத் தோன்றியது.

இன்று பாட்டியை அப்பாவும் இப்படி உதாசீனப் படுத்தி, தாத்தாவும் அலட்சியமாகப் பேசியதைப் பார்க்கையில் எனக்குக் கோபம் வந்தது. பாட்டிக்குக் கை கொடுப்பது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

பாட்டி மூக்கை உறிஞ்சுகிற சத்தம் கேட்டது. நான் உள்ளே போனேன்.

''எந்த டெனன்ட்டுக்குக் கல்தா கொடுக்கணும் பாட்டி? அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் பார்'' என்றேன்.

இந்தத் துணையைப் பாட்டி எதிர்பார்க்கவே யில்லை.

''என்ன செய்வே?'' என்றாள் பரிதாபமாக.

''கோர்ட் மூலம் சட்டுப் புட்டென்று நடவடிக்கை எடுத்து அவனை காலி பண்ண வைக்கணும். அதற்கு ஒரு வக்கீலைப் பிடிச்சு இன்னிக்கே விசாரிக்கிறேன். கவலைப்படாமல் இரு'' என்றேன்.

பாட்டி கண்ணைத் துடைத்துக் கொண்டு குரலைத் தாழ்த்திக் கொண்டாள். ''அப்படின்னா ஒண்ணு செய். உன் தாத்தாவுக்கு' நெருங்கிய சினேகிதர் ஒருத்தர் அனந்தசயனம்னு பேர். தியாகராய நகரிலே இருக்கிறார். தாத்தாவுக்குத் தெரிஞ்சால் அவர்கிட்டே போகக் கூடாதுன்னு தடுப்பார். நீ பாட்டுக்குப் போய்ப் பார். அப்புறமாய்த் தாத்தாவிடம் சொல்லிக்கலாம்'' என்றாள்.

அன்று மத்தியானம் கல்லூரியில் கொஞ்சம் அவகாசம் கிடைத்தது. சங்கரனிலிருந்தும் ஸ்டோனியர் அண்ட் ஹேக்கிலிருந்தும் குறிப்பு எடுத்துக் கொண்டிருந்



தேன். போரடித்தது. பாட்டி சொன்னது ஞாபகம் வந்தது. டெலிபோன் டைரக்டரியை எடுத்து வைத்துக் கொண்டு அனந்தசயனங்களைப் பற்றி 'ஸ்டேடிஸ்டிக்ஸ்' எடுத்தேன்.

மொத்தம் நாலு பேர் இருந்தார்கள். ஆனால் ஒருத்தர் தான் தியாகராய நகர்வாசி. சரோஜினி தெரு என்று போட்டிருந்தது.

சாயந்தரம் ஆறு மணி சுமாருக்கு அந்தத் தோட்டம் நிறைந்த வீட்டை அடைந்தேன். கசாமுசாவென்று என்னென்னவோ மரங்களும் செடிகளும் வீட்டை மறைத்துக் கொண்டிருந்தன. முன்புறம் 'ரெடாக்ஸைட்' போட்ட அகலமான நடை இருந்தது. வலப் புறமிருந்த அறையில், ஒரு பெரிய மேஜை போட்டிருந்தது. சிவப்புக் காலிகோ தோல் அதன் மீது போர்த்தி, ஓரத்தில் பித்தளை ஆணிகள் அடித்திருந்தது.

வைரக் கடுக்கனும் தொளதொளவென்ற வெள்ளை முழுக்கை சட்டையுமாக, எட்டு முழம் ஜரிகை வேட்டியைத் தட்டுச் சுற்றாகக் கட்டிக் கொண்டிருந்த பெரியவர்தான் வக்கீல் அனந்தசயனம் என்று தெரிந்தது. ஸ்டெனோ போலிருந்த ஒரு பதினெட்டு வயதுப் பையன், சின்ன டைரியைப் பிரித்து வைத்துக் கொண்டு அந்த மாதம் வரும் வழக்குகளைப் பற்றிய விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான். வக்கீல் என்னை உட்காரும்படி கண்ணாலேயே ஜாடை காட்டினார். வேறு ஏதோவோர் அறையிலிருந்து படபடவென்று தட்டெழுத்து சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

ஸ்டேனோ பையன் போனதும், ''முதலியார் செக்கைக் கொடுத்தனுப்பினாரா?'' என்று என்னைக் கேட்டார்.

அவர் எதிர்பார்த்திருக்கும் நபர் நானல்ல என்று தெரிந்தால் என்ன சொல்லப் போகிறாரோ எனத் தயங்கியபடி, தாத்தாவின் பெயரைச் சொன்னேன்.

நல்ல வேளை, ஏமாற்றம் தெரியவில்லை. ''சௌக்கியமாயிருக்கானா?'' என்று விசாரித்து விட்டு, என்ன விஷயம் என்று கேட்டார்.

இவ்வளவு பெரிய வக்கீலிடம் இத்தனை சின்ன வழக்கைச் சொல்கிறோமே என்று வெட்கப்பட்டபடியே சொல்லி முடித்தேன். குறுக்கே ஒரு வார்த்தை கூடப் பேசாமல், தலையை இரண்டு கையிலும் புதைத்த வண்ணம் கேட்டுக் கொண்டார். நான் முடித்ததும், 'அழகாய், கோவையாய் சொல்றியே? என்ன வேலை பார்க்கிறே?'' என்று கேட்டார். ''காலேஜ் லெக்சரர்'' என்றேன்.

''ஆச்சரியம்தான். இந்தக் காலத்து லெக்சரர்களுக்குப் பெருக்கல் வாய்ப்பாடு கூட ஒழுங்காய்ச் சொல்லத் தெரியாதே?'' என்றார்.

கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தார். பிறகு, ''டெனன்ட்டோடு எழுத்து மூலமாய் அக்ரிமெண்ட் எதுவும் இருக்கிறதா?'' என்றார்.

''இல்லை சார்'' என்றேன்

''மாசாமாசம் ரசீது கொடுத்திருக்கீங்களா?''



''அவன் கேட்டதில்லை, நாங்களும் கொடுத்ததில்லை.''

''அவன் கேட்காவிட்டால் கூட நீங்க ரசீது கொடுத்து, அவன் கிட்டேயும் கையெழுத்து வாங்கிக்கணும் அம்மா. அச்சுப் போட்ட ரசீது புத்தகம் விற்கிறானே? ஒண்ணரை ரூபாய் தான். இரு நூற்றைம்பது ரூபாய் வாடகை வாங்கறப்போ ஒண்ணரை ரூபாயில் ஒரு ரசீது புத்தகம் வாங்கி வைச்சுக்கக் கூடாதா?'' என்றார்.

பேசாமலிருந்தேன்.

''டெனன்ஸி ஆக்ட் பிரகாரம் அவ்வளவு சுலபமாய்க் குடித்தனக்காரரை விரட்டிவிட முடியாது. தெரியறதா? முதல்லே வக்கீல் நோட்டீஸ் கொடுக்கணும். பிறகு கேஸ் போடணும்...''

''வீடு பூட்டியேயிருக்கு சார்'' என்று ஞாபகப் படுத்தினேன்.

''கோர்ட்டில் ஆர்டர் வாங்கித்தான் திறக்கணும்'' என்றார் அனந்தசயனம். ''வீட்டுக்கு சர்வே நம்பர் வைச்சிருக்கியா? ஸிடி எல்லைக்குள் இருக்கா? இல்லை, பஞ்சாயத்தா?''

''தெரியலை சார்.''

''அந்த டீடெய்ல்ஸெல்லாம் கொண்டு வா. ரொம்பக் காலமாகும் பைசலாக, உன் பாட்டியிடம் சொல்லு'' என்றவர் உள்புறம் திரும்பி, ''பத்மாவதி! இந்தக் குழந்தை யார் தெரிகிறதா பார்!'' என்று குரல் கொடுத்தார். எந்தப் பத்மாவதியும் வரவில்லை.

'தூங்குகிறாள் போலிருக்கிறது'' என்றார். அடுத்த தடவை வரும்போது பார்க்கிறேன் என்று கூறிவிட்டு வெளியே வந்தேன்.

மனம் சோர்வாயிருந்தது. பாட்டியின் கவலை அவ்வளவு சீக்கிரம் தீராது போலிருக்கிறது பாவம் என்று நினைத்துக் கொண்டேன்.

''சுமித்ரா!'' என்று பின்னாலிருந்து யாரோ கூப்பிட்டார்கள். நின்றேன்.

இருபத்தெட்டு வயதிருக்கும் அவனுக்கு. மெல்லிய மீசையும் கிருதாவுமாக இருந்தான். இறுக்கமான மஞ்சள் நிற ஸ்வெட்டரும் பாண்ட்டும் அணிந்திருந்தான். குரலில் ஓர் அதட்டல் இருந்தது. என் பெயரைச் சொல்லி உரிமையோடு அவன் கூப்பிட்டது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், ''பெரியவரிடம் நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன்'' என்று அவன் சொல்ல ஆரம்பித்ததும், என் விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொண்டிருந்தவன் என்பதால் என் கோபம் தணிந்து விட்டது. ஆனால் அவன் யாரென்று தெரியவில்லை.

''என் பெயர் விஜ்ஜூ-விஜேந்திரன் என்பதன் ஷார்ட்'' என்று அவன் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். ''பெரியவரிடம் ஜூனியராய் இருக்கிறேன். அவர் உங்களிடம் சொன்னதெல்லாம் சுத்த அபத்தம். ஆனால் அதை அவர் முகத்துக்கெதிரே சொல்ல முடியாததால் இப்படி உங்களைத் துரத்திக் கொண்டு வந்தேன்.''



நான் புன்னகை செய்தேன். ''தாங்ஸ். என்ன அபத்தம்?''

''நோட்டீஸ், கோர்ட், கேஸ் என்று பெரியவர் சொல்கிற வழியில் போனால் வீடு இந்த ஜன்மத்தில் உங்கள் பாட்டி கைக்கு வராது. என்னுதான்.''

''பின்னே வேறே வழி?''

''உங்க வீட்டு விலாசத்தைக் கொடுங்கள். நாளைக்கு நேரில் வந்து சொல்கிறேன்.'' என்றான்.

அவன் அடித்துப்பேசிய விதம் என்னைப் பணிய வைத்தது. ஒரு காகிதத்தில் குறித்துத் தந்தேன்.

விஜ்ஜூ-விசித்திரமான பெயர்-என்று எண்ணிக் கொண்டேன்.

௬

''என்ன ஆச்சு?'' என்று பாட்டி கவலையுடன் கேட்டாள். நான் வக்கீலின் வீட்டிலிருந்து திரும்பியதும்.

''பெரிய வக்கீல் பிரயோசனமில்லை. ஆனால் ஒரு குட்டி வக்கீல் வருவார். கவலைப்படாதே'' என்றேன்.

''அது யார்டி குட்டி வக்கீல்?'' என்றாள் பாட்டி. நான் விவரிக்கவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமைதானே என்று டிரான்ஸிஸ்டரை எடுத்து வைத்துக் கொண்டேனோ

இல்லையோ பாட்டிக்கு மூக்கில் வியர்த்து விட்டது. 'சௌமி! இந்தப் பாத்திரங்களை யெல்லாம் தேய்க்கப் போடறேன். நீ அலம்பி அலம்பி எடுத்து வையேன். மணி ஒன்பதாகப்போகிறது. இந்த முனியம்மா வரக் காணோம்'' என்று கூப்பிட்டாள்.

'விடமாட்டாயே' என்று முணுமுணுத்துக் கொண்டே, புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு டபரா டம்ளர்களைக் குழாயடியில் கழுவினேன்.

''சௌமி! இங்கே யாரோ உன்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறாங்க, பார்!'' என்று தாத்தா வாசலிலிருந்து குரல் கொடுத்தார்.

மடத்தனமாய் அப்படியே வாசலுக்குப் போய் விட்டேன். முழங்கை வரையில் ஈரமும், முகத்தில் சாம்பல் பொடியின் கறைகளும், கலைந்த கூந்தலுமாய்...

ஸ்கூட்டரை நிறுத்திக் கொண்டு விஜ்ஜு நின்றிருந்தான். என் கோலத்தை நினைத்து எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. கொஞ்சம் கூட முன்னெச்சரிக்கை கொடுக்காமல் என்னை வாசலுக்குக் கூப்பிட்ட தாத்தா மீது கோபம் கோபமாய் வந்தது.

''வாங்க, வாங்க'' என்று சமாளித்துக் கொண்டு விஜ்ஜுவை உள்ளே கூப்பிட்டேன். ''உங்க சிநேகிதர் வக்கீல் அனந்தசயனம் இல்லை. அவருடைய ஜூனியர் இவர். விஜேந்திரன் என்று பெயர்'' என்று தாத்தாவுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். ''குண்டன் எப்படி இருக்கிறான்?'' என்று விஜ்ஜுவின் சீனியரைப் பற்றித் தாத்தா விசாரித்தார். (அனந்தசயனம் பரவாயில்லை



தாத்தாவை அவன் என்று சொன்னதோடு நிறுத்திக் கொண்டார்.)

''கொஞ்சம் இளைச்சிருக்கிறார்'' என்றான் விஜ்ஜு.

''இவர் தான் பாட்டி... நான் சொன்னேனே? விருகம்பாக்கம் வீட்டைப் பற்றிக் கவனிப்பதற்காக வந்திருக்கிறார்...'' என்றேன்.

பாட்டிக்கு ஒரே குதூகலம். அவளுடைய வீட்டின் அனாதைத்தனத்தைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்ட முதல் நபர் என்ற வகையில் விஜ்ஜுவை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சாத குறையாக உபசாரம் செய்ய ஆரம்பித்தாள்.

நான் அவசரம் அவசரமாக என் அறைக்குப் போய், தலையை அழுத்தி வாரிக்கொண்டு, முகத்தைத் துடைத்துக் கொண்டு வேறு புடவையும் மாற்றிக் கொண்டேன். கண்ணாடியில் ஒரு முறை பார்த்துக் கொண்டேன். விஜ்ஜுவின் முன்னே முகத்தைக் காட்டலாம் என்று திருப்தி ஏற்பட்டது. ஏன் அவனுடைய அபிப்பிராயத்தைப் பற்றி நமக்கு இத்தனை கவலை என்று எனக்குள் நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டேன்.

விஜ்ஜு காப்பியை உறிஞ்சியபடி பேசிக் கொண்டிருந்தான். ''அதான் ஸ்கூட்டர் எடுத்துட்டு வந்திருக்கேன் அம்மா. பின்னாலே உட்காருவீங்க இல்லையா? நீங்க தான் வந்து வீட்டைக் காட்டணும்.''

பாட்டியின் முகம் வெளிறிப் போயிற்று. (அது தான் அவளுடைய கிட்டம் என்பதை நான் புரிந்து

கொண்டேன்) "ஐயையோ! ஸ்கூட்டரில் ஏறுவதாவது! எனக்குப் பழக்கமேயில்லை" என்று பின் வாங்கினாள்.

தாத்தா ரசித்துக் கொண்டிருந்தார் அந்தச் சூழ்நிலையை. 'உன்னைக் காட்டிலும் பாட்டியா யிருக்கறவங்கள் எல்லாம் ஸ்கூட்டரில் போகிறார்கள். உனக்கென்ன? உன் பேரன் மாதிரி இவன். கெட்டியாய்ப் பிடிச்சுக்கோ," என்றார்.

விஜ்ஜு, "எனக்கு இடம் சரியாய்த் தெரியாதே? அதை நேரில் பார்த்தால் தான் ஒரு ஐடியா கிடைக்கும். அக்கம்பக்கத்திலே விசாரிச்சு, என்ன செய்யலாம்னு ஒரு வழி கண்டுபிடிக்கலாம்..." என்றான்.

பாட்டி என்னைப் பார்த்தாள்.

"சௌமி, வீட்டிலே சும்மாதானே உட்கார்ந்து கொண்டிருக்கிறே?..." என்று ஆரம்பித்தாள்.

"ஐயோ, எனக்கு நாலு டஜன் நோட்டு இருக்கு. திருத்தணும்" என்றேன்.

"ராத்திரி திருத்திக்கலாம். முதல் தரமான டீ போட்டுத் தர்றேன். என் கண்ணில்லையா? உபகாரம் செய்யறேன்னு இவர் மெனக்கெட்டு வந்திருக்கிறார். இந்த ஒத்தாசைகூட நாம் செய்ய வேண்டாமா? உன் தாத்தா தான்...."

"இந்தா, இந்தா. என்னை இழுக்காதே! எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு!" என்று எழுந்து போய் விட்டார் தாத்தா.

"சரி, நான் வருகிறேன்" என்று கொஞ்சம் பிகுவுடன் ஒப்புக் கொண்டேன்.



தாத்தா, பாட்டி என்று சொல்கிறேனே தவிர, அவர்களொன்றும் கட்டுப்பெட்டியில்லை. காலத்தை அனுசரித்துப் போகிறவர்கள்தான். ஓர் இளைஞனின் ஸ்கூட்டரின் பின்னே நான் போவதைக் குறித்து முகம் சுளிக்கவில்லை. என்னிடம் எவ்வளவு பிரியம் உண்டோ அத்தனை நம்பிக்கையும் உண்டு.

மறுபடியும் ஒரு முறை உடைமாற்றிக் கொண்டு, கொஞ்சம் முகத்துக்கும் மேக்கப் செய்து கொண்டு விஜ்ஜுவுடன் புறப்பட்டபோது, கோடம்பாக்கம் மேம்பாலத்தில் ஒவ்வொன்றாய் விளக்குகள் மினு மினுக்கத் தொடங்கியிருந்தன.

விஜ்ஜுவுடன் அதிகம் ஒட்டிக் கொள்ளாமல் 'பிலிய'னில் தொற்றிக் கொண்டிருந்தேன். நான் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தபோது பிந்து என்று ஒரு தோழி ஸ்கூட்டர் வைத்திருந்தாள். அதிலே போய்ப் போய் நிறையப் பழக்கமுண்டு. (ஒரு நாள் அவள் தன் பாய்ஃபிரண்டைப் பின்னால் ஏற்றிக் கொண்டு வந்தாள். எங்களிடம் "மெட்றாசிலேயே நான்தான் ஓர் ஆம்பிளை யைப் பின்னால் வைத்துக் கொண்டு ஸ்கூட்டர் ஓட்டிய முதல் பொம்பளை!" என்று சொல்லிக் கொண்டாள்).

"ஸ்கூட்டரில் யாரையாவது ஏற்றிச் சென்றால் எனக்கு ஒரு பழக்கம் உண்டு" என்றான் விஜ்ஜு.

"என்ன பழக்கம்?" என்றேன்.

"கெட்ட பழக்கம்."

"என்ன கெட்ட பழக்கம்?"

''முன்னே ஒரு தடவை என் சினேகிதனை மகாபலிபுரத்துக்கு அழைச்சிட்டுப் போனேன். வழியில் ஒரு பள்ளம் வந்தபோது அவன் கீழே விழுந்து தொலைந்து விட்டான். இரண்டு பர்லாங்கு தூரம் போனபிறகு தான் அதைக் கவனித்தேன். பின்னால் தான் இருக்கிறானாக்கும் என்று நினைத்துக் கொண்டு வழிபூரா நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டு வேறே போயிருக்கேன்! மகா அவமானம்! அதனாலே....''

''அதனாலே?''

''யாரை ஏற்றிட்டுப் போனாலும் அடிக்கடி பின் பக்கம் தொட்டுத் தொட்டுப் பார்த்து, இருக்கியா' என்று கேட்பேன்.''

''தொடாமலே கூடக் கேட்கலாமே!'' என்றேன். ''இருக்கிறேன்னு பதில் சொல்றேன், கவலைப் படாதீங்க.''

''அதிலே சுவாரசியம் கிடையாது'' என்றான். ''அப்ப ஒண்ணு செய்யுங்கள். மெதுவான குரலில் ஏதாவது பாடிக் கொண்டே வாருங்கள்!''

''கோடம்பாக்கத்தில் போய்க் கொண்டிருக் கிறோம். யாராவது காமெராமேன் பார்த்தால் பின்னாலேயே வந்து விடுவான்!'' என்று சிரித்தேன்.

''அந்தப் படம் நூறு நாள் ஓடும்!''

''உங்களுக்கு வீடு எங்கே?'' என்றேன்

''பூர்ணிமா-''

''அழகான பெயர். அழகான பங்களாவா?''



''லாட்ஜ். சகிக்க முடியாத லாட்ஜ். ராயப் பேட்டையில் இருக்கிறது.''

''உங்க குடும்பமெல்லாம்?''

''எல்லாரும் மெட்றாசில் தான் இருக்கிறார்கள். என் இரண்டு அண்ணன், ஒரு தங்கை, என் அப்பா அம்மா-எல்லாரும் மயிலாப்பூரில் பாலன் அவென்யூ வில் இருக்கிறார்கள். பிரமாதமான பங்களா.''

''நீங்கள் மட்டும்'' -கேட்கத் தயக்கமாக இருந்தது.

''நான் சண்டைக்காரன். முரடன். அவர்க ளெல்லாம் பாலிஷ்டு பீப்பிள். நாசூக்குக்காரர்கள். தனியாய் இருந்துக்கோ என்று விட்டு விட்டார்கள். 'வாட்டர் ஸ்ப்ரிங்கிள்டு கேஸ்' என்று கேள்விப் பட்டதில்லை? அது நான்தான்'' என்றான்.

பிறகு ''உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்றான்.

''என்னைப் பற்றியா? நான் புதிதாய் சேராமல் சேர்ந்திருக்கும் லெக்சரர்'' என்றேன். 'கீதா என்ற பெண் என் நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாள்' என்பதையும் கூடவே சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் அதற்கு இதுவா சந்தர்ப்பம்?

வடபழனி கோவிலருகே போக்குவரத்து நெரிசல் அதிகமாயிருந்தது. அடிக்கடி அவன் காலைத் தரையில் ஊன்றிக் கொண்டு நிறுத்தி நிறுத்தி ஓட்ட வேண்டியத ாயிருந்தது. முந்தின தடவை பார்த்த போது இறுக்கமான பனியன் போட்டிருந்தான். இப்போது பெரிதாக இருந்தது சட்டை. காற்றில் அது சிலிர்த்துச் சிலிர்த்து

என் தோளைத் தொட்டுக் கொண்டேயிருந்தது. பிடரியில், கறுத்த முடியின் அடியில் வியர்வைப் புள்ளிகள் விளக்குகளின் வெளிச்சத்தில் மின்னின. ஆண்பிள்ளைத்தனமான கூந்தல் எண்ணெயின் மணம் என்னை நெருடியது.

மறுபடி ஸ்கூட்டர் வேகமெடுத்ததும், ''இருக்கியா?'' என்று பின்புறம் கையை நீட்டித் துழாவினான்.

''இருக்கிறேன், டோன்ட் ஒர்ரி'' என்று சொன்னதோடு நான் நிறுத்திக் கொண்டிருக்கலாம். என்னவோ தோன்றியது. ''துழாவத் தேவையில்லை'' என்று சிரித்தபடி சொல்லி அவன் கையை முன்புறம் தள்ளினேன். அந்தக் கணத்தில் என்னைப் போலவே அவனுக்கும் தேகம் சிலிர்ப்பதை உணர்ந்தேன். அவன் பேசாதிருந்தான். சற்று வரம்பு மீறி நடந்து விட்டோமோ என்று எனக்குக் குறுகுறுத்தது. ''என்ன, பேச்சையே காணோம்?'' என்றேன்.

''போர்க் களத்தை நெருங்கும்போது மிலிடரி கமாண்டர்கள் பேச மாட்டார்கள்..நேரே போக வேண்டியது தானே?''

''ஆமாம், அதோ ஒரு பஸ் ஸ்டாப் இருக்கிறது பாருங்கள். அதற்குத் தள்ளி ரைட்டில் திரும்ப வேண்டும்'' என்று வழி காட்டினேன்.

இரண்டு வருடத்துக்கு முன்பு ஒரு தடவை நான் வந்திருக்கிறேன். அப்போது இருந்த மாதிரியே இப்போதும் நடமாட்டமில்லாத பகுதியாக இருந்தது. தெருவில் மூன்று வீடுகள் புதிதாக முளைத்திருந்தன.



''இங்கே குடி வர வேண்டுமென்றால் எவனும் வாடகை தர மாட்டான்'' என்றான் விஜ்ஜு. ''நீங்கள் தான் வெற்றிலை பாக்கு வைத்து ஆளை அழைக்க வேண்டும்.''

''அதற்காக, பாவம், ஒரு கிழவியை ஆறு மாசம் வாடகை தராமல் ஏமாற்றுவதா?'' என்றேன். ''அதோ அந்த மஞ்சள் பெயிண்ட் அடித்த வீடு.''

ஸ்கூட்டரை நிறுத்தினான். வாசலில் குட்டையான காம்பவுண்டு. ஒரு சின்ன கேட். தள்ளிக் கொண்டு உள்ளே போனோம். புல்லும் செடியும் காடாய் வளர்ந்திருந்தன. வீடு பூட்டியிருந்தது.

மண்ணெண்ணெய் புட்டியைக் கையில் வைத்திருந்த ஒரு பையன் எங்களை வேடிக்கை பார்ப்பதற்காகக் கூடவே வந்தான்.

''பையா, இங்கே குடியிருந்தவர் எங்கே?''

''ஓடிட்டார்.''

''என்ன சொல்றே?''

''எங்களுக்குப் பால் பாக்கி எழுபத்துமூணு ரூபாய் தரணும். மளிகைக் கடைக்கு முன்னூறு ரூவா. டோபிக்கு முப்பத்தைஞ்சு. நீங்க தர்றீங்களா சார்? எங்க அம்மா அழுவுது'' என்றான் பையன்.

''எத்தனை நாளாச்சு ஓடிப்போய்?'' என்றான் விஜ்ஜு.

''ஒரு மாசம் இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாய் எல்லாச் சாமான்களும் எடுத்துட்டுப் போயிட்டாங்களாம். வீட்டுக்குள்ளாற இப்ப ஒண்ணுமில்லை.''

''எப்படி சொல்றே?''

''இப்படி வந்து பாருங்க'' என்று வீட்டின் விலாப் புறத்துக்கு அழைத்துப் போய், ஜன்னலைத் திறந்து காட்டினான். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை.

''கேஸ் போடப் போறோம். எங்களுக்குப் பணம் கிடைக்கிறப்போ உங்களுக்கும் தர்றோம். நீ போய் வா'' என்று பையனை அனுப்பினான் விஜ்ஜு.

''உங்கள் சீனியரிடம் போய்ச் சொல்ல வேண்டியதுதானே?'' என்றேன்.

''நத்திங் டூயிங்'' என்றவன் ஸ்கூட்டருக்குப் போய், பெட்டிக்குள்ளிருந்து ஒரு பையை எடுத்து வந்தான். கடகடவென்று அதற்குள் என்னென்னவோ ஓசைப்பட்டது.

ரூல் தடி மாதிரி இருந்த ஓர் இரும்புத் துண்டை எடுத்தான்.

''என்ன செய்யப் போறீங்க?'' என்றேன், திகிலுடன்.

''ஆபரேஷன்'' என்று சொல்லி டங்கென்று பூட்டின் மீது ஒரு போடு போட்டான். பையிலிருந்து ஒரு 'டார்ச்' விளக்கை எடுத்து என்னிடம் கொடுத்து, பூட்டின் மீது தெரிகிற மாதி காட்டச் சொன்னான்.

எனக்குப் பயம் ஏற்பட்டது. ''குடித்தனக்காரன் பூட்டி விட்டுப் போயிருக்கிற போது நாம் உடைக்கலாமா? சட்ட விரோதம் இல்லையோ? நாளைக்கு அவன் வந்து, உள்ளே பத்தாயிரம் ரூபாய் வைத்திருந்தேன், எடுத்துக் கொண்டு போயிட்டாங்க என்று சொன்னால்?''



''சொன்னால் நீ எப்படா இங்கே குடி இருந்தே என்று கேட்கலாம். அவனுக்குத் தான் ரசீது கிசீது எதுவும் நீங்க கொடுக்கலியே?'' என்று சொல்லிவிட்டு மேலும் மேலும் டகார் டகாரென்று போட்டான்.

டமால், டமால், டமால் என்று அடிகள் தொடர்ந்தன. எதிரிலிருந்த வீட்டில் மாடியின் ஒரு ஜன்னல் திறந்து கொண்டது.

''யாரய்யா அது, இரவு வேளையில்? '' என்று அங்கிருந்த ஒருவர் அதட்டினார்.

''வீட்டுக்கு ஓனர். பூட்டை உடைத்துத் திறக்கிறோம்'' என்று விஜ்ஜு பதில் கொடுத்தான்.

எதிர் வீட்டுக் குரல் கொஞ்சம் தணிந்தது. ''உடைக்கிறதுதான் உடைக்கிறீங்க, பகலிலே வந்து செய்யுங்களேன். போலீஸ்காரங்க எங்களை வந்து கேட்டாங்கன்னா...''

''ஆறு மாசத்து வாடகைப் பாக்கி ஆயிரத்தைந் நூறு ரூபாய் உங்கள் பாட்டனா கொடுப்பான்னு சொல்லுங்க.''

எதிர் வீட்டு ஜன்னல் மூடிக் கொண்டுவிட்டது. பக்கத்தில் வேறு வீடுகள் இல்லை. எல்லாம் காலி மனை. வெகு நேரம் இரும்புத் தடியால் அடித்தும் பூட்டு திறக்கவில்லை. ''இது உபயோகப் படாது'' என்று சொல்லிவிட்டு, பைக்குள்ளிருந்த 'ஹேக்ஸா' ஒன்றை எடுத்தான் விஜ்ஜு.

முழு ஆயுதபாணியாகத்தான் வந்திருக்கிறான்!

''ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டால் அதைக் கடைசிவரை செய்து முடிக்க வேண்டாமா?'' என்றவன்,

பூட்டின் காதில் ஹேக்ஸாவை வைத்துக் கொர் கொர்ரென்று ராவினான். படக்கென்று பூட்டு வாய் பிளந்து கீழே விழுந்தது.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். நான் தயங்கிப் பின்னால் நின்றேன். என் டார்ச் விளக்கை வாங்கி உட்புறம் ஒளி வீசி, 'பயமில்லை. உள்ளே வா'' என்றான்.

தூசும் தும்பட்டையுமாக இருந்தது. என் வீட்டு வழக்கப்படி மிதியடிகளை வெளியே கழற்றிப் போட்டிருந்தேன். விஜ்ஜு அதைத் தானே கொண்டு வந்து போட்டு, ''மாட்டிக் கொள். கீழே ஆணி கல் ஏதாவது கிடக்கும்'' என்றான். என் காலணியைச் சிறிதும் கூச்சமில்லாமல் கையால் தொட்டு அவன் எடுத்து வந்தது என்னை நெகிழ வைத்து விட்டது.

ஒரு பழைய முக்காலி உடைந்து கிடந்தது. என் கால் அதில் இடறியதும், ''பார்த்து! பார்த்து!'' என்று கைகளைப் பற்றிக் கொண்டான். முன்னறை, உக்கிராண அறை, சமையற்கட்டு, குளியலறை எல்லா இடங் களுக்கும் அவன் கையைப் பற்றியபடி அவன் பின்னாலேயே போனேன். ஒவ்வோரிடத்திலும் அவன் ஸ்விட்சைப் போட்டுப் பார்த்து விட்டு, ''ராஸ்கல்! ஒடுகிறபோது பல்புகளையும் கழற்றிக் கொண்டு போயிருக்கிறான்!'' என்று திட்டிக் கொண்டேயிருந்தான்.

இருண்டு கிடக்கும் அந்த வீடும், டார்ச் விளக்கின் ஒளியில் குதிக்கும் நிழல்களும், கேள்வி முறையற்ற தனிமையும் என் இதயத்தில் ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்தின. இருட்டின் நடுவேயிருந்து அவன் குரல் கேட்கும்போதெல்லாம் என் உள்ளம் பரவசமடைந்தது.



எல்லாக் கதவுகளையும் பழையபடி சாத்தினோம்.

''வா, போகலாம். உன் பாட்டியின் வாடகைப் பாக்கிக்கு ஈடு செய்யக் கூடியதாக ஒரு பைசாப் பொருள் கூட இல்லை''என்றான் அவன்.

இருவரும் வெளியே வந்தோம்.

''திறந்து போட்டுவிட்டா போவது?'' என்றேன்.

அவன் மௌனமாகத் தன் ஆயுதப் பையிலிருந்து ஒரு புதிய பூட்டை எடுத்துக் காட்டினான்.

வீடு திரும்பியபோது மணி ஒன்பதுக்கு மேலாகி விட்டது. இந்த இரண்டு மூன்று மணி நேரத்துக்குள் எங்களுக்குள் ஏற்பட்டிருந்த உறவின் நெருக்கத்தை நினைத்து நினைத்துச் சந்தோஷப்பட்டதில், போகும் போது பேசிக் கொண்டிருந்த மாதிரி வரும்போது பேசவேயில்லை.

''டெனன்ட் ஓடிட்டான். வீட்டுக்குள் ஒரு கொட்டாங்கச்சிகூட இல்லை'' என்று விஜ்ஜு தெரிவித்த போது, பாட்டி கொடுத்த சாபங்கள்!

''பாட்டி, வாடகையும் இல்லாமல் வீடும் கைக்கு வராமல் எத்தனையோ காலத்துக்குப் பூட்டிக் கிடந் திருக்க முடியும். நல்ல காலம் அதிலிருந்து தப்பினாய்!'' என்று சொன்னேன்.

''இந்தாருங்கள் சாவி. வேறு பூட்டுப் போட்டு விட்டு வந்திருக்கிறோம்'' என்று சாவியைப் பாட்டி யிடம் தந்தான் விஜ்ஜு.

கையை நீட்டிய பாட்டி வேறொரு யோசனை தோன்றியது போலிருக்கிறது. ''சாவி உன்கிட்டேயே இருக்கட்டும்'' என்றாள்.

''எதுக்கு?''

''எனக்கு உபகாரம் செய்வதற்கு மகராஜன் உன்னை விட்டால் யாரும் கிடையாதப்பா'' என்றாள் பாட்டி. ''நீயே நல்லவனாய், யோக்கியனாய் ஒரு புது ஆளைக் கொண்டு வந்து குடித்தனம் வை. வாடகை என்னவாக இருந்தாலும் சரி.''

''ஜமாய்த்து விடுகிறேன், கவலைப்படாதீங்க'' என்று சாவியைப் பாண்ட் பையில் போட்டுக் கொண்டான் அவன்.

''தட்டுப் போடறேன். சாப்பிட்டு விட்டுப் போ'' என்றாள் பாட்டி.

''இன்னொரு நாள் வருகிறேன். நீங்கள் தான் இவ்வளவு வேண்டியவர்களாகப் போய்விட்டீர்களே, அடிக்கடி வருவேன்'' என்று கூறிவிட்டு அவன் புறப்பட்டான்.

நான் வாசலுக்குச் சென்று அவன் ஸ்கூட்டரில் ஏறுகிறவரையில் பக்கத்தில் இருந்தேன். என் கையை ஓர் அழுத்து அழுத்திவிட்டுப் புறப்பட்டான்.

நான் வெகு நேரம் அந்தக் கையையே பார்த்துக் கொண்டு நின்றேன். அந்த அழுத்தத்தின் இன்பமான ஸ்பரிசம் ஸ்தூலமாய் ஒரு பூப்போல மலர்ந்து சிரித்துக் கொண்டிருக்கிற மாதிரி இருந்தது. குழந்தை மாதிரி குதித்துக் கொண்டு வீட்டுக்குள் திரும்பினேன்.

## 7

**அ**ன்று கல்லூரி விட்டபிறகும் நான் வீட்டுக்குப் புறப்படவில்லை.

சியாமளா என்கிற பி.ஏ.மூன்றாம் வருட மாணவி என்னிடம் சில சந்தேகம் கேட்பதற்கு வருவதாகச் சொல்லியிருந்தாள். வெராந்தாவில் காத்திருந்தேன்.

பக்கத்திலே தான் கல்லூரி அலுவலக அறை. அங்கே வாசலில் நின்று கொண்டிருந்தவர் என்னைக் கண்டதும், 'வணக்கம் அம்மா' என்று கும்பிட்டுவிட்டு என்னை நோக்கி வந்தார்.

சட்டென்று அவரை எனக்கு அடையாளம் தெரிய வில்லை. அவர் என்னை நோக்கி வர வர யாராயிருக்கும் என்று யோசித்துக்கொண்டே நின்றேன். என் அருகில் வந்து அவர் நிற்கவும் எனக்கு ஞாபகம் வரவும் சரியாயிருந்தது!

ஞானாம்பாளின் கணவர்-ராஜசேகரன்.

அந்தத் தற்கொலை நடந்த தினத்தன்று சில நிமிடங்கள் தான் அவரைப் பார்த்திருந்தேன் என்றாலும், முன்னைக்கு இப்போது மிகவும் இளைத்திருக்கிறார் என்று தோன்றியது. மனைவியைப் பறிகொடுத்து நிற்பவர்களுக்கு எவ்வளவோ கவலைகள், எவ்வளவோ பிரசினைகள் இருக்கும் என்று எண்ணிக் கொண்டேன். பாவமாயிருந்தது.

''அவளுடைய சம்பளம், கிராஜுவிடி என்று கொஞ்சம் பாக்கிப் பணம் வர வேண்டியிருக்கிறது. சொற்பத் தொகைதான். அதற்காக விட்டுவிட முடிகிறதா?'' என்றார் வருத்தமான குரலில்.

''எதற்காக விட வேண்டும்?'' என்றேன். ''செக்ரட்டரியை நேரில் பார்த்தீர்களானால் சீக்கிரமாக முடியுமே?''

''அவரைப் பார்த்தாயிற்று. இங்கேதான் ஹெட் கிளார்க்கும் மற்றவர்களும் லேசில் பேப்பரை நகர்த்த மாட்டேன் என்கிறார்கள்'' என்று ஒரு சோகப் புன்னகையுடன் சொன்னார்.

நான் அலுவலக அறைக்குள் எட்டிப் பார்த்தேன். ஒரு தட்டெழுத்தாளர் மட்டும் தான் எனக்குக் கொஞ்சம் தெரிந்தவர். என்னைக் காணும்போது நின்று இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போவார். அவர் இருக்கிறாரா என்று பார்த்தேன். இல்லை. வேறு யாரிடமும் இவருக்காகச் சொல்லத் தோன்றவில்லை. 'உனக் கென்னம்மா அத்தனை அக்கறை?' என்று கேட்பார்கள்.

உண்மையில் அவரிடம் எனக்குத் தனி அக்கறை இருப்பது நியாயம் தான் என்று என் உள்மனம் சொல்லியது. அவருடைய மனைவி எழுதிய கடைசிக் கடிதத்தை யாருடைய கண்ணுக்கும் காட்டாமல் மறைத்த வகையில் இவருக்கும் எனக்கும் ஒரு ரகசியமான பந்தம் நிலவுவதாக எண்ணிக்கொண்டேன்.

''வீட்டுக்குப் போய்விட்டார் பிரின்ஸிபால். நாளைக்குப் பார்த்து உங்களைப் பற்றிச் சொல்கிறேன்'' என்றேன்.



''சொன்னால் ரொம்ப நன்றியுள்ளவனாக இருப்பேன். வரட்டுமா?'' என்று படியில் இறங்கினார்.

ஞானாம்பாளின் உடல் மீது இவர் விழுந்து அழுதபோது ஏதோ இரண்டு குழந்தைகளின் பெயரைச் சொல்லி புலம்பியது எனக்கு ஞாபகம் வந்தது.

''குழந்தைகள் நல்லாயிருக்காங்களா?'' என்று கேட்டேன்

''இருக்கிறாங்க. என்னோடு இங்கே வந்திருக் கிறாங்க'' என்றார்.

நான் திகைத்தேன். ''எங்கே அவர்கள்?''

''கான்டீனில் உட்கார்த்தி வைத்து விட்டு வந்தேன்'' என்றார்.

'ஓகோ'' என்று அவர் கூப்பிடாமலே அவருடன் சிற்றுண்டி சாலைக்குச் சென்றேன்.

இரண்டு குழந்தைகளும் சமர்த்தாக, ஒரு பெஞ்ச்சில் உட்கார்ந்திருந்தன. ஓடியாடி விளையாடிக் கொண்டிராமல், ஏதோ வகுப்பு அறையில் ஆசிரியரின் மிரட்டலுக்குப் பயந்து உட்கார்ந்திருக்கிற மாதிரி மடியில் கைகோத்துக் கொண்டு நேராக உட்கார்ந் திருந்தன.

''என்ன தம்பி'' என்று பையனின் முதுகில் தட்டினேன். ''வணக்கம் அம்மா'' என்று கைகுவித்தான். ''எந்தக் கிளாஸ் படிக்கிறே?'' என்று கேட்டேன். ''ஃபோர்த் ஸ்டாண்டர்ட்'' என்றான்.

பெண், அவனைக் காட்டிலும் சற்று மூத்தவளாகத் தோன்றினாள்.

''நீ எந்தக் கிளாசம்மா படிக்கிறே?'' என்றேன்.

அவள் திருதிருவென்று விழித்துவிட்டுத் தன் அப்பாவை நோக்கினாள்.

''எந்தக் கிளாஸ் படிக்கிறேன்னு கேட்கிறாங்க'' என்று ராஜசேகரன் அவளிடம் உரத்த குரலில் சொல்லி விட்டு, என்னிடம், ''கொஞ்சம் சத்தமாய்ப் பேசணும். காது சற்று மந்தம்'' என்றார்.

''அடடா...இந்த வயசில் இப்படி விட்டு வைத்திருக்கிறீர்களே?'' என்றேன்.

''கைக் குழந்தையாய் இருந்தப்போ காதில் சீழ் வந்து கொண்டேயிருந்தது. அலட்சியமாய் விட்டு விட்டோம். இப்போ அதிகமாயிட்டே போகிறது'' என்றார்.

''உங்க மனைவி யாராவது டாக்டர் கிட்டே காட்டியிருப்பார்களே?''என்றேன்.

''இன்னும் கொஞ்ச நாள் இருந்திருந்தால் காட்டியிருப்பாளோ என்னவோ'' என்று பெருமூச்சு விட்டார்.

''என் அத்தை பெண் ஒருத்தி அடையாறு ஈ என் டி ஆஸ்பத்திரியில் அனஸ்தடிஸ்டாக இருக்கிறாள். அங்கே எனக்குத் தெரிஞ்சு பல கேஸ்கள் நல்ல குணமாகி யிருக்கிறது. அழைத்துப் போய்க் காட்டுங்கள்'' என்றேன்.

''நீங்களும் தயவு பண்ணி வாருங்களேன்'' என்றார் ராஜசேகரன். ''எனக்கு இதிலேயெல்லாம் சாமர்த்தியம்



போதாது. தாயில்லாக் குழந்தை... உங்களுக்குப் புண்ணியம்...''

எந்தச் சக்தி என்னைத் தலையாட்ட வைத்தது என்று இன்றளவும் நினைத்துப் பார்க்கிறேன். தெரியவில்லை. நான் ஒரு நாள்கூடப் பழகாத ஞானாம்பாள், சில நிமிடமே பார்த்திருந்த ராஜசேகரன், இவர்களுடைய காது மந்தமான குழந்தைக்கு உதவி செய்ய வேண்டுமென்று ஏன் எனக்குத் தோன்றியது? ஞானாம்பாளுக்கு இழைத்த பிழைக்காக ஈடு செய்கிறேனோ? புரியவில்லை.

''சரி, ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு நேரே அங்கே வந்து விடுங்கள். நானும் வருகிறேன்.'' என்று வாக்களித்தேன்.

அடுத்த ஞாயிறன்று நான் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டபோது பாட்டிக்கு ஆச்சரியம் தாளவில்லை. ''ஏண்டி, வீட்டிலே ஒரு துரும்பை எடுத்துப் போட மாட்டியே எனக்காக? ஊரார் குழந்தைக்குக் காது வைத்தியம் செய்ய அடையாறுக்கா போகிறாய்!'' என்று மோவாயில் கை வைத்துக் கொண்டு அதிசயம் தெரிவித்தாள்.

மைதிலி அனஸ்தடிஸ்டான என் அத்தை மகள். அவளும் அதையேதான் சொன்னாள். நான் பிறருக்கு உபகாரம் செய்கிற டைப் இல்லை என்று ஏன் தான் இவர்களெல்லாம் நினைக்கிறார்களோ!

மைதிலி என்னைத் தனியே அழைத்துப் போய் ரகசியமாக, ''இன்றைக்கு ட்யூட்டி பார்க்கிற டாக்டர் அவ்வளவு கெட்டிக்காரரில்லை. அவருக்கே கொஞ்சம்

காது மந்தம் என்பது என் சந்தேகம். வியாழக்கிழமையன்னைக்கு வா. ரியல் ஸ்பெஷலிஸ்ட் இருப்பார். வெகு கெட்டிக்காரர்'' என்றாள்.

ராஜசேகரனிடம் யோசனை கேட்டேன். ''வைத்தியம் செய்வதுதான் செய்கிறோம். நல்ல ஸ்பெஷலிஸ்டிடமே செய்து கொள்ளலாமே?'' என்றார்.

அடுத்த வியாழக்கிழமை காலையில் ஒரு மணி நேரம் கல்லூரியில் அனுமதி கேட்டுக் கொண்டு போனேன். குழந்தை மாலுவுடன் ராஜசேகரன் வந்திருந்தார். மைதிலி சிபாரிசு செய்த டாக்டரும் இருந்தார். வார்த்தைகளை எண்ணிப் பேசுகிறவர். 'ஆடியோகிராம் டெஸ்ட்' எடுக்கச் சொன்னார்.

எல்லா விவரங்களையும் கேட்டுக் கொண்டார்.

அறுவை சிகிச்சை செய்து குணப்படுத்தி விடலாம் என்று சொல்லி, அலுவலக எழுத்தரிடம் தேதி குறித்துக் கொள்ளச் சொன்னார். டாக்டரின் ஆபரேஷன் தினங்களையெல்லாம் கணக்கிட்டு, அடுத்த மாதம் பதினைந்தாம் தேதி ஆபரேஷன் என்று நிர்ணயம் செய்து தந்தார் கிளார்க்.

''உங்களுக்கு ரொம்பத் தொல்லை..'' என்று எனக்கு நன்றி சொல்ல ஆரம்பித்தார் ராஜசேகரன்.

''ஆபரேஷன் நல்லபடி முடியட்டும். உங்கள் நன்றியை மொத்தமாக வாங்கிக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, என்னையும் அவரையும் மைதிலியையும் மாதி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த குழந்தை மாலுவின் கன்னத்தில் செல்லமாகத் தட்டி விட்டுத் திரும்பினேன்.



வீட்டு வாசலில் ஸ்கூட்டர் நின்றிருந்தது.

விஜ்ஜு"வின் ஸ்கூட்டர்.

அன்று விருகம்பாக்கம் போய் வந்த பிறகு அவனை நேரில் சந்திக்காவிட்டாலும், என் எண்ணங்களினின்று அவன் கொஞ்சம் கூட மறையவில்லை. எப்படி மறைவான்? அவன் தொட்ட இடங்கள் அப்படியே இருந்தன. பேசிய வார்த்தைகள் அப்படியே இருந்தன. சிரித்த சிரிப்புகள் அப்படியே இருந்தன. பார்த்துக் கொண்ட திருட்டுப் பார்வைகள் அப்படியே இருந்தன. நான் உலகத்தின் இந்தக் கோடியிலும் விஜ்ஜு" அந்தக் கோடியிலும் இருந்தால்கூட அதெல்லாம் எப்படி இல்லையென்று ஆகிவிடும்?

பாட்டியின் வீட்டுக்குக் 'கிராக்கி' பிடித்து விட்டான் போலிருக்கிறது என்று தான் முதலில் எண்ணினேன். ஆனால் அவன் கையில் ஒரு கட்டு அழைப்புக்கள் இருப்பதைப் பார்த்ததும் சந்தேகமாயிருந்தது. நுழைந்தபோது ''நீங்கள் கட்டாயம் வரணும் என்று சீனியர் சொல்லச் சொன்னார். மதுரைக்கு இங்கேயிருந்து ஸ்பெஷல் பஸ் அமர்த்தியிருக்கிறோம். அலுங்காமல் நலுங்காமல் உங்களை இங்கே திரும்பக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன்'' என்று தாத்தாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

''அனந்தசயனத்துக்கென்ன, கல்லுக் குண்டாட்டம் தேகம். எங்கே வேணுமானாலும் போவான், வருவான். நம்மாலே முடியாதப்பா'' என்றார் தாத்தா. அப்போது நான் நுழைந்தேன். ''இதோ என் பேத்தி இருக்கிறாள். என் பிரதிநிதியாக அழைத்துப் போ தாராளமாய்'' என்றார்.

''ஏது, நான் அத்தனை 'சீப்'பாகி விட்டேனா உங்களுக்கு, தாத்தா? என்ன சமாசாரம் என்று கூடத் தெரியாமல் தேங்காய் மூட்டையைத் தூக்கிப் போடுகிற மாதிரி என்னைப் போடுகிறீர்களே?'' என்றேன்.

''என் சீனியரோட மூத்த பெண்ணுக்குக் கல்யாணம். மதுரையில் நடத்துகிறார். உன் தாத்தா கட்டாயம் வர வேண்டுமென்றேன். உன்னை அனுப்புகிறேன் என்கிறார்'' என்று சொல்லி எனக்கு மட்டும் தெரிகிற மாதிரி கண்ணடித்தான் விஜ்ஜு.

பாட்டி, ''போயிட்டுத்தான் வாயேண்டி, சௌமி! அம்மாவும் அப்பாவும் தாங்கள் தான் ஊர் ஊராய்ப் போகிறார்களே தவிர, உன்னை ஒரு இடத்துக்கும் அழைத்துக் கொண்டு போறதில்லை. போயிட்டு வா'' என்றாள்.

விஜ்ஜு மறுபடியும் ஒரு முறை கண்ணடித்தான். வெடுக்கென்று அவனை ஒரு தரம் கிள்ளி இந்தப் பழக்கத்தை நிறுத்தச் சொல்ல வேண்டும் போலிருந்தது. ''சரி பாட்டி'' என்றேன்.

ஒரு சின்னப் பெட்டியில் நான்கு நாட்களுக்குத் தேவையான உடைகளை எடுத்து வைத்துக் கொண்டு நான் ராஜகுமாரி தியேட்டருக்கு அருகிலிருந்த கட்டிடத்தை அடைந்த போது இரவு மணி எட்டு இருக்கும். கல்யாணத்துக்காக தனி பஸ்கள் இரண்டும்



அங்கிருந்து தான் கிளம்புகிறதென்று விஜ்ஜு என் கல்லூரிக்குப் போன் பண்ணிச் சொல்லியிருந்தான்.

கல்யாணக் கோஷ்டியா மீன் கடையா என்று தெரியவில்லை. அப்படியொரு அமர்க்களம். நல்ல காலம், ஒரு விஸ்தாரமான 'காம்பவுண்டுக்குள்' இருந்ததால் தெருவில் போவோர் வேடிக்கை பார்க்கக்கூட வில்லை.

விஜ்ஜுவிடம் என்ன பொறுப்பெல்லாம் ஒப்படைத்திருந்தாரோ அவன் சீனியர், அவன் எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. நான் ஆட்டோ ரிக்ஷாவிலிருந்து இறங்கியதுமே என்னிடம் ஓடி வந்து, தாழ்ந்த குரலில், ''இதோ பார், எந்தப் பாட்டியாவது பேச்சுத் துணைக்குக் கூப்பிட்டாள் என்று நீ பாட்டுக்குப் போய்விடாதே. நான் உன்னைத் தான் மலைபோல் நம்பியிருக்கிறேன்'' என்றான்.

''எதற்கு?'' என்று திகைத்தேன்.

''என் பேச்சுத் துணைக்கு'' என்று சொல்லிக் கண்ணைச் சிமிட்டினான். (அந்தக் கெட்ட பழக்கத்தை நான் ரசிக்க ஆரம்பித்திருந்தேன்.) ''பஸ் வந்ததும் எனக்குப் பக்கத்திலே உனக்கு ஸீட் போட்டு விடுகிறேன். கட்டாயம் வந்து விடு. எனக்கு ரொம்ப நாளாகவே இன்ஸோம்னியா-ராத்திரி பூரா தூங்க மாட்டேன். வளவளான்னு உன்னோடு பேசிட்டிருந் தால்தான் பொழுது போகும்.''

''பக்கத்திலே வேணுமானாலும் உட்கார்ந்துக் கிறேன், போனால் போகட்டுமென்று. ஆனால் பேச்சு கீச்சு எதுவும் கூடாது'' என்றேன்.

''ஐயையோ! அது இன்னும் ஆபத்து!'' என்றான் விஜ்ஜு. ''வாய்க்கு வேலை கொடுக்கலை என்றால் மனசு குரங்குத்தனமாய் வேலை செய்து, என் கையையும் காலையும் சீண்டி விடும்!''

''முறிச்சிடுவேன் முறிச்சு!'' என்று நான் சொன்னேனே தவிர அந்த இன்பமான வேளை எப்போது வரும் என்று என் உடம்பின் ஒவ்வொர் அணுவும், மனசில் ஒவ்வொரு அங்குலமும் ஆசையுடன் எதிர்பார்த்தன. மாணவிகளிடம் ஒழுக்கத்தை வற்புறுத்த வேண்டிய ஒரு லெக்சரர் இப்படி நினைப்பதே பாவ மில்லையா என்று வெட்கப்பட்டேன். லெக்சரரானாலும் இளம் பெண்தானே நானும் என்று நானே சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

வந்திருந்தவர்களின் வசதிகளைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு வழுக்கைத் தலைக்காரர் விஜ்ஜு விடம் வந்தார். ''இந்த மாதிரி கூட்டமாய்க் கிளம்புகிற போது யாருக்கு எப்ப என்ன உடம்பு சரியில்லாமல் போகும்னு சொல்ல முடியாது. நீங்க போய் ஒரு டஜன் அனால்ஜின் ஒரு டஜன் டயஜின் டேப்லட்ஸ் வாங்கிட்டு வந்துடுங்களேன்'' என்றார்.

''இங்கே பக்கத்திலே ஒரு பார்மஸி இருக்கு'' என்று தகவல் கொடுத்தார் அவருக்குப் பின்னால் நின்றிருந்த ஒரு குண்டு மனிதர்.

''இதோ போகிறேன்'' என்று விஜ்ஜு புறப் பட்டான். அவர்கள் அந்தண்டை நகர்ந்ததும், ''ராத்திரி வேளை. மருந்துக் கடைக்குத் தனியாய்ப் போகப் பயமாயிருக்கு. நீயும் வந்தால் தேவலை'' என்றான் என்னைப் பார்த்து.



''ஐய! பயந்த பிள்ளையைப் பார்க்கலை!'' என்று சிரித்துக் கொண்டே அவன் பின்னால் நடந்தேன்.

எதிர் சாரியிலிருந்த மருந்துக் கடையில் படியேறும் போதே அவளைப் பார்த்துவிட்டேன்—கீதாவை.

மேஜையடியில் உள்ள நாற்காலியில் உட்கார்ந் திருந்தாள் கால் மேல் கால் போட்டுக் கொண்டு. அவள் பக்கத்தில் கடையின் மானேஜர் மரியாதையுடன் நின்றபடியே பில் போடுவதும் பணத்தை வாங்கிக் கொள்வதுமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். வேறு ஏதோ வேலையாக வந்தவள் அங்கே உட்கார்ந் திருக்கிறாள் என்று ஊகித்தேன். தெருவில் கீதாவின் வீட்டுக் கார் நின்றிருந்தது. சென்னையில் அவர்களுக்கு நாலு கடை இருப்பதாக அவள் சொன்னது எனக்கு ஞாபகம் வந்தது.

''நீங்கள் போங்கள். நான் வரவில்லை'' என்று தெருவிலேயே நின்று கொண்டேன்.

கீதா அதற்குள் என்னைப் பார்த்திருக்க வேண்டும். ஆனால் பார்க்காதவள் மாதிரி இருக்கிறாள் என்று தோன்றியது.

''ஏன், யாருக்காகப் பயப்படுகிறாய்?'' என்றான் விஜ்ஜு.

''பயம் ஒன்றுமில்லை. நீங்கள் போய் வாருங்கள்'' என்றேன்.

விஜ்ஜு உள்ளே போய் மாத்திரைகளை வாங்கி வந்தான். அதுவரை நான் வெளியிலேயே நின்றிருந் தேன். கீதாவும் என் பக்கம் திரும்பவில்லை.

''என்ன திடீர்னு என்னவோ போல் ஆகி விட்டாய்?'' என்றான் விஜ்ஜு.

''ஒன்றுமில்லை. என் ஸ்டுடண்ட்-இதோ என்ற பெண்-அங்கே உட்கார்ந்திருக்கிறாள். அவளுடைய அப்பா தான் பார்மஸி ஓனர்...''

விஜ்ஜு திரும்பிப் பார்த்து, ''அந்தப் பெண்ணா? அழகாய்த்தான் இருக்கிறாள்'' என்றான். என்னைக் கலகலப்பாகப் பேச வைப்பதற்காகத் தான் அப்படிச் சீண்டினான் என்பது புரிந்தது. ஆனாலும் நான் கலகலப்பாக ஆகவில்லை.

''டாம் தட் ஸ்டுடண்ட்!'' என்றான் விஜ்ஜு கோபமாக. ''உன் மூடையே மாற்றி விட்டாளே. யார் அவள்? அவளுக்கும் உனக்கும் என்ன? உன்கிட்டே என்ன வாலாட்டினாள்? சொல்லு!'' என்றான்.

''டோன்ட் பாதர்'' என்றேன். ஆனால் விஜ்ஜு சொன்ன மாதிரி என் மனம் கொஞ்ச நேரத்துக்கு மாறித் தான் போய்விட்டது.

பஸ்கள் வந்தன. யாரார் என்னென்ன திட்டம் போட்டிருந்தார்களோ, அத்தனை திட்டங்களும் தூள் தூளாய்ப் பறந்தன. முன்பு வெறும் சந்தை மாதிரி இருந்ததென்றால், இப்போது நாலு ஜல்லிக்கட்டு காளைகளை அவிழ்த்து விட்ட மாதிரி ஆகிவிட்டது. கல்யாண விட்டு விருந்துகளின் போது, டைனிங் ஹாலைத் திறந்ததும் எவ்வளவோ பெரிய பெரிய மனிதர்களெல்லாம் இப்படி அடித்துக் கொண்டு ஓடுகிறார்களே என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு.



இங்கே கல்யாண வீட்டு பஸ்ஸில், இலவச இடம் பிடிக்க அதற்கு மேல் பறந்தார்கள் எல்லாரும், இந்தப் பஸ்ஸில் இருப்பவர்கள் அந்தப் பஸ்ஸில் இருப்பவர்களைக் கூப்பிடுவதும், அவரை இவர் பிரிய மாட்டேன் என்பதும், இன்னாரோடுதான் இன்னார் இருக்க வேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பதும்-

கடைசியில் ஒரு பெரியவர் ஓங்கி அதட்டல் போட்டு ஒரு சமரசம் செய்து வைத்தார். பெண்கெளல்லாம் ஒரு பஸ் என்றும் ஆண்களெல்லாம் இன்னொரு பஸ் என்றும் முடிவாயிற்று. முணுமுணுத்துக் கொண்டே எல்லாரும் ஒப்புக் கொண்டார்கள்.

விஜ்ஜுவின் முகத்தைப் பார்க்கச் சிரிப்பாய் வந்தது எனக்கு.

''உன் சூட்கேஸ் எங்கே இருக்கிறது?'' என்றான் என்னிடம் வந்து.

''ஏன், பஸ்ஸில் ஏற்றிவிட்டேன்'' என்றேன்.

''திறந்து, ஒரு புடவை எடுத்துக் கொடு, கட்டிக் கொண்டு நான் உன் பஸ்ஸில் வந்து விடுகிறேன். ராத்திரி வேளை, யாரும் கண்டுபிடிக்க மாட்டார்கள்'' என்றான்.

சிரித்துக் கொண்டே என் கைக்குட்டையால் அவன் முதுகில் ஓர் அடி அடித்து அவனுடைய பஸ்ஸுக்கு அனுப்பி வைத்தேன். திரும்பி வந்து, ''அந்தக் கைக் குட்டையையாவது என்னிடம் கொடு. உன் ஞாபகார்த்தமாக வைத்துக் கொண்டு அடிக்கடி கண்ணைத் துடைத்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி வாங்கிக் கொண்டு போனான்.

விடிகாலை மதுரையை அடைகிறவரையில் அவன் பஸ்ஸும் எங்கள் பஸ்ஸும் ஒன்றையொன்று முந்துவதில் போட்டி போட்டதைத் தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை. எந்த ஜன்னல் வழியாகவேனும் அவன் முகம் தெரிகிறதா என்று எட்டி எட்டிப் பார்த்தேன். இருட்டில் எதுவும் தெரியவில்லை.

வடக்கு வெளி வீதியில் கல்யாணம் நடந்தது. இப்போது விஜ்ஜு பம்பரமாய்ச் சுழன்று, சீனியர் ஒப்படைக்கிற வேலைகளையெல்லாம் எள் என்பதற்கு முன் எண்ணெயாகச் செய்து கொண்டிருந்தான். அவனுடைய கடமையுணர்ச்சியைப் பார்த்து எனக்குப் பெருமையாயிருந்தது.

சாயந்தரம் வரவேற்பு நடந்து கொண்டிருந்தது. என் பின்னாலிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தவன், மெதுவான குரலில், ''சட்டுப் புட்டென்று சாப்பாட்டை முடித்துக் கொள்'' என்றான்.

''ஏன்? நேரமானால் ரசத்தில் வெந்நீர் வளாவ ஆரம்பித்துவிடுவார்களா?'' என்றேன்.

''அதில்லை. ஒரு ஜீப் கிடைத்திருக்கிறது. கொடைக்கானலுக்குப் புறப்படுகிறோம். ஏழு மணிக்குப் புறப்பட்டால் பத்துமணிக்குப் போய் விடலாம்'' என்றான்.

உற்சாகமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தயாரானேன். ஐந்து பெண்களும், ஐந்து ஆண்களும் இருந்தோம். இரண்டு குழந்தைகள். பெண்களில் ஒருத்திக்குத் தான் என் வயதிருக்கும். மற்றவர்கள் நடுத்தர வயதுக்காரர்கள்.



''குளிராயிருக்கும், கம்பளியோ ஸ்வெட்டரோ எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான் விஜ்ஜு. அதற்கு எங்கே போவது? கல்யாண வீட்டில், அகப்பட்ட போர்வைகளைச் சுருட்டிக் கொண்டோம்.

விஜ்ஜுவின் நண்பரொருவர் தான் ஓட்டிக் கொண்டு வந்தார். ''ராத்திரி அங்கே தங்குவதற்கு ஏற்பாடெல்லாம் பண்ணியிருக்கிறாய் இல்லையா?'' என்றார் விஜ்ஜுவிடம்.

''கவலைப்படாமல் ஓட்டய்யா நீ! தி.நகரில் பாங்க் மானேஜராக இருந்தவர் இப்ப கொடைக்கானலில் தான் இருக்கிறார். நம்ப சீனியருக்கு ரொம்ப வேண்டியவர். சலாம் போட்டுக் கொண்டு இடம் கொடுப்பார்'' என்றான் விஜ்ஜு.

அங்கே எங்களுக்கு சலாம் போட எவரும் இருக்கவில்லை. வெடவெடவென்று குளிர் நடுக்க, ராத்திரி பத்தரை மணிக்கு, சகிக்க முடியாத அழுக்குப் போர்வைகளைப் போர்த்திக் கொண்டு நாங்கள் ஒன்பது பேர் அந்தப் பாங்கின் வாசலில் காத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தோம். விஜ்ஜு உள்ளே போய் விட்டு, ஐந்து நிமிடத்துக்கெல்லாம் தலையைச் சொறிந்து கொண்டு திரும்பி வந்தான்.

''ஐயையோ! என்ன ஆச்சு?'' என்று எல்லாரும் பதறினோம்.

''கவலைப்படாதீங்க. எக்கச்சக்கமாய் லாட்ஜ் இருக்கிறது இங்கே'' என்றான்.

''உன் பாங்க் ஆள் என்னய்யா ஆனான்?'' என்று அவனை உலுக்கினார்கள்.

''வத்தலகுண்டுக்கு டிரான்ஸ்ஃபர் ஆயிட்டானாம். இப்ப இருக்கிற ஆள் கிட்டே கேட்டுப் பார்த்தேன். ஏற்கெனவே பத்துப் பேர் உள்ளே அடைஞ்சு கிடக்கிறாங்கன்னு கதவைத் திறந்து காட்டறான்.''

''உன்னை நம்பி வந்தோமே!'' என்று மற்றவர்கள் சொன்னாலும் எனக்கு விஜ்ஜுவிடம் நம்பிக்கை இருந்தது. அதே போல், எங்களை இருக்கச் சொல்லி விட்டு இங்குமங்கும் அலைந்தவன், கடைத்தெரு இறக்கத்திலிருந்த ஓர் ஓட்டலில் எப்படியோ இடம் பிடித்து விட்டான்.

அது ஒரு நீண்ட அறை. மரப்பலகைத் தரை. நடந்தால் டொம் டொம்மென்று சத்தம் கேட்டது. வரிசையாய் ஆறு கட்டில்களை, சேர்த்தாற்போல், இடைவெளியில்லாமல் ஒரே கட்டில் மாதிரி போட்டிருந்தது. ஒன்றுக்கொன்று ஒட்டினாற்போல மெத்தைகள். போர்வை நிறையத் தந்திருந்தார்கள்.

நடுவில் இரண்டு குழந்தைகளைப் படுக்க வைத்து விட்டு இந்தப் பக்கம் ஆண்களும் அந்தப் பக்கம் பெண்களும் பிரிந்து படுத்துக் கொண்டோம்.

''காலை ஏழு மணிக்கெல்லாம் ஏரியை ரவுண்ட் அடிக்க வேண்டியது. இங்கே திரும்பி வந்து குளிக்க வேண்டியது. டிபன். எட்டரைக்கெல்லாம் பழனிக்குப் புறப்பாடு. கொடைக்கானல் பழனி ரோடு ரொம்ப பிரமாதமாய் இருக்கிறதாம்...'' விஜ்ஜு சொல்லிக் கொண்டே போனான்.

காலோடு தலை போர்த்துக் கொண்டிருந்த அவன் சினேகிதர் விருட்டென்று போர்வையை விலக்கிக்



37824
57,77 874

கொண்டு எழுந்து, ''இப்ப நீ வாயை மூடவில்லையென்றால் கொலையே பண்ணி விடுவேன்! புரோக்ராம் போடுகிறானாம் புரோக்ராம்!'' என்று சீறினார்.

நான் விஜ்ஜுவைப் பார்த்து, முதல் தடவையாகக் கண்ணைச் சிமிட்டினேன். அவன் முறைத்தான்.

''நீல விளக்கு மட்டுமே எரிந்து கொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாய்ப் பேச்சு குறைந்தது. விஜ்ஜு எழுந்து கொண்டு, ''சாயந்தரப் பேப்பர் இருந்ததே? எங்கே?'' என்று தேடத் தொடங்கினான்.

''பெரிய சீஃப் மினிஸ்டர் இவர்! பேப்பரைப் பார்க்காவிட்டால் பிரளயம் ஏற்பட்டு விடும்! தூங்கய்யா பேசாமல்!'' என்று அவன் நண்பர் அதட்டினார். ஆனால் விஜ்ஜு பேப்பரைக் கண்டு பிடித்த பிறகு தான் படுத்தான். அவ்வளவு அக்கறையாகத் தேடியவன், விளக்கைப் போட்டுக் கொண்டு ஏன் படிக்கவில்லை என்று அப்போது எனக்குத் தெரியவில்லை. நள்ளிரவு தான் புரிந்தது.

எனக்கு அப்போது அரைத் தூக்கம். குளிர் ரொம்ப இதமாயிருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்த சமயம், தலையில் யாரோ மெல்லத் தட்டுகிற மாதிரி இருந்தது. புரண்டு படுத்தேன். மறுபடியும் தட்டுகிற மாதிரி இருந்தது. கண்களை நன்றாய்த் திறந்து, தலையை மெதுவே தூக்கிப் பார்த்தேன்.

பேப்பரைச் சுருட்டிச் சுருட்டி, ஒன்றோடொன்று சேர்த்து மிக நீளமான குழாயாக ஆக்கி, அந்தக் கோடியிலிருந்தவாறே இந்தக் கோடியிலிருந்த என்னை எழுப்புவதற்கு முயன்று கொண்டிருந்தான் விஜ்ஜு.

அதற்குத் தான் பேப்பரைத் தேடியிருக்கிறான்! என்ன என்றேன் சாடையில்.

''வெளியே போகலாம் வா'' என்று சாடை காட்டினான்.

சிறிது தயங்கினேன். 'உஸ்! சும்மா வா!' என்கிற மாதிரி மறுபடியும் சாடை காட்டினான்.

போர்வையைப் போர்த்துக் கொண்டு வெளியே வந்தேன். ஒட்டல் காவல்காரன் விழித்துக் கொண்டிருந்தான். வாசல் கதவைத் திறந்து விட்டு, ''எங்கே போகப் போறீங்க?'' என்றான்.

''டீ ஏதாவது கிடைக்குமா சூடாய்?''

''சரிதான் போங்க!'' அவன் சிரித்தான். ''இந்த நேரத்திலா!''

வெளியே குளிர் கத்தி போல் குத்தியது. விஜ்ஜு தான் போட்டுக் கொண்டிருந்த கோட்டைக் கழற்றி எனக்கு மாட்டினான். வெறும் சட்டையில் அவனுடைய விரிந்த மார்பு வெகு அழகாக இருந்தது. எனக்காகக் குளிரைப் பொறுத்துக் கொண்டிருந்தான் என்பதால் அவனிடம் எனக்குப் பிரியம் அதிகரித்தது.

''கோபிக்காதே'' என்று சொல்லி, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். எனக்குக் கோபம் வரவில்லை. அவனுடைய ஆண்மைக்கு அது இன்னோர் அறிகுறியாகத் தோன்றியது. புகை இழுக்கும் போதெல்லாம் நெருப்பு முனை பளபளத்து அவனுடைய முக ராசியையும் கன்னங்களையும் காட்டியது.



என் இடுப்பைச் சுற்றி அவன் கை வளைந்தது. அவன் தோளில் என் தலையைச் சாய்த்துக் கொண்டேன். வெறிச்சிட்டிருந்த தெருவைப் பார்த்தபடி, எதுவும் பேசத் தோன்றாமல் இருவரும் நின்றிருந்தோம். அவனுடைய கை விரல்கள் ஏதோ பேச விரும்புகிற மாதிரி என் விலாவை அழுத்துவதை மட்டுமே நடுநடுவே உணர்ந்தேன்.

''சௌமி...'' என்றான் அவன். ''நான் காதலிக்கிற முதல் பெண் நீ தான்...''

''நன்றாயிருக்கிறதே கதை!'' என்று பொய்க் கோபத்துடன் அவன் கையை என் இடுப்பிலிருந்து விலக்கினேன். ''நான் முதல் என்றால் இரண்டாவது மூணாவது என்று வந்து கொண்டிருப்பார்கள் போலிருக்கிறதே!''

''கழுதை!'' என்று என் தலையில் குட்டினான். அந்தக் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டேன்.

பின்னால் யாரோ வருகிற மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தேன். எங்களுடன் வந்த பெண்களில் ஒருத்திதான். ''பாத்ரூம் எங்கே இருக்கிறதென்று தெரியவில்லை'' என்றாள்.

ஒட்டல் காவல்காரன், ''அங்கேயே பக்கத்தில் இருக்கிறதேம்மா?'' என்றான்.

நானும் விஜ்ஜுவும் அறைக்குத் திரும்பினோம்.

முதல் நாள் தான் விஜ்ஜு போட்ட திட்டம் காலை வாரி விட்டுவிட்டதே தவிர, மறு நாளெல்லாம் அவன்

திட்டப்படியே நடந்தது. காலையில் ஏரியைப் பார்த்த பிறகு பழனிக்குப் புறப்பட்டோம்.

என்ன அருமையான பாதை! வழிநெடுக வாழைத் தோப்புகள். மறு பக்கம் பார்த்தால் கிடு கிடு பள்ளங்கள்.

எங்களுடன் வந்திருந்தவர்களில் சிலர் இந்தப் பக்கத்தில் பழக்கமுள்ளவர்கள். ''அதோ பார்த்தீர்களா? ஒரு பாறை விழுந்து கிடக்கிறது. இதனால் நாலு மாசமாய்ப் பாதையே அடைபட்டுப் போயிருந்தது. பாறையை உடைக்கிறதுக்கு ஒரு லட்சம் ரூபாய் காண்டிராக்டாம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

''இதோ இந்த இடத்தில் நேர் கீழே பாதையைப் போட்டிருந்தால் பதினாறே மைலில் தீர்ந்திருக்குமாம். தோட்ட முதலாளிகள் தங்கள் தங்கள் தோட்டத்துக்குப் போகிறதுக்குச் சௌகரியமாய்ப் பாதையைப் போட வச்சிட்டாங்களாம். நாற்பது மைலுக்கு நீண்டு போச்சு!'' என்றார் இன்னொருவர்.

நானும் விஜ்ஜுவும் ஒருவரையொருவர் நெருங்கிப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டேயிருந்தோம். கிடைக்க வில்லை. நடுவில் ஓரிடத்தில் வண்டியை நிறுத்தி, பம்பிளிமாஸ் பழங்கள் வாங்கினான் விஜ்ஜு. தோலை உரித்துச் சாப்பிடுவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

ஜீப் பழனியை நெருங்கிக் கொண்டிருந்தபோது, முந்தின இரவு குளியலறைக்கு வழி கேட்ட பெண் என்னிடம், ''நீங்கள் நித்யா காலேஜில் எகனாமிக்ஸ் புரொபசராமே?'' என்றாள்.



''லெக்சரர்'' என்றேன்.

''இப்பத்தான் எங்க மாமி சொன்னாள். கீதான்னு உங்க கிளாசில் ஒரு பெண் படிக்கிறாள் இல்லை?''

''ஆமாம்.''

''என் கஸின் ஸிஸ்டர் அவள்'' என்றாள்.

''அட, அப்படியா?'' என்றதற்கு மேல் நான் எதுவுமே பேசவில்லை. என்னவோ போலாகிவிட்டது. ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

பழனியில் 'விஞ்ச்'க்குப் போனோம். சென்னையி லிருந்து மதுரைக்கு வரும்போது கிடைக்காத பாக்கியம் இப்போது கிடைத்தது. கூட்டமே இல்லாததால் கடைசி சீட்டில் நானும் விஜ்ஜுவும் சேர்ந்து உட்காரச் சந்தர்ப்பம் கிடைத்தது.

''சௌமி! ஏன் திடீர்னு என்னவோ போலாகி விட்டாய்?'' என்று விஜ்ஜு கேட்டான்.

இவனிடம் சொன்னாலென்ன என்று யோசித் தேன்.

''என்ன சௌமி?'' என்றான் மீண்டும்.

''அதோ அந்த அம்மாள் கீதாவோட கஸின் ஸிஸ்டராம். இப்பத்தான் சொன்னாங்க'' என்றேன்.

''எந்தக் கீதா?''

''பார்மஸியிலே காட்டினேனே-என் ஸ்டூடண்ட்..''

''இருக்கட்டுமே? அதனாலே என்ன ஆயிட்டுது? கீதா, கீதா, கீதா என்று ஏன் அவள் உன்னை இப்படி வாட்டுகிறாள்?'' என்றான் அவன் கோபத்துடன்.

அப்படி அவன் உரிமையோடு கோபித்துக் கொண்ட போது உலகத்திலேயே விஜ்ஜு ஒருவன் தான் எனக்குத் துணை இருக்கிற மாதிரி தோன்றியது. வேறு யாரிடமும் சொல்லாத எந்த ரகசியத்தையும் விஜ்ஜுவிடம் சொல்லலாம் என்று என் இதயம் தைரியம் சொல்லிற்று. சரியோ தப்போ ஒரு காரியம் பண்ணி விட்டோம். அதை இவனிடம் ஒப்புக் கொண்டால் பாரம் குறையும் என்று எண்ணினேன்.

தாழ்ந்த குரலில் நான் ஞானாம்பாளின் தற்கொலையைப் பற்றியும் அவருடைய கடிதத்தை மறைத்தது பற்றியும் சொல்லி முடித்த போது 'விஞ்ச்' கோவிலை அடைந்து விட்டது. அவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''அந்தக் கீதா மீது அப்போது ஏதோ ஒரு இரக்கம் ஏற்பட்டிருந்தது. இப்போது அவள் அத்தனை நல்ல பெண்ணாகத் தோன்றவில்லை'' என்று கூறி அவளால் நான் அடைந்த அவமானங்களையும் சொன்னேன். ''அதனால் அந்தக் கடிதத்தை இப்போது போலீசில் கொடுத்துவிட தோன்றுகிறது. நீங்க என்ன சொல்றீங்க?'' என்றேன்.

எல்லாரையும் முன்னே போகவிட்டுப் பின் தங்கினான் விஜ்ஜு. அவன் முகம் கவலையுடன் இருந்தது.

''தற்கொலை என்பது ஒரு கிரிமினல் சமாசாரம். அது சம்பந்தப்பட்ட தடயத்தை மறைப்பது-டேம்பரிங் வித் எவிடென்ஸ்-கிரிமினல் குற்றம். அந்தப் பெண் கீதாவை மடக்குவதாக நினைத்துக் கொண்டு அந்தக்



கடிதத்தை இப்ப போலீஸ்காரங்க கிட்டே எடுத்துக் கொண்டு போனால் நீயும் இன்வால்வ் ஆகிவிடுவாய். போலீஸ் தொல்லைகளைச் சமாளிக்கிற அளவுக்கு உனக்குத் தைரியம் போதாது'' என்றான்.

''இருந்தாலும் இந்தக் கீதா.....''

''அவளை நான் கவனித்துக் கொள்கிறேன். என் சௌமியின் மனசுக்கு வருத்தம் ஏற்படுத்துகிறவங்களை அத்தனை சுலபமாய் நான் விட்டுவிட மாட்டேன். பொறுமையாய் இரு. மெட்றாசுக்குப் போன பிறகு அந்தக் கீதாவுக்கு ஒரு வழி பண்ணுகிறேன்'' என்றான்.

அவன் கையைக் கெட்டியாய் அழுத்திக் கொண்டேன். தெம்பாயிருந்தது.

## 9

**மை**தானத்தில் நெட் பால் விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நிழல்கள் நீளமாகிக் கொண்டிருந்த சாயந்தர வேளை. பொழுது போக வில்லையென்றால் நூல் நிலையத்தில் உள்ள புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருப்பதுதான் எனக்குப் பிடித்தமான வேலை. ஆனால் இப்போதெல்லாம் அங்கே நுழையவே பயமாயிருந்தது. எந்த விரிவுரையாளராவது அல்லது மாணவியாவது அங்கே கொஞ்ச நேரம் சிந்தனை வயப்பட்டு ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க நேரிட்டால் எனக்கு இதயம் திக்கிக்

கென்று அடித்துக் கொள்ளும். யாராவது தென்படுகிற வரையில் எனக்கு மூச்சே நின்றுவிடும் போலாகிவிடும். இப்படி அவஸ்தைப் படுவதைக் காட்டிலும் அந்தப் பக்கம் போகாமலே இருப்பது மேல் என்று எண்ணிக் கொண்டேன்.

''இங்கேயா இருக்கிறீங்க? பிரின்ஸிபால் உங்களை எங்கெல்லாமோ தேடிகிட்டிருக்காங்க'' என்றாள் என் பக்கத்தில் வந்து நின்ற கணிதப் பேராசிரியை.

''ஏன்? எதற்குத் தேடறாங்க?'', ''அதென்னவோ எனக்கென்ன தெரியும்? போலீசிலேயிருந்து ஏதாவது என்கொயரி வந்திருக்கிறதோ என்னவோ.''

அப்படி எதுவும் வந்திருக்காது என்று எனக்குத் தெரியும். ஞானாம்பாளின் தற்கொலையைப் பற்றி எப்போதோ விவகாரத்தை முடித்து விட்டார்கள் போலீசில். சும்மாவானும் என்னை கேலி பண்ணுவதற்காக இப்படி அடிக்கடி சொல்லி வைப்பது அந்த விரிவுரையாளர்களுக்கும் பேராசிரியைகளுக்கும் ஒரு வேடிக்கையான பொழுது போக்காக இருந்தது.

முதல்வர் ஒரு கோப்பை மேஜை முன்னே பிரித்து வைத்துக் கொண்டு எனக்காகக் காத்திருந்தார். ஃபைலில் என் கண்ணில் பட்ட முதல் காகிதம்-எனக்குச் சிறிது கலக்கம் ஏற்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினரான கௌரியம்மாளின் கடிதத் தாள் அது. எனக்காக நன்னடத்தைச் சான்றிதழ் கொடுத்திருந்தார் அந்த எம்.பி.

முதல்வர் பிரித்து வைத்துக் கொண்டிருக்கும் கோப்பு என்னைப் பற்றியது தான் என்பது புரிந்து விட்டது.



''உட்கார்'' என்றார் திருமதி லீலா.

உட்கார்ந்தேன்.

''உன்னைப் பற்றிய ஃபைலைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நீதான் தகுதியானவள்'' என்றார்.

''என்ன விஷயம்?'' என்றேன். நல்ல காலம் ஆபத்து எதுவுமில்லை என்று மூச்சு சீராக வந்தது.

''நீ காலேஜில் படித்த போது கதை கட்டுரைகள் எழுதுவது, மேடைப் பேச்சு—இதிலெல்லாம் நிறைய ஈடுபட்டிருக்கிறாய் போலிருக்கே?''

''ஓரளவு'' என்றேன்.

''அதனாலே உன்னிடம் ஒரு பொறுப்பு ஒப்படைக்கப் போகிறேன்'' என்றார். ''செய்வாயில்லையா?'' தலையாட்டினேன்.

''டெலிவிஷன் நிலையத்திலிருந்து ஒரு க்விஸ் புரோக்ராமுக்காக நம் காலேஜுக்கு அழைப்பு வந்திருக்கிறது. ஆறு அல்லது ஏழு ஸ்டூடண்ட்களை அனுப்பச் சொல்லியிருக்கிறார்கள். இன்டெலிஜென்ட பெண்களாகத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்காக இரண்டு மூன்று ஸ்பெஷல் வகுப்பு நடத்தி, பொது அறிவில் கோச்சிங் கொடுக்க வேண்டியது உன் பொறுப்பு. வேறே இரண்டு காலேஜ் கலந்துக்கிறாங்களாம். அதனால நாம் தான் டாப்பாக வரணும். என்ன?''

''க்விஸ், ஜெனரல் நாலெட்ஜ் இதெல்லாம் எனக்கும் ரொம்ப வீக்தான். இருந்தாலும் முயற்சி பண்ணுகிறேன்'' என்றேன்.

''ஒரு வாரம்தான் டயம் இருக்கிறது'' என்று கூறி விடை கொடுத்தார்.

மறுநாளே எல்லாப் பேராசிரியைகளையும் தொடர்பு கொண்டு எந்தெந்த மாணவிகள் பொது அறிவில் சுட்டி என்று விசாரித்தறிந்து அவர்களைத் திரட்டினேன். பி.யூ.ஸியில் இரண்டு மாணவிகளும், பி.ஏ.யில் இரண்டு பேரும், பி.எஸ்.ஸியில் இரண்டு பேரும் தேர்ந்தெடுத்தேன். இந்த ஆறு பேரில் மூன்று பேர் ஏற்கெனவே வினாடி வினா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தார்கள்.

வெறுமே ஹங்கேரியின் தலைநகரம் எது, எவரெஸ்டின் உயரம் என்ன என்று சொல்லிக் கொடுப்பது போதாதென்று எனக்குத் தெரியும். இப்போதெல்லாம் க்விஸ் நிகழ்ச்சிகள் புத்திசாலித் தனமாயும் மூளைக்கு நிஜமாகவே வேலை கொடுப்பதா யும் இருக்கின்றன என்று அறிந்திருந்தேனாகையால் அந்த வகையில் பரீட்சைகள் வைப்பது என்று முடிவு செய்தேன். ஐந்தாறு நாளைக்குள், சாயந்தரம் மூன்று வகுப்பு நடத்தி அவர்களுக்குப் பயிற்சி தருவது என்று ஏற்பாடு பண்ணினேன்.

எங்கள் அடுத்த வீட்டில் ஒரு பெண் பாங்க் வேலைக்கான பல 'ஐ.க்யூ.டெஸ்ட்'கள் எழுதியிருந் தாள். அதற்கென்றே உள்ள வழிகாட்டிகளும் வாங்கி வைத்திருந்தாள். அவைகளை இரவல் வாங்கி, என் ஆறு மாணவிகளுக்கும் பயிற்சி கொடுத்தேன்.

முதல் வகுப்பு நன்றாகவே நடந்தது. இரண்டாம் வகுப்பு நடக்க வேண்டும். யாரும் வரக்காணோம்



ஐந்தாயிற்று, ஐந்தரையாயிற்று. ஆறு பேரும் எப்படிக் காணாமல் போனார்கள் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டு வெளியே வந்து பார்த்தால்-

வெராந்தாவில் முழங்காலைக் கட்டிக் கொண்டு படியில் உட்கார்ந்திருந்தார்கள்.

''என்னம்மா, ஏன் உள்ளே வராமல் இங்கே உட்கார்ந்திருக்கீங்க?'' என்றேன்.

''நாங்கள் க்விஸ் புரோக்ராமை பாய்காட் பண்ணப் போறோம்'' என்றாள் ஒருத்தி.

''ஏன்?'' என்று திகைத்தேன்.

''நீங்கள் மாணவிகளை செலெக்ஷன் பண்ணின முறை ரொம்பப் பாரபட்சமானது!'' என்றாள் இன்னொருத்தி.

''இல்லையே... தகுதி உள்ளவர்களாகப் பார்த்துத் தானே சேர்த்திருக்கிறேன்?''

''அப்படியானால் கீதாவை ஏன் எக்ஸ்க்ளுட் பண்ணினீங்க? பி.ஏ. ஃபஸ்ட் இயர் ஸ்டுடண்ட் கீதாவைச் சொல்றோம். அவள் பெயரையும் உங்க கிட்டே சொன்னாங்களாமே மாத்ஸ் லெக்சரர்!''

''சொல்லியிருக்கலாம். பல பேர் பல பெயர் களைச் சொல்லியிருந்தார்கள். எனக்கு....''

''நீங்க கீதாவிடம் வேணும்னே காட்டம் காட்டுறீங்க, மேடம். வேணும்னே அவளை இந்தக் குரூப்பிலே சேர்க்காமல் விட்டிருக்கிறீங்க!'' என்று ஒருத்தி கடுமையாகக் குற்றம் சாட்டினாள்.

இன்னொருத்தி, "நீங்க காலேஜின் நன்மையைத் தான் கவனிக்கணுமே தவிர, பர்சனல் ப்ரிஜுடை செல்லாம் பார்க்கக் கூடாது" என்று எனக்குத் தர்மோபதேசம் செய்தாள்.

"ஸ்டாப் இட்!" என்று உரத்த குரலில் அவர்களை அதட்டினேன். "எனக்கு பெஸ்ட் என்று தோன்றிய மாணவிகளை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இந்த விஷயத்தில் யாரும் எனக்கு டிக்டேட் பண்ணத் தேவையில்லை!"

"சரி மேடம். உங்களுக்கு இஷ்டமானவர்களை வைத்து புரோக்ராம் நடத்திக்குங்க. நாங்க விலகிக் கிறோம். வேறே யார் வந்து சேர்ந்துக்கிறாங்க என்கிறதையும் பார்த்துவிடறோம்" என்று ஒரு மாணவி சொன்னபோது தான் நிலைமையின் கடுமை எனக்குப் புலப்பட்டது. "யூ மீன்... அப்படின்னா நீங்க..."

"கீதாவையும் நம்ம நிகழ்ச்சிகளில் சேர்த்துக்குங்க என்கிறோம்!" என்றவள், அடுத்த அறையில் வாசலுக்குப் போய், "கீதா! வாயேன்!" என்று கூப்பிட்டாள்.

மார்பில் அணைத்த புத்தகங்களுடன் சிரித்தபடி கீதா வெளியே வந்தாள். அவள் உதட்டில் ஒய்யாரமான புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

"ஆக, அவளை அழைத்து வைத்துக் கொண்டு, முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டு தான் இந்தத் தர்ணா நடத்தியிருக்கிறீங்க?" என்று சீற்றத்துடன் சொல்ல நினைத்தேன். ஆனால் இது ரொம்ப 'ஸில்லி' யான விஷயம் என்று தோன்றியது. ஒரு மாணவி சுட்டிக்



காட்டிய மாதிரி கல்லூரியின் வெற்றிதான் முக்கியமே தவிர, என்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கள் அல்ல.

என்னைப் புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் கீதாவை நோக்கி நானும் புன்னகை செய்தேன். "ஓகே கீதா, யு ஆர் வெல்கம்!" என்றேன்.

'தாங்ஸ் மேடம்' என்று அவள் சொல்வாளென்று எதிர்பார்த்தேன். சொல்லவில்லை. எல்லாருமாய் ஹாலுக்குள் போனோம்.

அன்று நான் நடத்திய 'மாதிரி க்விஸ் நிகழ்ச்சி'யில் கீதா உண்மையிலேயே பிரமாதமாக விடைகள் தந்தாள். இந்தக் கெட்டிக்காரியை விட்டு விட இருந்தோமே என்று வருத்தம் கூடப் பட்டேன்.

ஆனால் அதற்கடுத்த தடவை நிகழச்சி நடத்திய போது எனக்குப் பெருத்த அதிர்ச்சி காத்திருந்தது.

சுதந்திரம் எனது பிறப்புரிமை சொன்னவர் யார்?

தொழிலாளிகளே! ஒன்று படுங்கள். நீங்கள் இழக்கப் போவது உங்கள் விலங்குகளைத் தவிர வேறு எதுவுமில்லை-சொன்னவர் யார்?

-இப்படிக் கேள்விகளைக் கேட்டு, விடைகளைச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

கீதா எழுந்து நின்றாள்.

"என்ன கீதா?" என்றேன்.

"நான் ஒரு புகழ்பெற்ற கொடேஷன் சொல்கிறேன். அதைச் சொன்னது யார்னு நீங்க சொல்லுங்க.

நானும் சிரித்தேன். ''ஸாரி! நான் இந்த கைடை வைத்துக் கொண்டு, இதிலே இருக்கிறதைத் தான் சொல்றேன். எனக்கு வேறென்ன தெரியும்?'' என்றேன்.

''அது ரொம்பப் புகழ் பெற்ற பொன்மொழி மேடம், சுலபமாய்ச் சொல்லலாம்'' என்றாள்.

மற்ற ஆறு பேரும் அவளை நோக்கிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவள் ஏதோ வம்புக்குத் தான் ஆரம்பிக்கிறாள் என்று எனக்குத் தோன்றிவிட்டது. அதை அடக்கு முறையால் தீர்க்க முடியாது என்று தீர்மானித்தேன்.

''சரி, சொல்லு'' என்றேன் புன்சிரிப்புடன்.

''நான் கல்யாணம் செய்து கொள்ளாமலே குழந்தை பெற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன் என்று சொன்ன இந்தி நட்சத்திரம் யார்?'' என்றாள்.

எல்லா மாணவிகளும் கடகடவென்று சிரித்தனர். எனக்கு முகம் சிவந்து விட்டது என்பதை உணர்ந்தேன். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''அது பொன் மொழியில்லை. வேணுமென்றே நாலு பேர் கவனிக்கணும் என்பதற்காகச் சொன்ன ஸில்லி ஸ்டேட்மெண்ட்'' என்றேன்.

''எதுவானால் என்ன? யார் சொன்னாங்க என்று சொல்லுங்களேன்'' என்றாள்.

''இங்கே நான் உனக்கு க்விஸ் வகுப்பு நடத்துகிறேனே தவிர நீ எனக்கு நடத்தவில்லை'' என்றேன் கண்டிப்பான குரலில்.



''ஐயையோ! நான் இப்ப என்னடி சொல்லி விட்டேன்?'' என்று மிரண்டவள் போல தன் தோழிகளைப் பார்த்தாள் கீதா. ''ஏன் இவருக்கு இப்படிக் கோபம் வருகிறது?''

''வில் யூ ப்ளீஸ் ஸிட் டவுன்?'' என்று மறுபடியும் அதட்டல் போட்டேன்.

''ஸாரி'' என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தாள். ''இந்தக் காதல், ஸெக்ஸ் காரியங்களெல்லாம் உங்களுக்குப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியாது. யாரோ சொன்னாங்க, நீங்க மதுரை கொடைக்கானல் பழனின்னு ஒரு பாய் ஃப்ரண்டோடு ஜாலியாகப் போயிருந்தீங்கன்னு. அதனாலே தான் கேட்டேன்.... தப்பாயிருந்தால் மன்னிச்சிடுங்க....''

எல்லாரும் கடகடவென்று சிரித்தார்கள். கீதாவின் கஸின் ஸிஸ்டர் என்று சொன்ன பெண் கொடைக்கானலுக்கும் பழனிக்கும் என்னோடு வந்தவள். அவள் சொல்லியிருக்கிறாள் போலிருக்கிறது என்னையும் விஜ்ஜுவையும் பற்றி.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதர்களைக் கடிக்க வந்தது என்பார்களே, அது மாதிரி என் சொந்த வாழ்க்கைக்கே அல்லவா வந்துவிட்டாள்!

பொங்கிக் கொண்டு வந்த ஆத்திரத்தில், எனக்கு மட்டும் சக்தி இருந்திருக்குமானால் அங்கேயே அப்போதே கீதாவைச் சாம்பலாக்கியிருப்பேன். சுற்றிலும் இருக்கும் ஆறு பெண்களும் என்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். பளீரென்று கன்னம் வீங்கும்படி கீதாவை ஓர் அறை

விடப் போகிறேன் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அல்லது குறைந்த பட்சம், 'சீ! அபத்தமாய் உளறாதே!' என்றாவது நான் சொல்வேனென்று எதிர்பார்த்தார்கள்.

நான் எதுவும் சொல்லாமல் மரம் போல் நின்று விட்டது அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்திருக்க வேண்டும். ரொம்ப நல்லவள் மாதிரி, ரொம்ப சாது மாதிரி, ஒழுக்கமே வடிவெடுத்து வந்த மாதிரி தோற்றமளிக்கும் இந்தப் பொருளாதார விரிவுரையாளர் உண்மையில் காதல் களியாட்டங்களில் நீந்துகிறவள் என்று அவர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டதோ என்னவோ, என்னையும் கீதாவையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

பல யுகங்கள் கழித்து நான் சுயப் பிரக்ஞை அடைந்தேன். எப்படியோ ஒரு புன்னகையை வரவழைத்து, படாத பாடுபட்டு என் உதட்டில் அதைப் பிடித்து வைத்துக் கொண்டேன். ''கீதா! இன்னிக்கு நீ ரொம்பக் குஷாலான மூடில் இருக்கிறாய்! உனக்கு ஈடு கொடுக்க என்னால் முடியாது!'' என்று சொல்லிவிட்டு, ''ஓகே! நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் மீதியை!'' என்று வகுப்பைக் கலைத்தேன். மாணவிகளுடைய முகத்தைப் பார்த்த போது அதுதான் நான் பண்ணின பெரிய அசட்டுத்தனம் என்று தெரிந்தது. கீதாவின் குற்றச்சாட்டை மறுக்க முடியாதவளாக நான் நழுவுகிறேன் என்பது அவர்களுக்குப் புரிந்து விட்டது. இனி நான் என்ன சொல்லியும் அந்த அபிப்பிராயத்தை மாற்ற முடியாது. முதுகில் தட்டியபடி, அவளை வேடிக்கை செய்தபடி அவர்கள் சென்றார்கள். அவர்கள் கண்ணில் நான் எத்தனைக்கெத்தனை மட்டமாகத் தாழ்ந்து விட்டேனோ அத்தனைக்கத்தனை கீதா



'ஹீரோயி'னாக உயர்ந்துவிட்டாள் என்பதைக் கண்டு கொண்டேன்.

எனக்கு இதயம் வெடித்தது. 'கேவலம் ஒரு சின்னப் பெண், என்னைக் காட்டிலும் மூன்று நாலு வயது இளையவள், என்னமாய் என்னை அவமானப் படுத்தி விட்டாள்! இந்தச் சிறுமையை விழுங்கி ஜீரணித்துக் கொண்டு ஒன்றுமே நேராத மாதிரி வீடு திரும்பினால் அதைக் காட்டிலும் கேவலம் கிடையாது. 'விடாதே அந்தக் கீதாவை!' என்று என் நெஞ்சுக்குள் ஒரு குரல் அலறியது.

வேகமாக நடந்தேன். என் கால்கள் என்னையு மறியாமல் முதல்வரின் அறை வாசலில் போய் நிற்பதை உணர்ந்தேன்.

உள்ளே போவதா வேண்டாமா என்று ஒரு வினாடி யோசித்தேன். அதற்குள் தற்செயலாக அவரே வெளியே வந்தவர், ''என்னம்மா இங்கே நின்னிட்டிருக் கிறே?'' என்றார்.

''உங்களைப் பார்க்கலாம்னுதான்... ஒரு பர்ஸனல் விஷயம்...'' என்றேன்.

என் முகத்தைப் பார்த்து அவர் பயந்திருக்க வேண்டும். ''வா உள்ளே வா'' என்று அழைத்துப் போய் உட்கார்த்தி வைத்தார். எனக்கு மூச்சு இரைத்துக் கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்ததோ என்னவோ. ''மெதுவாய்ச் சொல்லு. ஒன்றும் அவசரமில்லை. முதலில் ஆசுவாசப் படுத்திக் கொள்'' என்று கூறி, தானே ஒரு டம்ளரில் தண்ணீர் எடுத்து வந்து கொடுத்து என்னைக் குடிக்கச் செய்தார். முன்பு நான் பேராசிரியை

ஞானாம்பாளின் தற்கொலைச் செய்தியை கொண்டு வந்த மாதிரி இப்போது எதுவும் சொல்லாமலிருக்க வேண்டுமே என்று தெய்வங்களையெல்லாம் அவர் வேண்டிக் கொள்வது எனக்குத் தெரிந்தது.

''அந்தப் பெண் கீதா... வரவர ரௌடியாகவே ஆகிக் கொண்டிருக்கிறாள் மேடம்...'' என்று நான் ஆரம்பித்தேனோ இல்லையா, 'அப்பாடா' என்று அவர் முகத்தில் ஆறுதல் படர்ந்தது.

''அவ்வளவுதானே! ஒன்றும் விபரீதமாய் நடந்து விடவில்லையே?'' என்றார்.

எனக்குக் கோபம் வந்தது. அதை வெளிக் காட்டாமல், க்விஸ் தயாரிப்பின் போது கீதா நடந்து கொண்டதையும் பேசியதையும் சொல்லி முடித்தேன். அவ்வளவையும் அவர் இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுக் கொண்டிருக்கிறார் என்பது நான் சொல்லிக்கொண்டிருக்கும் போதே எனக்குப் புலப்பட்டு விட்டது. அவர் லேசாய்ப் புன்னகை கூடச் செய்கிறார் என்று தோன்றியது. எழுந்து குறுக்கும் நெடுக்கும் உலாவியவர், ''வந்து.. அந்தக் கீதா சொன்ன மாதிரி உனக்கு வந்து..'' தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''காதல் விவகாரம் உண்டா?'' என்று கேட்டார்.

''உண்டு..ஆனால் அது என் சொந்த விஷயமில்லையா மேடம்?'' என்றேன்.

''அஃப் கோர்ஸ், அஃப் கோர்ஸ்!'' என்றார் திருமதி லீலா. ''ஆனால் எது பர்ஸனல் விஷயம். எது பப்ளிக் விஷயம் என்பது ஸ்டூடண்ட்களுக்கு எங்கே தெரிகிறது.



இதுவே பாய்ஸ் காலேஜாக இருந்தால் சுவருக்குச் சுவர் எழுதி வைத்திருப்பார்களே!''

அவர் எதுவும் செய்வாரென்று தோன்றவில்லை.

''சுமித்ரா... நான் சொல்றேன், கேளு. ஏற்கெனவே அந்தக் கீதா எப்படிப்பட்ட பெண் என்று நாம் பார்த்திருக்கிறோமே! மறுபடி மறுபடி அவளைப் போய் நாம் சீண்டுவானேன்...''

எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது. ''இவ்வளவு தூரம் அவள் கலாட்டா செய்து விட்டதால், அவளை நீங்கள் 'பிளாக் லிஸ்ட்' பண்ணுவீங்களாக்கும் என்று நினைத்தேன்...'' என்றேன். ஒரு மாணவியை 'பிளாக் லிஸ்ட்' பண்ணுவதென்றால், படிப்பில் அவள் எவ்வளவுதான் பிரமாதமாக ராங்க் வாங்கினாலும் அடுத்த வருடம் கல்லூரியில் சேர்த்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்வதாகும்.

முதல்வரின் முகம் வெளுத்து விட்டது. ''பிளாக் லிஸ்டா... ஐயோ! வேறே வினையே வேண்டாம். அந்த நிமிஷமே மொத்தக் காலேஜூம் அவளுக்காக ஸ்டிரைக் பண்ணிவிடும்...''

''மேடம்! அந்தக் கீதாவினால் ஒரு தற்கொலையே...'' என்று ஆத்திரம் தாளமாட்டாமல் சொல்லப் போனவள், விஜ்ஜூவின் எச்சரிக்கை ஞாபகம் வந்தவளாக அடக்கிக் கொண்டேன். ''நாமெல்லாம் தற்கொலை செய்து கொள்கிற மாதிரி பண்ணிவிடுவாள் போலிருக்கிறது...'' என்று கசப்புடன் வாக்கியத்தை முடித்தேன்.

''நோ நோ! அந்த வார்த்தையெல்லாம் ஏன் சொல்கிறாய்? நீ புதுசு. அதனால் படபடப்பு வருகிறது. பொறுமையாயிரு'' என்றார் லீலா. பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவர் மாதிரி, ''பர்ஸனல் விஷயங்களிலும் ஜாக்கிரதையாகவே இரு. சீக்கிரம் கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு எல்லார் வாயையும் அடை!'' என்றார்.

''தாங்ஸ்'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தேன். இதுவே என் வீடாக இருந்தால் கதவைப் படீரென்று சாத்திக் கொண்டு வெளிவந்திருப்பேன். முதல்வரின் கையாலாகாத்தனம் என்னைக் கொதிக்க வைத்தது. ''என்ன மேடம், பிரின்ஸிபாலிடம் சொல்லியாச்சு போலிருக்கு! எனக்குத் தூக்குத் தண்டனை நாளைக்கா, நாளை மறு நாளைக்கா?'' சிரித்துக் கொண்டே எதிரில் நின்றாள் கீதா.

''நான் உன்னோடு பேசத் தயாராயில்லை!'' என்றேன்.

''நீங்கள் யாருடன் பேசத் தயாரோ அவர் ரிஸப்ஷன் ஹாலில் உங்களுக்காகக் காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்!'' என்றாள் அவள்.

''என்ன சொல்கிறே?''

''மிஸ்டர் விஜேந்திரன்-உங்கள் விஜ்ஜு-உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார்னு சொன்னேன்!'' அவள் முகத்தில் ஒரு குரூரமான புன்னகை தவழ்ந்தது.

நான் ரிசப்ஷன் ஹாலை நோக்கி நடந்தேன். உடனே விஜ்ஜுவைப் பார்த்து அவன் தோளைக் கட்டிக் கொண்டு என் துன்பத்தையெல்லாம் கொட்டிக் கதற வேண்டும் போலிருந்தது.



கீதா திரும்பிச் செல்லவில்லை. என்னுடன் கூடவே நடந்தாள். ''நான் உங்களைவிட வயசில் சின்னவள்தானே, மேடம்?'' என்றாள்.

நான் பேசாமல் நடந்தேன்.

அவள் தொடர்ந்தாள். ''வயசில் சின்னவள் மட்டுமில்லை. அழகில் பெரியவளும் கூட, காலேஜ் ஸ்டூடண்ட், பணக்காரி, கவர்ச்சியாக டிரெஸ் பண்ணிக் கொள்ளத் தெரிந்தவள். அதனால் இப்படி என்கிறதுக்குள்-'' ஒரு சொடுக்குச் சொடுக்கிக் காட்டினாள்-''உங்கள் காதலனை என்னால் தட்டிக் கொண்டு போய் விட முடியும்!''

''கீதா!''

''பதறாதீங்க! அப்படிச் செய்து விட மாட்டேன்!'' கலகலவென்று நகைத்தாள். ''நாங்கள் ஸ்டூடண்ட்கள், எங்களுக்குள் ஒரு 'எதிக்ஸ்' வைத்திருக்கிறோம். ஒருத்தருடைய பாய் ஃபிரண்டை இன்னொருத்தர் பறிக்கிறது கிடையாது!''

அவள் திரும்பிச் சென்று விட்டாள். முதல்வரின் அறையிலிருந்து வெளிவந்த போது இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக என் ரத்தம் கொதிக்கத் தொடங்கியிருந்தது. ஒரு கல்லூரி மாணவி தன் ஆசிரியையிடம் பேசுகிற பேச்சா இது! இந்த அளவுக்கு ஒரு மாணவி போக்கிரியாக இருக்க முடியும் என்று, நேற்றுவரை மாணவியாக இருந்த நான், நினைத்ததே கிடையாது.

''சௌமி!'' என்று கூப்பிட்ட வண்ணம் எழுந்து வந்தான் விஜ்ஜு. என்னைக் கண்டதும் எங்களுக்குள் தொடர்பு ஏற்பட்ட பிறகு, என்னைப் பார்ப்பதற்காக அவன் கல்லூரிக்கே வருவது இது தான் முதல் தடவை. ஏன் இங்கேயெல்லாம் வந்து நாலுபேர் பேசுவதற்கு இடம் ஏற்படுத்துகிறாய் என்று முதலில் கேட்க நினைத்தேன். ஆனால் நான் அப்போதிருந்த மன நிலையில், அவனுடைய அண்மை எனக்கு ஆயிரம் யானைபலம் தருவது போலிருந்தது. தெருவில் விழுந்து காயம் பட்டுக் கொண்ட சிறுவன் தாயைக் கண்டவுடன் அவள் மடியில் விழுந்து அழுவது போல எனக்குள் அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

முதலில் விஜ்ஜு என் முகத்தைப் பார்க்கவில்லை போலிருக்கிறது. ''உன் ஸ்டூடண்ட்—அந்தக் கீதாவை—இப்பத்தான் பார்த்தேன். எப்படி என்னைத் தெரிஞ்சிட்டிருக்கிறாள் என்று தெரியலே. தானாகவே வந்து என்னை விஷ் பண்ணிவிட்டு 'மிஸ் சுமித்ரா இதோ வந்துடுவாங்க' ன்னு சொல்லிட்டுப் போகிறாள்!'' என்றான்.

இந்தக் கீதாவைப் பற்றி அன்று பழனியில் அத்தனை சொல்லியிருந்த போதிலும், எவ்வளவு சாதாரணமாக அவளைப் பற்றிப் பேசுகிறான்! ஆண்பிள்ளைகளே இப்படித்தான் போலிருக்கிறது! 'இதோ இப்படி என்கிறதுக்குள்...!' கீதா விரலைச் சொடுக்கின சப்தம் என் காதில் எதிரொலித்தது. நிஜமாகவே என் விஜ்ஜுவை என்னிடமிருந்து பறித்துக் கொண்டு போய்விடுவாளா என்ன? அவளே சொன்னபடி என்னைக் காட்டிலும் அவள் வயதில் இளையவள், அழகி, பணக்காரி...



அப்போதுதான் அவன் என் கலங்கிய கண்களைப் பார்த்தான். ''சௌமி... என்ன இது?'' சுற்று முற்றும் பார்த்து, யாரும் இல்லையென்று தெரிந்து கொண்டதும் சட்டென என் கண் முனைகளைத் துடைத்துவிட்டான். ''சௌமி! என்ன நடந்தது? என்ன, சொல்லு!''

வெகு தூரத்திலிருந்து எந்தக் கண்களாவது என்னைக் கவனித்துக் கொண்டிருக்கும் என்று எனக்குத் தோன்றியதால் பேசாமலிருந்தேனே தவிர, வேறு சமயமானால் ஓவென்று அழுதிருப்பேன்.

''அந்தக் கீதா கொடுக்கும் தொல்லையை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, விஜ்ஜு...'' என்று சொல்லும்போதே என் தொண்டை கம்மிவிட்டது. அதன் பின்தான் அவன் என்னை நன்றாகக் கவனித்தான். ''சௌமி, பதறாதே... மெதுவாய்ச் சொல்லு...'' என்றான்.

நான் எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிட்டு, ''அந்த ஞானாம்பாளைத் தற்கொலை செய்து கொள்ளப் பண்ணின மாதிரி என்னையும் ஒரு நாள் பண்ணிவிடுவாளோ என்று பயமாயிருக்கிறது...'' என்றேன்.

''இந்த விஜ்ஜு இருக்கிற வரைக்கும் உனக்கு அந்தப் பயம் வேண்டாம்.'' என்றான். அவன் முகத்தில் எல்லா விளையாட்டுத்தனங்களும் மறைந்து விட்டன. விருகம்பாக்கத்தில், அந்த வீட்டின் பூட்டை இரும்புத் தடியால் அடித்து உடைத்தபோது என்ன தீவிரம் இருந்ததோ அதே தீவிரத்தை இன்று அவனிடம் மீண்டும் கண்டேன். எனக்கு அச்சமாய்க்கூட இருந்தது.

''சௌமி... அவள் திமிரை ஒடுக்காமல் விடக் கூடாது'' என்றவன், ''அந்த ஞானாம்பாளின் கடிதத்தைப் பத்திரமாய் வைத்திருக்கிறாய் இல்லையா?'' என்றான்.

''ஆமாம்... வீட்டில் இருக்கிறது...'' என்றேன்.

''என்னோடு புறப்பட்டு வா. அதை என்னிடம் எடுத்துக் கொடு'' என்றான்.

''போலீசில் சொல்லப் போகிறாயா? அப்புறம் நானும் இன்வால்வ் ஆகிவிடுவேன் என்றாயே...''

''போலீஸ் வேண்டாம்—இந்த விஜ்ஜுவே போதும்'' என்றான் அவன்.

ஸ்கூட்டரில் அவனுடன் சென்றேன். வளவள வென்று அரட்டையடிக்கும் விஜ்ஜு வழியெங்கும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

பாட்டிக்கு அவளுடைய கவலை. விஜ்ஜுவைக் கண்டதும், ''ஏண்டாப்பா, குடித்தனத்துக்கு யாராவது நல்ல ஆளாய்க் கிடைத்தார்களோ?'' என்று கேட்டாள்.

''பார்த்துக் கொண்டிருக்கிறேன், பாட்டி. சாவியை வேணுமானால் வாங்கிக் கொள்கிறீர்களா?''

''வேண்டாம், வேண்டாம். உன் கிட்டேயே இருக்கட்டும்'' என்றாள் பாட்டி.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த வேளையில் நான் உள்ளே போய் அலமாரியைப் பார்த்தேன். பகீரென்றது. ஒரு புத்தகத்தைக் கூட அங்கே காணோம்!

''என்ன தேடறே?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் தாத்தா.



''இங்கேயிருந்த புத்தகங்கள் எங்கே? ஒன்றைக் கூடக் காணோமே?'' என்றேன்.

''எல்லாத்தையும் பழைய பேப்பர்காரன் கிட்டே போட்டேன். இடத்தை அடைச்சுக்கிட்டு... வெறும் குப்பை!'' என்றார் தாத்தா. ''இருபத்திரண்டு ரூபாய் தேறித்து என்றால் பார்த்துக் கொள்ளேன்!''

''தாத்தா!'' என்று பதறிவிட்டேன். ''எந்தப் பேப்பர்க்காரன்? எப்போ போட்டீங்க?''

''உன் புத்தகங்களையும் சேர்த்துப் போட்டுட் டேனோ என்று பயப்படறியா? தாத்தாவுக்கு அத்தனை அறிவு மழுங்கி விடவில்லையம்மா... என் புத்தகங்களை மட்டும் தான் போட்டேன்!''

உயிர் வந்தது எனக்கு. ''என் புத்தகங்கள்?''

''அதோ அந்தப் பீரோ மேலே வைத்திருக்கிறேன் பார்!'' என்று சொல்லிவிட்டு ரோஷமாகத் திரும்பிப் போய்விட்டார் தாத்தா.

பரபரப்புடன் அந்தப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினேன்.

பேராசிரியை ஞானாம்பாளின் கடிதம் கீழே விழுந்தது.

முதன் முறை அதைக் கையால் தொட்டபோது என்ன நடுக்கமும் பதைப்பும் ஏற்பட்டனவோ அதையே இன்றும் உணர்ந்தேன். உயிரை மாய்த்துக் கொள்வது என்று தீர்மானம் பண்ணிய வேளையில் ஒருவர் எழுதிய கடிதத்துக்கு எத்தனை தனியான பயங்கரம் ஏற்படுகிறது!

புரொபசர் ஞானாம்பாள்! உங்களோடு நான் ஒரு முறை கூடப் பேசியதில்லை. பழகியதில்லை. ஆனால் நீங்கள் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு அந்தக் கீதா உங்களை என்ன பாடு படுத்தியிருப்பாள் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது, மேடம்! ஏனென்றால் கிட்டத் தட்ட அதே துன்பத்தை அதே கீதாவினால் நானும் பட்டுக் கொண்டிருக்கிறேன்...

பாட்டி கொடுத்த காப்பியை உறிஞ்சியபடி விஜ்ஜு உள்ளே வந்தான். ''என்ன, அந்தக் கடிதம் அகப்பட வில்லையா?'' என்றான்.

''இதோ'' என்று கொடுத்தேன்

இரண்டொரு நிமிடம் அதையே பார்த்துக் கொண்டு மௌனமாக நின்றிருந்தான். பிறகு பாண்ட் பையில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

''என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றேன். அவன் சொல்லவில்லை.

## 10

ராஜசேகரன் தன் மனைவியின் சம்பள பாக்கி விவகாரங்களுக்காக மறுபடியும் இரண்டு மூன்று முறை கல்லூரிக்கு வந்திருந்தார். ஒவ்வொரு தடவையும் என்னைச் சந்தித்து, ''ஆபரேஷன் தினத்தன்று கட்டாயம் நீங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்துவிடணும் அம்மா. அப்பத் தான் எனக்குத் தைரியமாயிருக்கும்,'' என்று சொன்னார்.



நான் சிரித்தேன். ''இதென்ன பெரிய ஹார்ட் ஆபரேஷனா? ரொம்பச் சாதாரணம்'' என்றேன்.

''இருந்தாலும் நீங்கள் வந்தால்தான் எனக்கு நிம்மதி'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் அவர்.

குறிப்பிட்ட தினத்தன்று லீவு போட்டிருந்தேன்.

ஆபரேஷனுக்கு ஒரு வாரம் இருக்கும். வெள்ளிக்கிழமை காலை வேளை.

தாத்தா முன்னறையில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தவர், ''சௌமி, இப்படி வாயேன்'' என்று கூப்பிட்டார்.

''என்ன தாத்தா?''

''உன் பாட்டி இருக்கிறாளா உள்ளே?''

''இல்லையே, கோவிலுக்குப் போயிருக்கிறாள்'' என்றேன்.

''நல்ல வேளை, அவள் இல்லாத சமயத்தில் உன்னிடம் சொல்லணுமென்று நினைத்திருந்தேன்'' என்றார்.

நான் மோடாவை இழுத்துப் போட்டுக் கொண்டு அவரெதிரில் உட்கார்ந்தேன். ''என்ன தாத்தா, பீடிகை ரொம்பப் பலமாயிருக்கிறது?'' என்றேன்.

''நீ படிச்ச பெண். தைரியசாலி. எது நல்லது எது கெட்டது என்று தெரிந்து கொண்டிருக்கிறவள்...''

''எனக்கு வேலை இருக்கு, தாத்தா. எழுந்து போறேன்'' என்று சிணுங்கினேன்.

''அந்தப் பையன் விஜ்ஜு... அவன் கிட்டே உனக்கு ஏதாவது இதுவா?'' என்றார்.

''இதுவான்னா?'' என்று தெரியாத மாதிரி கேட்டேன்.

''அவனைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு மனசுக்குள் நினைத்திருக்கியா? வெட்கப்படாமல் உண்மையைச் சொல்லணும்.''

எனக்கு வெட்கமாய்த்தான் இருந்தது. இருந்தாலும் தாத்தாவிடம் என்றைக்காவது ஒரு நாள் சொல்லித் தான் ஆகணும். அப்போது என் விருப்பப்படி கல்யாணத்தைச் செய்து வைக்கப் போகிறவரும் இந்தத் தாத்தா தானே தவிர எங்கேயோ ஊர் சுற்றிக் கொண்டிருக்கிற என் அம்மாவும் அப்பாவுமல்ல.

''சொல்லும்மா'' என்றார்.

''ஆமாம் தாத்தா'' என்று ஒப்புக் கொண்டேன்.

''யோசித்துச் செய்... அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்.''

திகைத்தேன். ''என்ன தாத்தா சொல்றீங்க?''

அவர் பேப்பரை நாலாக மடித்து, ஓரங்களை நீவி விட்டுக் கொண்டிருந்தார். சில வினாடிகளாயிற்று. ''எனக்கு அந்தப் பையனைப் பற்றி அதிகம் தெரிய வில்லை.. உனக்குத் தெரிந்தவரையில் யோக்கியமான பிள்ளைதானே?''

''என்ன தாத்தா அப்படிக் கேட்டுட்டீங்க? ரொம்பத் தங்கமானவர்..''



''சரி, உனக்கு அப்படித் தோன்றினால் சரி.''

எழுந்து கொள்ளவிருந்தவரை, கையைப் பிடித்துத் திருப்பி உட்கார்த்தி வைத்தேன். ''நீங்க என்ன சொல்ல வந்தீங்க, அதைச் சொல்லுங்க.''

''அது ஒண்ணுமில்லேம்மா...சும்மா ஒரு இது.. உனக்கு அவன் மேலே நம்பிக்கை இருந்தால் சரி....''

''என்ன தாத்தா,என்னென்னவோ பேசுறீங்க? நம்பிக்கை அவநம்பிக்கைக்கு இப்ப என்ன வந்தது?''

''ஒண்ணுமில்லேம்மா... இரண்டு மூணு தரம் என் கண்ணிலே பட்டுது. அதனாலே அப்படித் தப்பாய் நினைச்சேன். ஒரு வேளை அவனோட தங்கையாய் இருக்கும். தப்பாய் நினைத்தால் மகா பாவம்...''

எனக்குத் தலை சுழன்றது. ''என்ன கண்ணிலே பட்டுது? விளக்கமாய்ச் சொல்லுங்க தாத்தா?''

''உன்னிடம் தெரியாத்தனமாய்ப் பேசினது தப்பாயிட்டுது பார்...வந்து...ஸ்கூட்டரிலே பின்னாடி ஒரு சிறு வயசுப் பொண்ணை ஏத்தி அழைச்சிட்டுப் போயிட்டிருந்தான். இரண்டு மூணு தரம் பார்த்துட்டேன். நான் நினைச்சது தப்பாயிருக்கலாம். அதான் சொன்னேனே, அவனோட தங்கையாயும் இருக்கலாம். நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காதே.''

எப்படி என்னால் குழப்பிக் கொள்ளாமல் இருக்க முடியும்.?

..நிச்சயமாய் அது அவன் தங்கையாக இருக்க முடியாது. குடும்பத்தில் யாருடனும் அவனுக்குச் சினேகிதம் கிடையாது. ஸ்கூட்டரில் அழைத்துச்

செல்லும் அளவுக்குப் பிரியமானவர் யார் இருக்கப் போகிறார்கள்?

நினைக்கும் போதே என் மனம் பதைத்தது. அந்த விரல் சொடுக்கின் ஓசை என் காதில் ஒலித்தது. இன்னொரு பெண்ணின் காதலனைப் பறிக்க மாட்டேன் என்று சும்மாவானும் சொல்லிவிட்டு, கடைசியில் என்னைப் பழிவாங்க இத்தனை தூரம் வந்து விட்டாளோ?

விஜ்ஜுவை உடனே பார்த்துக் கேட்க வேண்டும் போல் என் உள்ளம் பதறியது. ஆனால் அவன் ஒரு நாளும் எனக்குத் துரோகம் செய்ய மாட்டான் என்ற நம்பிக்கையும் இருந்தது.

மனத்துக்குள் ஏற்பட்ட இந்தத் தவிப்பில் ராஜசேகரனின் குழந்தை விஷயத்தை நான் மறந்தே போனதில் ஆச்சரியமென்ன? எங்கள் எதிர் வீட்டு டெலிபோன் எண்ணைச் சொல்லியிருந்ததால் அவரே என்னைக் கூப்பிட்டார். அப்போது தான் சாப்பிட்டு விட்டு உடை மாற்றிக் கொண்டிருந்தேன். ''என்னவோ ஆஸ்பத்திரிக்குப் போகப் போகிறேன். காலேஜுக்கு லீவு போட்டிருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந் தாயே?'' என்று பாட்டிக் கேட்டது என் புத்தியில் உறைக்கவில்லை. எதிர் வீட்டுக்குப் போய்ப் போனை எடுத்தேன்.

''மாலுவை ஆபரேஷன் தியேட்டருக்கு அழைச் சிட்டுப் போயிட்டாங்க. நீங்க இன்னும் வரலியேன்னு தான் போன் பண்ணினேன். டாக்டர் மைதிலி கூடக் கேட்டாங்க, நீங்க ஏன் வரலேன்னு..'' என்றார் ராஜசேகரன்.



''ஓ...'' என்று விழித்துக் கொண்டேன். ''வந்து..''

''உங்களுக்குக் கஷ்டமாயிருந்தால் வர வேண்டாம்மா'' என்றார் அவர். அந்தக் குரலிலிருந்த வேதனை என்னை உசுப்பிவிட்டது.

''இல்லை, இதோ வந்துவிடுகிறேன்'' என்று கூறி, மேம்பாலத்தருகே ஓர் ஆட்டோ பிடித்துக் கொண்டு புறப்பட்டேன். அப்படிக் கூட நான் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தபோது, ஆபரேஷன் முடிந்து விட்டது.

''கொயட் ஆல் ரைட். நல்லாயிடும். கவலைப் படாதீங்க'' என்று டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் குரல் கேட்டது. ஸ்பெஷல் வார்டில் கொண்டு வந்து விட்டிருந்தார்கள் மாலுவை. காதுக்கும் தலைக்கும் சேர்த்துக் கட்டுப் போட்டிருந்தது. இன்னும் மயக்கத் திலிருந்து அவள் விடுபடவில்லை.

''இரண்டு நாள் இங்கே இருந்தால் போதும். ஒரு வாரத்தில் நல்லா ஆயிடுவாள்'' என்று என்னிடமும் சொன்னார் டாக்டர். நன்றி சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

பெரிய பெரிய வேப்ப மரங்கள் வளர்ந்திருந்தன வெளியே. வெய்யில் துளியும் கீழே விழாதபடி அத்தனை நெருக்கமான நிழல். மரத்தைச் சுற்றி வட்டமான சிமெட்டி மேடை போடப்பட்டிருந்தது, உட்காரு வதற்குத் தோதாக.

''பையனை அழைத்து வரவில்லையா?'' என்று கேட்டேன்.

''இல்லை. பக்கத்து வீட்டுக்காரங்க பார்த்துக் கொள்றேன்னு சொன்னார்கள். விட்டு விட்டு வந்தேன். அவன் அவர்களிடம் மட்டும்தான் ஒட்டுவான்'' என்றார்.

நான் மெல்லிசாய்ப் புன்சிரிப்புக் காட்டினேன். அவருக்குத் துணையாகக் கொஞ்ச நேரம்-மாலுவுக்கு நினைவு வருகிற வரையில்-உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற கடமையுணர்வைத் தவிர வேறெதுவும் எனக்குத் தோன்றவில்லை.

''உங்களுக்குப் பாவம் ரொம்பத் தொல்லை'' என்றார்.

''அதெல்லாமில்லை... மாலுவின் அம்மா இருந்தால் செய்ய மாட்டாளா? அதைத் தான் நான் செய்கிறேன்'' என்றேன்.

மனைவியைப் பற்றி நான் குறிப்பிட்டவுடன் அவர் தன் கண்ணீரை மறைத்துக் கொள்கிற மாதிரி தலையைத் தாழ்த்திக் கொண்டார். ''அவள் தான் போயிட்டாளே பாவி! ஒரு வார்த்தை-ஒரே ஒரு வார்த்தை-நான் சொன்னதைப் பொறுக்க மாட்டாமல் போய் விட்டாளே!'' என்றார்.

நான் நிமிர்ந்து அவரை நோக்கினேன்.

அவர் சொன்னார்: ''என்னவோ தெரியல்லே, அன்றையிலிருந்து உங்கள் மீது எனக்கு ஒரு அலாதிப் பாசம் ஏற்பட்டுவிட்டது... எனக்கு ஒரு தங்கை பத்து வயசில் போய்விட்டாள். அவள் இப்ப இருந்தால் உங்க வயசுதான் இருக்கும். அதனால் தான் உங்களைப் பார்க்கிறப்போ என் ஸிஸ்டர் மாதிரி ஒரு நெகிழ்ச்சி உண்டாகிறதோ என்னவோ... ஞானமும் நானும் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி இத்தனை நாள் யாரிடமும் நான் புலம்பியதில்லை.. உங்க கிட்டே பேசினால் போர் என்று நினைப்பீர்களோ...''



''ஒரு நாளும் நினைக்க மாட்டேன்'' என்று உறுதி கூறினேன். எதிர்பாராத ஏதோ ஒன்று அவர் சொல்லப் போகிறாரென்று தோன்றியது. தொல்பொருள் ஆராய்ச்சிக்காரர்கள், என்ன வரப்போகிறதோ என்று தோண்டிய இடத்தில் ஆவலுடன் பார்ப்பதுபோல நான் அவர் முகத்தைப் பார்த்தேன்.

''ஞானத்துடன் பத்து வருஷம் குடும்பம் நடத்தினேன். ஆனால் அவள் இவ்வளவு ஸென்ஸிடிவாய், இவ்வளவு ரோஷக்காரியாய் இருப்பாளென்று நான் நினைக்கவேயில்லை. பாவி, நான் காட்டிய பிரியத்துக்கெல்லாம் மதிப்பே இல்லையென்றல்லவா பண்ணி விட்டாள் கடைசியில்? பிரியம் என்றால் எப்படிப்பட்ட பிரியம் என்று நினைக்கிறீர்கள்? சொன்னால் நம்ப மாட்டீர்கள். நாங்கள் ஒருவரையொருவர் விரும்பி, எங்கள் இரண்டு பேர் வீட்டிலும் இருந்த எதிர்ப்பை லட்சியம் பண்ணாமல் கல்யாணம் செய்து கொண்டோம். அதனாலேதான் அவ்வளவு பிரியம். தினம் அவளைக் காலேஜில் நான்தான் ஸ்கூட்டரில் கொண்டு போய் விடுவேன். நான் தான் திருப்பி அழைத்துக் கொண்டு வருவேன். சாயந்தரம் வர்றப்போ ஸ்வீட் வாங்கிவருவேன். அதைக் காலேஜ் ரூமிலேயே உட்கார்ந்து சாப்பிடணும் என்பேன். வீட்டுக்குப் போய்க் குழந்தைகளுடன் ஷேர் பண்ணிக் கொள்ளக் கூட எனக்குத் தாங்காது. பூ வாங்கிட்டு வருவேன். அதை அப்பவே தலையில் வைத்துக் கொள்ளணும் என்பேன். பக்கத்தில் யாரும் கண்ணில் படவில்லையென்றால் நானே வைத்து விடுவேன். ஒவ்வோர் நாளைக்கு அவளுக்குக் காலேஜுக்கு லேட்டாகிவிடும்.

புறப்பட்டுப் போய் விடுவாள். நான் இருந்து தோசையோ இட்டிலியோ தயாரித்துக் காலேஜுக்கு எடுத்துக் கொண்டு போய்த் தருவேன். யாருடைய சிரிப்பையும் கேலியையும் லட்சியம் பண்ண மாட்டேன். அப்படி இருந்தவனைத்தான் இப்படித் தவிக்க விட்டு விட்டுப் போய்விட்டாள்..''அவர் கண்ணைத் துடைத்துக் கொண்டார். ''இத்தனைக்கும் எல்லாரிடமும் அவளுக்கு ரொம்ப இரக்க மனசு. தனக்குக் கெடுதல் செய்கிறவர்களைக் கூடப் பெருந் தன்மையாய் மன்னித்து விடுவாள். உங்களுக்குக் கீதா என்று ஒரு ஸ்டூடண்டைத் தெரியுமோ?''

திடீரென்று அவர் அந்தக் கேள்வியைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''பி.ஏ.முதலாண்டு ஸ்டூடண்ட்?'' என்றேன்.

''ஆமாம்... ஞானத்தை அந்தப் பெண் படாத பாடு படுத்தியிருக்கு... அது அடித்த லூட்டிகளைப் பற்றி ஞானம் என்னிடம் கதை கதையாய் எவ்வளவோ சொல்லியிருக்கிறாள். அப்படியும் பாருங்கள், ஒரு நாள்-எங்க வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு பிளேகிரவுண்ட் இருக்கிறது. பார்த்திருக்கிறீர்களா?''

''இல்லை'' என்றேன்.

''அங்கே உங்கள் காலேஜ் பெண்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நாங்க எங்க வீட்டு மாடியிலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போ வேகமாய் வந்த ஒரு ஃபாஸ்ட் பால் ஒரு பெண்ணின் நெற்றிப் பொட்டிலே அடித்து, அப்படியே சுருண்டு விழுந்துவிட்டாள். அவ்வளவுதான். ஞானம்



பொறுக்க மாட்டாமல் மைதானத்துக்கு ஓடினாள். அந்தப் பெண் மூக்கிலே ரத்தம் வந்திட்டிருந்தது. அதைப் புடவையாலே துடைச்சு, ஐஸ் வாங்கிட்டு வரச் சொல்லி, அடிபட்ட இடத்திலே ஒத்தடம் கொடுத்து மெதுவாய் எழுப்பி எங்க வீட்டுக்கு அழைச்சிட்டு வந்து படுத்திருக்க வைத்தாள். 'உன் வீட்டுக்குச் சொல்லியனுப்பட்டுமா' ன்னு கேட்டாள். 'வேண்டாம், இங்கேயே கொஞ்ச நேரம் படுத்திருக்கிறேன்' என்று சொல்லிவிட்டாள் அந்தப் பெண். அப்புறம் தான் ஞானம் என்கிட்டே மெதுவாய்ச் சொல்கிறாள், அவள் தான் கீதா என்கிற பெண் என்று! எப்படி இருக்கும் எனக்கு, பாருங்கள்!''

நான் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். இன்னும் முக்கியமான ஒன்று வரப் போகிறது என்று எனக்குத் தோன்றியது. அவர் என் முகத்தைப் பார்க்க வில்லை. தன் எண்ணங்களில் தானே மூழ்கியவராகப் பேசிக் கொண்டு போனார்.

''அந்தப் பெண் வந்த போது காலை வேளை இருக்கும். சாயந்தரம் வரை எங்கள் பெட்ரூமிலேயே படுத்திருந்தாள். நன்றாய் நினைவிருக்கிறது. அன்று லீவு. நானும் ஞானமும் குழந்தைகளும் வேறோர் அறையில் சிரித்து விளையாடிக் கும்மாளமடித்துக் கொண்டிருந் தோம். அம்மா மடியில் தான் தலையை வைத்துக் கொண்டு படுப்பேன் என்று பையன் அடம் பிடித்தான். தான் தான் படுப்பேன் என்று மாலு சண்டை போட்டாள். நான், 'அம்மா மடியில் உங்க இரண்டு பேருக்கும்இடம் கிடையாது! எனக்குத்தான்!' என்று சொல்லி படுத்துக் கொண்டு விட்டேன். மூன்று பேரும் என்னமாய் விழுந்து விழுந்து சிரித்தார்கள்! 'அந்தப் பெண் பாவம்

தூங்குகிறாள். சத்தம் போடாதீங்க!' என்று ஞானம் எவ்வளவோ சொல்லியும் கூட நாங்கள் கேட்கவில்லை. சாப்பாட்டின் போது கலாட்டா-கேரம் விளையாட்டில் கலாட்டா-டிரெஸ் பண்ணிக் கொள்வதில் கலாட்டா-என்னவோ தெரியவில்லை, அன்றைய தினம் பார்த்து நாங்கள் ரொம்பக் கொண்டாட்டமாய், ரொம்பக் குதூகலமாய் இருந்தோம். யாருடைய கண் பட்டதோ அவ்வளவு ஆனந்தத்தையும் என் முட்டாள்தனத்தால் நான் கெடுத்துக் கொண்டேன்..''

அவர் சிறிது மௌனமாயிருந்ததால், ''ஏன்.. என்ன பண்ணினீர்கள்?'' என்று தூண்டினேன்.

அவர் குரல் தழுதழுத்தது. ''நீங்க என் தங்கை மாதிரி என்று முதல்லேயே சொன்னேன். அதனால் இதுவரை யாரிடமும் சொல்லாததை உங்களிடம் சொல்றேன்'' என்றார். மீண்டும் மௌனம். பிறகு தொடர்ந்தார். ''நான் புனா பம்பாய்க்கெல்லாம் டூரிஸ்ட் பஸ்ஸில் போயிருந்த சமயம்....''

''நீங்கள், உங்கள் மனைவி, குழந்தைகள் எல்லாருமா?''

''அப்படிப் போவதாகத் தான் முதலில் ஏற்பாடு. நாலு டிக்கெட் கொடுக்கிறதாய்ச் சொல்லியிருந்தார்கள். கடைசி நிமிடத்தில் ஒரே ஒரு டிக்கெட் தான் இருக்கற தென்றார்கள். வேண்டாமென்று சொல்லிவிட்டேன். ஞானம் கேட்கவில்லை. நண்பர்கள் பலபேர் போவதால் நல்ல சந்தர்ப்பம் என்று சொல்லி, நான் ஒருவன் மட்டுமாவது போய்த்தான் ஆக வேண்டுமென்று கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்து விட்டாள். இருபத்



தொரு நாள் டூர். எந்த நல்ல காட்சியைப் பார்த்தாலும், 'ஐயோ, இங்கே ஞானத்தை அழைத்து வரவில்லையே' என்று வருத்தப்படுவேன். டூர் போன சந்தோஷம் கொஞ்சம்கூட இல்லாமல் நான் ஊர் திரும்பினேன். ஆனால் ஞானம் என்னடாவென்றால் என்னைப் பிரிந்த துன்பம் துளியும் இல்லாதிருக்கிற மாதிரி இருந்தது. 'அப்பா! அங்க்கிள் வந்திருந்தாரப்பா!' என்றார்கள் குழந்தைகள். 'யாரது அங்க்கிள்?' என்றேன். ஞானத்தின் மாமா பையனாம்-ரமேஷ் என்று பெயர். ஞானத்துக்கு அவள் வீட்டார் எல்லாருடனும் சண்டையென்றாலும் இவன் ஒருவன் மட்டும் கொஞ்சம் வரத்துப் போக்கு உண்டு. அவன் கல்கத்தாவுக்குப் போய் ரொம்பக் காலமாகிறது. இப்போது வந்திருந்தானாம். முந்தின தினம் வரையில் எங்கள் வீட்டில் தங்கியிருந்தானாம். 'அங்க்கிளோடு தினம் தினம் சினிமா பார்த்தோம் அப்பா' என்று குழந்தைகள் விவரித்தபோது எனக்கு..''

அவர் என்ன சொல்வதற்குச் சங்கடப்படுகிறாரோ அதை ஊகித்துக் கொண்டேன். அவர் அதைச் சொல்லாமலே இருக்கட்டும் என்று எண்ணினேன். ஆனால் ராஜசேகரன் சொல்லலானார்.

''உங்களை என் சகோதரியாக நினைப்பதால் என் வேதனையைச் சொல்கிறேன். இல்லாவிட்டால் ஒரு பெண்ணிடம் பேசக் கூடிய விஷயமேயில்லை. இதன் பிறகு...நான் பாட்டுக்கு ஆபீசுக்குப் போனேன், வந்தேன், சாப்பிட்டேன், தூங்கினேன். என் மனசிலிருந்த மகிழ்ச்சியெல்லாம் போய் விட்டது. ஞானத்திடம் எரிந்து விழுந்தேன். ஏன் இப்படி மாறிவிட்டீர்கள் என்று அவள் கேட்டதற்கு அது உனக்கே தெரியவில்லையா

என்று சிறினேன்... ஒரு வாரம் கழித்து அந்த போன் காலும் வந்தது.''

நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். ராஜசேகரன் தலை குனிந்து கொண்டார். ''பேசியவர்கள் யாரென்று தெரியவில்லை. ஆனால் அது ஒரு பெண்ணின் குரல்...''

எனக்கு இதயம் படபடத்தது.

''எடுத்த எடுப்பிலேயே அந்தப் பெண், 'இவ்வளவு மானம் கெட்டுப் போனவன் விஷத்தைக் குடித்து விட்டுச் சாகேன்!' என்றாள். யார், யார் நீ!'' என்று பதறினேன்.

'நான் யார்னா கேட்கிறே? நீ வெளியூர் போயிருந்தபோது உன் மனைவி எவனோ ஒருவனுடன் அடித்த கூத்தையெல்லாம் கண்ணால் பார்த்தவள்!' என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டாள். ஹலோ ஹலோ என்று பதைத்தேன். பதில் இல்லை. பேசினவள் எங்கள் அக்கம் பக்கத்துக்காரியாகத்தான் இருக்கும். அது ஆபீஸ் போன். ஆபீஸ் நேரம். 'என்ன சார், என்ன விஷயம்?' என்று கையெழுத்து வாங்க வந்த ஒரு குமாஸ்தா கேட்ட பிறகு தான் நான் சுதாரித்துக் கொண்டு 'ஒன்றுமில்லை' என்றேன். இதயமே வெடித்து விடுகிற மாதிரி இருந்தது. அன்று பூரா எப்படித்தான் ஆபீசில் வேலை செய்தேனோ! வீட்டுக்கு வந்த பிறகு கூட உடனே கேட்கவில்லை. குழந்தைகள் தூங்கட்டும் என்று காத்திருந்து, பிறகு தான் சொன்னேன்-என்னை விஷம் சாப்பிட்டுச் செத்துப் போகும்படி ஒரு பெண் சொன்னாள் என்பதை. விஷயத்தைத் தெரிவித்ததும் ஞானம் கதறிவிட்டாள். நான் சொன்னது அபாண்டம் என்று



அவள் அழுததைப் பார்த்தபோது ஏன் அவளைக் கேட்டோம் என்று ஒரு நிமிடம் எனக்கு என்னவோ போலிருந்தது. 'சரி. சரி' என்று அலுப்புடன் சொல்லிவிட்டுப் படுத்தேன். 'நான் ஒரு தப்பும் செய்யாதவள் என்பதை நாளைக்கு நிரூபிக்கிறேன் பாருங்கள்' என்று விம்மிக் கொண்டே சொன்னாள். எப்படி நிரூபிக்கப் போகிறாள் என்று நினைத்துக் கொண்டே தூங்கினேன். மறுநாள் நிரூபித்து விட்டாள்-விஷப் புட்டியைக் கையில் வைத்துக் கொண்டு!''

அவர், முகத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்டார். என்னவென்று அவருக்கு நான் ஆறுதல் கூறட்டும்? அவருக்கு போன் செய்து பேசியவள் யாரோ ஒரு அக்கம் பக்கத்துக்காரி என்று நினைத்திருக்கிறார். அப்படியல்ல. அந்தப் பெண் கீதாதான் என்று சொல்வதா? அதை ஞானாம்பாள் ஊகித்திருக்கிறாள் என்று சொல்வதா? அதனால் தான் கீதாவைக் குற்றம் சாட்டிக் கடிதம் எழுதி வைத்து விட்டுத் தற்கொலை செய்து கொண்டாள் என்று சொல்வதா? இந்தப் புதிய விவரங்களைச் சொல்வதால் அவருடைய துக்கம் எப்படித் தீரப் போகிறது? வேண்டாம், இது எனக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாக இருக்கட்டும்...

''உங்கள் டாட்டருக்கு நினைவு வந்திருக்குங்க. உங்களைக் கூப்பிடுது'' என்று ஒரு நர்ஸ் வந்து சொன்னாள். இருவரும் எழுந்து சென்றோம். மாலு விடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, ராஜசேகரனிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டேன்.

எல்லாம் கனவில் நடந்த மாதிரி இருந்தது. இந்தக் கீதாவுக்கு ஏன் இப்படியொரு குரூரமான கொலைக் குணம்? ஏன் ராஜசேகரனின் இல்லறத்தைக் குட்டிச் சுவரடித்தாள்? ஏன் இப்போது என்னையும் விஜ்ஜுவையும் பிரிப்பதிலே முனைந்திருக்கிறாள்? ஏன்? ஏன்?...

பஸ் போய்க் கொண்டிருந்த சமயம்...

## 11

அடையாறு பாலத்தின் இறக்கம், ஒரு சின்னப் பங்களா. அதனுள் ஒரு கார் நுழைந்து கொண்டிருந்தது. அதன் பின் ஸீட்டில் பருமனான ஒரு பெண்மணி உட்கார்ந்திருப்பது மட்டுமே எனக்குத் தெரிந்தது. அந்தக் காரையும் காரின் நம்பரையும் பார்த்தவுடனே, அது தினம் தினம் கீதாவை அழைத்துப் போவதற்காக வருகிற கார் என்று தெரிந்து கொண்டேன்.

அப்படியானால் இது கீதாவின் வீடு.

அடுத்த ஸ்டாப்பிங்கில் நான் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டேன். கோடம்பாக்கத்துக்கு டிக்கெட் வாங்கியவள் ஏன் இங்கேயே இறங்குகிறாள் என்று தெரியாமல் கண்டக்டர் விழித்தார்.

கீதாவை நேருக்கு நேர் பார்த்து, மனசில் பொங்கிக் கொண்டிருக்கும் ஆத்திரத்தையெல்லாம் அவள் மீது



வீசிவிட வேண்டும் என்று தான் அந்த வீட்டுக்குள் நுழைந்தேன். ஆனால் அவளை என்ன கேட்கப் போகிறோம் என்பதற்கான வார்த்தைகள் உருவாக மறுத்தன. தயங்கிக் கொண்டே உள்ளே நடந்த போது தோட்டக்காரன் ஒருவன் தேங்காய்களுக்கு மட்டை உரித்துக் கொண்டு புல்வெளியில் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். என் நடைதான் தயங்கியதேயொழிய அவன் என்னை எதுவுழ் கேட்கவில்லை. தடுத்து நிறுத்தவுமில்லை. என்னைப் பார்த்து விட்டு, தன் பாட்டுக்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

படியேறினேன். வெளி வராந்தாவில் நாற்காலிகள் போட்டிருந்தன. ஆனால் ஒழுங்காயில்லாமல் கோபித்துக் கொண்ட சம்பந்திகளைப் போல மூலைக் கொன்றாகத் திரும்பியிருந்தன. அதையடுத்து ஒரு அறை இருந்தது. டிராயிங் ரூமாக இருக்க வேண்டும். வெளிப்புறம் யாரேனும் நின்றால் அங்கே நிழலாடும். ஆனால் யாரும் வெளியே வந்து என்னை விசாரிக்க வில்லை. அழைப்பு மணி ஏதேனும் தென்படுகிறதா என்று பார்வையைச் சுழற்றுகையில்-

பலமான வாக்குவாதங்கள் முன்னறையில் கேட்டன.

ஓர் ஆண்குரல்-நடுவயதாக இருக்க வேண்டும்-''ஓ! போயேன்! தாராளமாய்ப் போய்க்கொள் என்கிறேன்! இப்போது கூட ஒரு மாதம் எங்கேயோ ஊர் சுற்றி விட்டுத்தான் வந்திருக்கிறாய். நான் கேட்டேனா என்ன?'' என்றது.

''நீங்க கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயாராயில்லை!'' என்றது ஒரு பெண்குரல்-இதுவும் ஒரு நடுவயது அம்மாளாகத்தான் தோன்றியது. ''முன்னே யெல்லாம் போ போன்னு என்னைத் துரத்திக்கிட்டே இருந்தீங்க. பார்த்தேன், நீங்க துரத்துகிற வரையில் காத்திட்டிருப்பானேன் என்று நானாகவே போக ஆரம்பிச்சிட்டேன். ஆனால் ஒண்ணு, இந்த வீடு மாதிரி நரகம் எங்கேயும் கிடையாது. வெளியே எங்கே போனாலும் நிம்மதியாய்த் தான் இருக்கு!''

''சீ வாயை மூடு!'' என்று ஆண் குரல் உரக்க அதட்டியது. ''நீ ஒழிஞ்சேயானால் இந்த வீடும் சொர்க்கம் மாதிரிதான் இருக்கும்!''

இதற்கு மேல் கேட்டுக் கொண்டு நிற்பது பண்பாடில்லை என்று எண்ணியவளாக, ''கீதா! கீதா!'' என்று குரல் கொடுத்தேன். பிறகு மேலும் சத்தமாக மறுபடி இரண்டு தடவை கூப்பிட்ட பிறகே அந்த அம்மாள் வெளியே வந்தாள்.

''கீதா இருக்கிறாளா?'' என்று கேட்டேன்.

''கீதாவும் இல்லை. மண்ணாங்கட்டியும் இல்லை!'' என்று சீறிவிட்டு அந்த அம்மாள் உள்ளே திரும்பி விட்டாள். ஆனால் தங்கள் சண்டை என் காதில் விழக்கூடாது என்பது போல படீரென்று கதவைச் சாத்திக் கொண்டு போனாள்.

திரும்பினேன். தோட்டக்காரன் இன்னும் தேங்காய் உரித்துக் கொண்டு தான் இருந்தான். ''ஏம்பா, கீதா இல்லை?'' என்று கேட்டேன்.



''நீங்க கீதாவோடு படிக்கிறவங்களா?'' என்று திருப்பிக் கேட்டான்.

ஒரு ஆசிரியைக்கு இதைக் காட்டிலும் புகழ்ச்சி கிடையாது. ஆனால் அதை ரசிக்கிற மனநிலையில் நான் இல்லை. ''கீதா எங்கே?'' என்றேன் மீண்டும்.

''வெளியிலே எங்கேயோ போச்சு'' என்றான்

போகிற போக்கில், ''ஏம்பா, அங்கே பெரிசாய்ச் சண்டை போட்டுக்கிட்டிருக்காங்களே, யார் அது?'' என்றேன்.

''கண்டுக்காதீங்க'' என்று சிரித்தான்.

''விருந்தாளிகளா?'' என்றேன்.

''நீங்க ஒரு பக்கம்!'' என்று தலையில் அடித்துக் கொண்டான். ''அவங்கதான் எசமானரும்-எசமானியும் கீதாவோட அப்பா, அம்மா!''

எனக்கு அதிர்ச்சியாயிருந்தது. ''இன்னிக்கு என்னவோ கோபமாயிருக்கிறாங்க போலிருக்கு.'' என்றேன்.

அவன் மறுபடியும் சிரித்தான். ''இன்னிக்கா! சரிதான் போங்க! அந்தக் கீதாப் பொண்ணு தம்மாத்துண்டு பாப்பாவா இருந்த காலத்திலேருந்து நான் இங்கே வேலை பார்க்கிறேன். தெனம் தெனம் இந்தச் சண்டை தான். ஒண்ணு, ஐயா கோபிச்சுக்கிட்டு வெளியூர் போயிடுவார். இல்லாட்டி அம்மா கோவிச்சு கிட்டுப் போயிடுவாங்க! தூ! குடும்பமா இது!''

''சரி, கீதா வந்தால்...'' என்று பேச்சை மாற்றினேன்.

''அது இப்ப எங்கே வரப் போகுது! எவனோ ஒரு புள்ளாண்டான் வந்தான். ஸ்கூட்டர்லே ஏறிக்கினு அவன் கூடப் போயிட்டுது.''

'புள்ளாண்டான்?' ''வந்தவர் பெயர் என்ன? விஜ்ஜுவா?'' என்றேன்.

''ஆமாம். அப்படித்தான் கூப்பிட்டுது. இப்ப கொஞ்ச நாளா இந்தப் பையன் பின்னாலே சுத்துது! தூ!'' அவன் இரண்டாம் முறை காறித் துப்பினான்.

நான் வெளியே வந்தேன்.

நான் பட்டம் வாங்கியது பொருளாதாரத்தில் தான். மாணவிகளுக்குப் போதிப்பதும் பொருளாதாரம் தான்.

இருந்தாலும் ஏட்டுப் படிப்புப் படிக்காமலே எனக்குக் கொஞ்சம் மனத் தத்துவம் தெரிந்திருந்தது.

கீதாவின் அரக்கத்தனமாக காரியங்களின் பின்னால் ஒரு பரிதாபகரமான காரணம் இருப்பதை என்னால் கண்டு கொள்ள முடிந்தது. சின்ன வயதிலிருந்தே தன் சொந்தக் குடும்பத்தில் சந்தோஷத்தைப் பாத்திராதவள் இவள். அப்பாவும் அம்மாவும் ஒரு நாளாவது சிரித்துப் பேசிப் பார்க்காதவள். தங்களுக்குள்ளேயாகட்டும், குழந்தை கீதாவினிடத்திலாகட்டும் ஒரு கொஞ்சல்? செல்லமாக ஒரு தட்டு? ஒரு கிண்டல்? ஒரு வேடிக்கை, விளையாட்டு, பரிகாசம்? ஊகூம். எதுவும் அவள் கண்டதில்லை.

அதனால் தான் எங்கேயாவது யாராவது இரண்டுபேர் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்றால்



அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அது ஞானாம்பாளாக இருந்தால், ரகசியமாக அவளைப் பற்றித் துப்பறிந்து, கணவனுக்கு மனைவி மீது சந்தேகத்தை எழுப்பி விட்டு, அந்த மகிழ்ச்சி நிறைந்த குடும்பத்தை உடைக்கிறாள். அல்லது நானும் விஜ்ஜுவுமாக இருந்தால் என்னை நாலு மாணவிகளின் முன்னே அவமானப்படுத்தி, என்னிடமிருந்து விஜ்ஜுவைப் பறித்துக் கொண்டு போக ஆசைப்படுகிறாள்.

கீதாவுடன் சண்டை பிடித்து நார் நாராய்க் கிழித்துவிட வேண்டுமென்று நான் அந்தப் பங்களாவுக்குள் நுழைந்தேன். அதை விட்டு வெளியேறும் போதோ, 'எந்தக் கெட்ட மனிதனுக்குள்ளும் அவனை அப்படித் தூண்டி விடுவதற்கான காரணம் ஒன்று இருக்கிறது. அதைப் புரிந்து கொண்டு விட்டால் யாரையும் கெட்டவ னென்று பட்டம் சூட்ட மாட்டோம்' என்ற தத்துவத்தைப் புரிந்து கொண்டவளாக வெளி வந்தேன்.

கீதாவிடம் பரிதாம் ஏற்பட்ட அதே வினாடி, அவளைப் பற்றிய பீதியும் ஏற்பட்டது.

கீதாவை நான் புரிந்து கொண்ட மாதிரி புரிந்து கொள்ள விஜ்ஜுவுக்குச் சந்தர்ப்பம் கிடையாதே!

சும்மா அவள் பின்னால் சுற்றுகிற மாதிரி வேடம் போடுகிறானே தவிர, என் பொருட்டு அவளுக்கு எந்தத் தண்டனை கொடுக்கவும் அவன் தயங்க மாட்டான். நிச்சயம்.

ஞானாம்பாளின் கடிதம் அவன் கையில் இருக்கிறது. அவன் அதைப் போலீசில் கொடுக்கப்

போய், இதோ ஞானாம்பாளைப் பற்றிச் சொல்ல நேரிட்டால் என்ன ஆவது? இறந்து போனவளைப் பற்றி அனாவசியமான ஒரு வதந்தியை கிளப்பிவிடுவாளோ? மனம் நொந்திருக்கும் ராஜசேகரனுக்கு இன்னொரு புது வேதனையா...

மறுபடியும் ஓர் ஆட்டோ ரிக்ஷா அமர்த்திக் கொண்டேன். ''ராயப்பேட்டை-பூர்ணிமா லாட்ஜ்!'' என்றேன்.

ராயப்பேட்டை நெடுஞ்சாலையும் லாயிட்ஸ் ரோடும் சந்திக்கிற இடத்தில் இருந்தது அந்த லாட்ஜ். விஜ்ஜு சொல்லியிருந்தபடி சகிக்க முடியாத லாட்ஜ் தான். விஜ்ஜுவின் பெயரைச் சொன்னதும் மாடியில் உள்ள அறை எண்ணைச் சொன்னார்கள். ஒருவர் மட்டுமே போகக் கூடிய மாடிப்படி. வேகமாக இறங்கிய இரண்டு இளைஞர்கள் என் மீது மோதிக் கொண்டு ஸாரி சொன்னார்கள். மாடியின் திறந்த வெளியில், குறுக்கும் நெடுக்குமான கொடிகளில் உலர்ந்து கொண்டிருக்கும் ஆண்பிள்ளைத் துணிகளிடம் உரசல் வாங்கிக் கொண்டு விஜ்ஜுவின் அறையைக் கண்டுபிடித்தேன்.

ஆனால் விஜ்ஜு அங்கே இல்லை.

அவனுடைய அறைத் தோழன் ஜமுக்காளத்தை விரித்துப் படுத்திருந்தான். ''விஜ்ஜுவா..எங்கே போனானோ தெரியவில்லையே?'' என்றான் சிகரெட்டை மரியாதையுடன் பின்புறம் மறைத்தபடி.

நான் திரும்பினேன்.

எங்கே போயிருப்பான்?



திடீரென்று ஒரு எண்ணம் உதித்தது.

மறுபடியும் அந்த இளைஞனிடம் போய், ''விருகம்பாக்கத்தில் எங்கள் வீடு இருக்கிறது. அதை இன்று ஒருத்தருக்குக் காட்ட வேண்டும். இவரிடம் சாவி இருக்கிறது. அங்கே ஏதாவது மாட்டியிருக்கிறாரா பாருங்கள்'' என்றேன்.

''அவனும் இன்று யாருக்கோ காட்டப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தானே? சாவியைக் கையில் எடுத்துப் போயிருக்கிறான்'' என்றான்.

எனக்குக் கைகாலெல்லாம் நடுங்கியது. என்ன நடக்கும் என்று என்னால் ஊகிக்க முடியவில்லை. ஆனால் பெரியதோர் விபரீதம் நடக்கப் போகிறது என்பதை உணர்ந்து என் உடம்பின் ஒவ்வோர் அங்கமும் பதறியது.

கீழே வந்தேன். கூட்டம் கூட்டமாக ஆட்டோக்களும் டாக்ஸிகளும் நின்றிருந்தன. விமானத்தை அமர்த்திக் கொண்டாவது விருகம்பாக்கத்தை உடனே அடைந்தாக வேண்டும் என்று துடித்தேன்.

''விருகம்பாக்கமா! திரும்பி எம்ப்டியாக வரணும்மா...'' என்று டாக்ஸிக்காரன் தலையைச் சொறிந்தான்.

''அதற்கும் சேர்த்தே தருகிறேன். அவசரம்பா'' என்றேன். ஒரு பெண் இப்படித் தவிக்கிறாளே என்று அவனுக்குப் பரிதாபம் ஏற்பட்டது போலிருக்கிறது. ''ஏறிக்குங்க'' என்று கூறிக் கொடியைத் ;நழைத்தான்.

எங்கள் வீட்டு வாசலில் போய் இறங்காமல் கொஞ்சம் முன்னதாகவே இறங்கிக் கொண்டு டாக்ஸியைத் திருப்பி அனுப்பினேன். முன்பு வந்த போது இரவு நேரம். இது பகல். இருந்தாலும் அப்போது இல்லாத பீதி இப்போது என்னைக் குடைந்தது. தெரு முன்னைவிட வெறிச்சோடியிருந்தது. எதிர் வீட்டு ஜன்னல்—அங்கிருந்து ஒருத்தர் சத்தம் போட்டாரே, அந்தக் கதவு உட்பட எல்லாமே சாத்திக் கிடந்தன.

எங்கள் வீட்டு வாசல்புறக் கேட் திறந்திருந்தது. படிக்கட்டை ஒட்டினாற்போல ஸ்கூட்டர் நிறுத்தப் பட்டிருந்தது. விஜ்ஜுவின் ஸ்கூட்டர்.

கதவு உட்புறம் தாளிப்பட்டிருந்தது. ஆனால் வீட்டுக்குள் எங்கிருந்தோ மந்தமான ஓசைகள் கேட்டுக் கொண்டிருந்தன. யாரோ ஓடுகிற மாதிரியும், யாரோ துரத்துகிற மாதிரியும் சத்தங்கள் கேட்டன. கதவின் இடுக்கில் காதை வைத்துக் கேட்டபோது ஒரு பெண்ணின் குரல் அழுகிற மாதிரி....

''விஜ்ஜு... விஜ்ஜு...'' என்று கதவைத் தட்டினேன்.

உள்ளே சந்தடிகள் நின்றன. ''யார்?'' என்றான் விஜ்ஜு. ஆனால் கதவைத் திறக்கவில்லை.

''நான் தான் சௌமி-சுமித்ரா. கதவைத் திற!'' என்றேன்.

சிறிது மௌனம் நிலவியது. ''வருகிறேன், இரு. கதவைத் தட்ட வேண்டாம். அங்கேயே நில்'' என்றான்.



மறுபடியும் பழைய சந்தடிகள் கேட்டன. அந்தப் பெண்ணின் குரல் கேட்டது. இப்போது இன்னும் துல்லியமாகக் கேட்டது.

''விஜ்ஜு!'' என்று கதவைத் தட்டவிருந்தவள் அவன் பேச்சுக்காக நிறுத்திக் கொண்டேன். ஆனால் உள்ளே தொடர்ந்து ஓசைகள் வந்ததால், பெண்ணின் அழுகை நன்றாகவே கேட்டதால், எனக்குப் பொறுக்க முடியவில்லை.

''விஜ்ஜு! விஜ்ஜு'' என்று உரக்கக் கத்தினேன். கதவைப் பலம் கொண்ட மட்டும் தட்டினேன். உள்ளேயிருந்து கதவைத் திறக்க ஆள் வருகிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல் என் தட்டலின் ஓசையே பெரிதாயிருந்தது.

மேலும் தட்டினேன்.

விஜ்ஜு வந்து கதவைத் திறந்தான். வெளியே வந்து கதவைச் சாத்திக் கொண்டு, அந்தக் கதவின் மீது சாய்ந்தாற் போல் நின்றான். அது, எனக்கு வழியை மறிப்பது போலவும் இருந்தது. உள்ளேயிருப்பவர் வெளியே வராதபடி தடுக்கிற மாதிரியும் இருந்தது.

அவன் முகத்தையும் கோலத்தையும் பார்த்து எனக்கு நடுக்கம் ஏற்பட்டது. அவன் தலை கலைந்திருந்தது. சட்டை கண்டபடி கசங்கியிருந்தது. விழிகள் சிவந்திருந்தன. மார்பிலும் கழுத்திலும் நெற்றியிலும் வெள்ளமாய் வியர்வை பெருகி வழிந்தது.

அவ்வளவுக்கும் நடுவே அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பு இன்னும் பயமூட்டுவதாக இருந்தது. ''சௌமி!

இனி உனக்குக் கீதா என்ற பெண்ணாலே தொல்லை இராது. வகுப்பில் வாலாட்ட மாட்டாள். நாலு மாணவிகளுக்கு எதிரில் உன்னை அவமானப் படுத்த மாட்டாள்...''

''விஜ்ஜு!..'' நான் துடித்தேன். ''கீதா... கீதா உள்ளேயா இருக்கிறாள்? அவளை என்ன பண்ணினாய்?''

''திமிரை நிரந்தரமாக ஒடுக்கப் போகிறேன். நீ பேசாமல் திரும்பிப் போ!'' என்று மீண்டும் சிரித்தான்.

'கொ...கொ..கொலை பண்ணப் போகிறாயா என்ன?'' நான் நடுங்கினேன்.

''பைத்தியம்! ஒரு பெண்ணின் திமிரை ஒடுக்குவதற்குக் கொலை ஒன்றுதான் வழியா என்ன? அடுத்த வழியொன்று இருக்கிறது. கொலையில் அகப்பட்டுக் கொள்கிற மாதிரி இதில் அகப்பட்டுக் கொள்ளத் தேவையில்லை. இது வேறு வகையான கொலை. இந்த வகையில் கொலை செய்யப்படுகிற பெண் வெளியே அதைச் சொல்லவே மாட்டாள்...''

எனக்கு அவன் பேச்சு ஓரளவு புரிந்தது. என் கை கால்கள் உதறல் எடுத்தன. கண்கள் சுழன்றன. நாக்கு குழறிற்று. ''விஜ்ஜு.. அந்தக் கடிதம்... ஞானாம்பாளின் கடிதம்...அதை வைத்து அவளை மிரட்டப் போகிறேன் என்று தானே என்னிடம் சொன்னாய்?''

''சொன்னேன். ஆனால் அவள் அதற்கு மிரள மறுத்துவிட்டாளே! அந்தக் கடிதத்தைப் பற்றி நான் போலீசில் சொன்னால், இறந்து போன ஞானாம்பாளின்



37824
5477374

குடும்ப சமாசாரம் ஒன்று அவளுக்குத் தெரியுமாம். அதை அவள் வெளிப்படுத்துகிற மாதிரி ஆயிருக்கும். அதை நீயே விரும்ப மாட்டாயாம். அப்படி அவள் சொன்ன பிறகு எனக்கு ஒரே ஒரு வழி தான் இருந்தது..''

''என்ன வழி?''

''அவள் என்னை மயக்குகிற மாதிரி நடித்தாள். நான் மயங்குகிற மாதிரி நடித்தேன். சும்மா உன்னை 'டீஸ்' பண்ணுவது அவள் நோக்கம். ஆனால் அதை அத்தோடு நிறுத்துவதில்லை என்று நான் தீர்மானித்தேன். கடைசி எக்ஸ்ட்ரீமுக்குக் கொண்டு போனால் தான் அவளைச் சரியானபடி தண்டித்ததாகும் என்று முடிவு பண்ணினேன். அதற்காகத் தான் இங்கே அழைத்து வந்தேன். சௌமி! நீ திரும்பிப் போ, சொல்கிறேன்!''

''விஜ்ஜு! இப்போது கதவைத் திறக்கப் போகிறாயா இல்லையா?'' என்று கத்தினேன். நான் அவனைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு, உள்ளே நுழைவதற்கும்-

''மேடம்!'' என்று அலறிக் கொண்டே பாய்ந்தோடி வந்து கீதா என்னைக் கட்டிக் கொள்வதற்கும் சரியாயிருந்தது.

''மேடம்... என்னைக் காப்பாத்துங்க... என்னைக் காப்பாத்துங்க...'' என்று விம்மினாள் அவள். ஆடையும் கூந்தலும்... சில நிமிடங்கள் நான் தாமதித்திருந்தால் பெரும் விபரீதம் ஏற்பட்டிருக்கும்!

''சௌமி! நீ விலகிப் போ தயவு பண்ணி! உன்னைக் கண்கலங்க வைக்கிறவர்கள் யாரானாலும்

நான் விடமாட்டேன்! தண்டித்தே தீருவேன். அதற்காக எனக்கு எப்படிப்பட்ட தண்டனை கிடைத்தாலும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வேன்...''

''விஜ்ஜு! இப்போது எனக்குச் சந்தோஷமளிக்கக் கூடிய காரியம் ஒன்றே ஒன்று தான் நீ செய்ய முடியும்...''

''என்ன?''

''பத்து எண்ணுவதற்குள் இந்த இடத்தைக் காலி செய். நான் வீட்டைப் பூட்டிக் கொண்டு கீதாவையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய்க் கொள்கிறேன்!''

''சௌமி!''

''போகிறாயா இல்லையா?''

சில நிமிடங்களில் அவனுடைய ஸ்கூட்டர் கிளம்பும் ஓசை கேட்டது.

கீதா குழந்தை மாதிரி என் தோளிலேயே ஒட்டிக் கொண்டிருந்தாள். அவளை இடது கையால் மெல்லத் தட்டிச் சமாதானப்படுத்தியபடியே வலது கையால் வீட்டைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டேன்.

என் கண்களில் விரலைக் கொடுத்து ஆட்டிய மாணவியா இவள்? என் நிம்மதியைக் கெடுப்பதற்காகவே வந்திருப்பவள் என்று நான் நினைத்திருந்த பெண்ணா இவள்? 'பிளாக் லிஸ்ட்' என்று காலேஜிலிருந்தே ஒழித்து விட வேண்டும் என்று நான் முயற்சி பண்ணிய பொல்லாதவளா இவள்?

இல்லை. இவள் குழந்தை. பச்சைக் குழந்தை. அன்பென்பது என்னவென்று அறியாமலே வளர்ந்த



குழந்தை. அதனால் கைக்குக் கிடைத்த பண்டங்களையெல்லாம் வீசியெறிந்து உடைத்துக் கொண்டிருக்கும் குழந்தை. உடலளவில் மதர்ப்பும் விதிர்ப்பும் பூரிப்பும் ஏற்பட்டிருந்த போதிலும், உள்ளத்தளவில் அரசிலை கட்டிக் கொண்டு வீடு பூரா தவழும் சின்னக் குழந்தை.

''கீதா... கீதா...'' என்று அவள் தலையைக் கோதிவிட்டேன்.

கொஞ்சம் கொஞ்சமாய் அவள் விசும்பல் அடங்கியது.

இதெல்லாம் நடந்து முடிந்து பதினைந்து நாள் ஆகிறது.

விஜ்ஜு வருவான் வருவான் என்று எதிர்பார்த்து வாசலையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஸ்கூட்டர் சத்தம் கேட்கும் போதெல்லாம் தெருவுக்கு வந்து பார்க்கிறேன்.

''ஏண்டி சௌமி, எங்கே அந்தப் பிள்ளையாண்டான் வரவே காணோம்?'' என்று பாட்டி என்னை விசாரிக்கிறாள். வீட்டுக்குக் குடித்தனக்காரர் பார்த்து வைக்க வேண்டுமே என்று அவளுக்குக் கவலை.

நான் பேசாமலிருக்கிறேன்.

''ஊரிலே கிரிலே இல்லையா?'' என்கிறாள்.

''தெரியலியே?'' என்கிறேன்.

தாத்தா என்னைத் தனியே அழைத்துக் கொண்டு போய் ரகசியமாய், ''நான் சொன்னேனே ஒரு சமாசாரம்,

அதனாலே அவனைக் கட் பண்ணிட்டியா?'' என்று கேட்கிறார்.

''அதெல்லாமில்லை'' என்று மழுப்புகிறேன்.

விஜ்ஜு வரக் காணோம்.

அவன் தொட்ட இடங்களைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறேன். அவன் பேசிய பேச்சுக்களைச் சொல்லி பார்த்துக் கொள்கிறேன். பழனியிலும் மதுரையிலும் கொடைக்கானலிலும் அவனோடு சேர்ந்து பார்த்த இடங்களை நினைத்துப் பார்த்துக் கொள்கிறேன்.

விஜ்ஜு ஏன் இன்னும் வரவில்லை?

எனக்கு அவன் உதவி செய்ய விருந்ததை நானே தடுத்து விட்டேன் என்று என்மீது கோபமா? அல்லது என் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டுக் கொண்டு வராமல் இருக்கிறானா?

கோபமானாலும் சரி, வெட்கமானாலும் சரி சீக்கிரம் அவன் வந்துவிடுவான், எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

நிறைந்தது



## இந்நூலாசிரியரின் பிற நூல்கள்

1. அழைப்பிதழ்
2. ராசி
3. கோஸ்ட்
4. க்ரைம்
5. ஹேமா! ஹேமா! ஹேமா!
6. அலை - செருப்பு - அவள்
7. உள்ளேன் அம்மா
8. அபாய நோயாளி
9. ஒளிவதற்கு இடமில்லை
10. ஹவுஸ் ஃபுல்
11. புரட்சித் துறவி
12. தர்மங்கள் சிரிக்கின்றன